மொழியியல்

தொகுதி 5 ஜனவரி - மார்ச் எண் 3

பதிப்பாசிரியர்கள்

ச. அகத்தியலிங்கம்

கோ. சீனிவாசவர்மா

ஜெ. நீதிவாணன்

அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகத்தின்

காலாண்டு இதழ்

1982

T13386

R005A07

அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம்

பதிவு எண் 2 (1977)

அண்ணாமலைநகர்

செயற்குழு

தலைவர்:	**டாக்டர் மு. சண்முகம் பிள்ளை** (மதுரை)
துணைத் தலைவர்:	**டாக்டர் மு. இஸ்ரேல்** (மதுரை)
செயலாளர்:	**டாக்டர் ச. அகத்தியலிங்கம்** (அண்ணாமலைநகர்)
பொருளாளர்:	**டாக்டர் க. முருகையன்** (அண்ணாமலைநகர்)
உறுப்பினர்கள்:	**டாக்டர் சு. இராசாராம்** (மைசூர்)
	திரு சீ. அருணன் (அண்ணாமலைநகர்)
	டாக்டர் டி. எஸ். மாணிக்கம் (ஹைதராபாத்)
	டாக்டர் கே. மீனாட்சி (டெல்லி)

மொழியியல்

அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகத்தின் காலாண்டு இதழ்

கட்டணம்

	உள்நாடு	வெளிநாடு
ஆயுள் கட்டணம்	ரூ 200-00	US $ 50-00
ஆயுள் கட்டணம் (நிறுவனங்களுக்கு)	ரூ 300-00	US $ 75-00
ஆண்டுக் கட்டணம்	ரூ 20-00	US $ 5-00
ஆண்டுக் கட்டணம் (நிறுவனங்களுக்கு)	ரூ 30-00	US $ 7-00
ஆண்டுக் கட்டணம் (மாணவர்களுக்கு)	ரூ 10-00	

மொழியியல் 5.3. (1982)

விரவுப்பெயர்கள் பால் உணர்த்தும் முறை

செ. வை. சண்முகம்,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

1. விரவுத்திணை

தொல்காப்பியர் சொற்கள் உயர்திணை அஃறிணை என்று முதலில் இரண்டு வகைப்படுத்திவிட்டுப் பின்னர் பெயரியலிலும் வினையியலிலும்

உயர்திணைக்குரிமையும் அஃறிணைக் குரிமையும்
ஆயிருதிணைக்கும் ஓரன்ன உரிமையும்
அம்மூவுருபின தோன்றலாறே[1]

160. 3-5;
201. 305;

என்று மூன்று வகைப்படுத்துவார். இங்கு 'ஆயிருதிணைக்கும் ஓரன்ன உரிமைய' என்பதே விரவுத்திணை என்று சுருக்கமாக எல்லோராலும் குறிப்பிடப்படுகின்றது. இரண்டு திணை என்பதே மொழி அமைப்பை ஒட்டிய பாகுபாடு; மூன்று திணை என்பது மொழி அமைப்பை எளிமையாக விளக்குவதற்காக இலக்கண ஆசிரியர்

கொண்ட பாகுபாடு. இப்படி மூன்றாகப் பகுத்ததன் மூலம் இலக்கண வருணனை எப்படி எளிமை அடைந்தது எனக் கேள்வி எழுவது இயல்பே. அதற்குரிய விடை வேறொரு கட்டுரையில் ஆராயப்படும். ஆனால் பெயரியலில் விரவுத்திணை என்று கொண்டதால்தான் விரவுத்திணைப் பெயர்கள் எப்படி உணர்த்தப்படுகின்றன எனக் காட்டுவதற்கு இரண்டு சூத்திரங்கள் கூடுதலாக அமைக்க வேண்டியதாகி விட்டது என்பது இங்கு சுட்டிக்காட்டத் தக்கது. ஆயினும் அவை வேறு சில புதிய கருத்துக்களை வெளிப்படுத்துவதால் சிறப்புரியதாக அமைந்து விட்டதை இந்த கட்டுரை தெளிவுபடுத்தும்.

2. பெயர்ச்சொற்கள் பால் உணர்த்தும் முறை

தொல்காப்பியர் பெயர்ச்சொற்கள் திரியொட்டுக் கூறுகள் மூலம் பாலை உணர்த்தாது அடியொற்றுக் கூறுகள் (selective categories) மூலம் பால் உணர்த்துகின்றன என்பதைத்தான்

> இருதிணைப் பிரிந்த ஐம்பாற் கிளவிக்கும்
> உரியவை உரிய பெயர்வயினான (161)

என்று கூறுகிறார்.[2] பெயர்கள் பால் உணர்த்துவது என்பது பேசுவோனுடைய அறிவை ஒட்டியே அமையும். பேசுவோன் சரியான வினைமுற்றைப் பயன்படுத்திய பிறகு கேட்போன் அந்த வினைமுற்றினால் அதுவும் படர்க்கை வினைமுற்றினால் பால் தெரிந்து கொள்ள முடியும்.

3. விரவுப்பெயர் பால் உணர்த்தும் முறை

3.1. படர்க்கைவினைமுற்றால்

தொல்காப்பியர் இந்த அடிப்படையைக் கொண்டே

> இருதிணைச் சொற்கும் ஓரன்ன உரிமையின்
> திரிபு வேறுபடூஉம் எல்லாப் பெயரும்
> நினையுங் காலைத் தத்தம் மரபின்
> வினையோ டல்லது பால் தெரிபிலவே (172)

என்று 'விரவுத் திணைக்குரிய பெயர்கள் தத்தம் மரபின் வினையோடு அல்லாமல் பாலைக் காட்டாது' என்று பொதுவாகத்தான் குறிப்பிட்டுள்ளார்.

இளம்பூரணர் 'சாத்தன் வந்தான்', சாத்தன் வந்தது, முடவன் வந்தான், முடவன் வந்தது என்ற உதாரணங்களைக் காட்டுவதன் மூலம் படர்க்கை வினைமுற்றே தெளிவான பாலை உணர்த்தும் என்ற கருத்தைப் பெறவைத்து விட்டார். ஆனால் சேனாவரைய ரோ 'தத்தம் மரபின் வினையாவன உயர்திணைக்கும் அஃறிணைக் கும் உரிய பதினோரீற்றுப் படர்க்கைவினை' என்று கூறி படர்க்கை வினை விகுதியே பாலை உணர்த்துகிறது என்பதைத் தெளிவுபடுத்தி விட்டார். மேலும் அந்த விகுதிகள் என்னென்ன என்பதை

இருதிணை மருங்கின் ஐம்பால் அறிய
ஈற்றில்நின்று இசைக்கும் பதினோர் எழுத்தும்
தோற்றந் தாமே வினையொடு வருமே (10)

என்ற சூத்திரத்தை நினைவு படுத்தவே 'பதினோர் ஈற்று படர்க்கை வினை' என்று குறிப்பிட்டார். இதன் மூலம் சேனாவரையர் உரை யாசிரியர் கடமையாகிய மூல ஆசிரியர் கருத்தை விளக்குதல் அல்லது தெளிவுபடுத்தல் என்பதில் வெற்றிபெற்று உள்ளார் என்று நாம் கூறலாம். இதனால்தான் நச்சினார்க்கினியரும் தெய்வச்சிலையாரும் கூட இப்படிப்பட்ட விளக்கத்தைத் தரவில்லை போலும்.

சாத்தன் என்பது எதைக் குறிக்கிறது என்பதை பேசுவோன் உணர்ந்தால்தான் அதற்குரிய சரியான படர்க்கை வினை விகுதி யைப் பயன்படுத்த முடியும். எனவே பேசுவோனுக்கு விரவுப் பெய ராயினும் அதன் பால் பற்றிய அறிவில் ஐயமிருக்க இடமில்லை. கேட்போன் சாத்தன் என்ற சொல் உயர்திணையிலும் அஃறிணை யிலும் வரும் என்பதால் என்ன பால் என்பதை உணர்ந்து கொள்ள முடியாது. எனவே பேசுவோன் பயன்படுத்தும் வினைமுற்று விகுதியி லிருந்து விரவுப் பெயரின் பாலைத் தெரிந்து கொள்கிறான். எனவே இந்தச் சூத்திரம் கேட்போன் நோக்கில் எழுதப்பட்டது, 'இருதிணை பிரிந்த ஐம்பால் கிளவிக்கும்' (161) என்ற சூத்திரம் பேசுவோன் நோக்கில் இருந்து எழுதப்பட்டது என்று உணர்ந்து கொள்ள வேண்டும்.

3. 1. 1. திணையும் பாலும்

சேனாவரையர் இந்தச் சூத்திரத்தின் முதல் வரியில் 'இருதிணைச் சொற்கும் ஓரன்ன உரிமையின்' என்று திணைப்பற்றி பேசிவிட்டு இறுதியில் 'பால் தெரிபிலவே' என்று கூறுவது முரண் என்று கருதுகிறார். அதனால் 'ஈண்டு பால் எனப்பட்டது திணையேயாம்' என்று விளக்கம் கூறியதோடு பொழிப்புரையிலும் 'பால் தெரிபிலவே' என்பதற்குத் 'திணை விளங்க நில்லா' என்றே எழுதி விட்டார். ஆயினும் உதாரணம் தரும்போது 'தத்தம் மரபின் வினையோடு பால் விளங்குமாறு' என்ற முன்னுரையோடு சாத்தன் வந்தான், சாத்தன் வந்தது போன்ற உதாரணங்களைத் தந்துள்ளார். ஆனாலும் உண்மையில் இங்கு முரண் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஏனெனில் பால் என்பது திணையின் உட்பிரிவு. எனவே பால் தெரிந்தால் திணையைத் தெரிந்து கொள்ள முடியும்; ஆனால் திணை தெரிந்தால் பால் தெரிந்துகொள்வ முடியாது. எனவே பால் தெரிந்து கொள்ளலாம் என்றால் திணையும் தெரிந்து கொள்ளலாம் என்பது அடங்கும். அப்படியானால் சூத்திரத்தில் முரண் இல்லை.

நச்சினார்க்கினியர் சேனாவரையரைப்போல 'பால் தெரிபிலவே' என்பதற்குத் 'திணை விளங்க நில்லா' என்று பொழிப்புரை எழுதி விட்டு வேறு விளக்கம் தராமல் போய்விட்டார். தெய்வச் சிலையாரோ 'பால் விளங்குதல்' என்றே பொழிப்புரை எழுதி 'பால் எனவே திணையும் அடங்கும்' என்று சரியான விளக்கத்தைத் தந்துள்ளார்.

இளம்பூரணர் இதை முரணாகக் கருதவே இல்லை. அதனால் அதைப் பற்றிப் பேசவே இல்லை. சேனாவரையர் கண்ணுக்கே அது பட்டிருக்கிறது. எனவே அதற்கு விளக்கம் தரமுற்பட்டு மூல ஆசிரியர் கையாண்ட சொல்லுக்குப் புதிய பொருளே (பால் என்பதற்கு திணை என்ற பொருள்) கற்பித்து விட்டார். சொற் பாகுபாடு படிநிலை அமைப்பு உடையது என்றும் திணை மேல் கோட்டிலும் பால் கீழ்க்கோட்டிலும் இருப்பதால் கீழ்க்கோட்டிலுள்ள பாகுபாட்டைக் குறிப்பிட்டால்



மேல் கோட்டிலுள்ள பாகுபாடு அடங்கும் என்பதையும் உணரவில்லை. அதாவது ஆண்பால் என்றால் உயர்திணை ஒருமை என்று விளங்கிக் கொள்ள முடியும். ஆனால் வெறும் உயர்திணை என்றால் பாலைத் தெரிந்து கொள்ள முடியாது. தெய்வச் சிலையார்[3] இதை உணர்ந்த தால்தான் நாம் பேசுவது போல மேல்கோடு, கீழ்க்கோடு எனப் பேசாவிட்டாலும் 'பால் எனவே திணை அடங்கும்' என்று கூறிய தன் மூலம் சூத்திரத்தில் முரண் இல்லை என்பதைத் தெளிவு படுத்தி விட்டார்.

3. 2. எண்ணுப் பெயரால்

தத்தம் மரபின் பால் விளங்குதல் என்றபோது சேனாவரை யருக்கு சாத்தன் ஒருவன், சாத்தன் ஒன்று என்பன போன்ற தொடர்கள் நினைவுக்கு வந்திருக்கும். அப்படியானால் விரவுப் பெய ரைத் தொடர்ந்து ஒன்று என்ற எண்ணுப் பெயரின் அடியாகப் பிறந்த பால் காட்டும் பெயர்கள் வரும் போதும் விரவுப் பெயரின் பாலைத் தெரிந்து கொள்ள முடிகிறதே என்று உணர்ந்து

> 'சாத்தன் ஒருவன், சாத்தன் ஒன்று எனத் தத்தம் மரபின் பெயரோடு வந்து பால் விளக்குதலும் கொள்க'

என்று கூறி விட்டார். ஆயினும் உரையாசிரியர் கடமையை மீறி நூலாசிரியராக ஆவது மூல ஆசிரியர்க்கு இழுக்கு வருமோ என்று கருதி 'தத்தம் மரபின் வினையோடு அல்லது பால் தெரிபிலவே' என்பது சிறப்புடையது; தத்தம் மரபின் பெயரோடு பால் விளக்குதல் சிறப்பில்லாதது. ஆகவே சிறப்பில்லாத ஒன்றைச் சொல்லாததால் தவறில்லை என்பது போல்

'சிறப்புடைப் பொருளைத் தான் இனிது கிளத்தல் என்பதனால் தத்தம் மரபின் வினையோடு அல்லது பால் தெரிபில என்றாரேனும் தத்தம் மரபின் பெயரோடு வந்து பால் விளக்குதலும் கொள்க'

என்று கூறி மூல ஆசிரியர் பின்னதைக் கூறாததற்குச் சமாதானம் செய்து விட்டார். ஆனால் தமிழ்மொழி வழக்கில் சில தொடர்கள் வழக்கு சிறந்தது. வேறு சில தாழ்ந்தது என்று கூற முடியாது அப்படி சாத்தன் வந்தார்; சாத்தன் வந்தது போன்ற வாக்கியங்கள் உயர்ந்ததாகவும் சாத்தன் ஒருவன், சாத்தன் ஒன்று போன்றவை தாழ்வாகவும் கருதுவதில்லை. எனவே அப்படிப்பட்ட பாகுபாட்டைப் புகுத்துவது மூல ஆசிரியர்க்கு இழுக்கு வரக்கூடாது என்பதற்காகச் சேனாவரையர் ஏற்படுத்திக் கொண்ட ஒன்று என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். மொழியின் அமைப்பு முழுமையும் பழைய இலக்கண ஆசிரியர்கள் சொல்லி முடித்து விட்டார்கள். அப்படிச் சொல்லாதது ஏதாவது நமக்குத் தோன்றினால் அது சிறப்பில்லாததாகவோ, சிறுபான்மை வழக்காகவோ இருக்க வேண்டும் என்பது இடைக்கால உரையாசிரியர்களின் மனப்பான்மையாக இருந்தது. ஆனால் அது உண்மையில்லை. ஒரு ஆசிரியரே மொழி அமைப்பில் எல்லாக் கூறுகளையும் கண்டு சொல்வது என்பது இயலாத காரியம். எனவே நமக்குத் தோன்றுகிற அமைப்பு பற்றிய உண்மை மூல ஆசிரியர் கூறிய அமைப்பு பற்றிய உண்மை போல ஒத்த சிறப்புடையதுதான். ஏனெனில் இலக்கண ஆராய்ச்சி ஆனாலும், பிற துறை ஆராய்ச்சியானாலும் ஒவ்வொரு காலத்து அறிஞர்களும் புதிய புதிய உண்மைகளைக் கண்டு பிடித்துக் கொண்டே இருப்பது உலக இயல்பு. நாம் ஒரு புது அமைப்போ உண்மையோ கண்டு பிடிப்பதால் முன்னோர்க்கு இழுக்கு வந்துவிடாது. எனவே இடைக்கால உரைகளைப் படிக்கும் போது உரையாசிரியர்கள் கொடுக்கும் குறிப்புகளின் உள்நோக்கத்தைப் புரிந்து கொண்டு அவர்கள் கூறும் சிறப்பில்லாதது : சிறுபான்மை போன்றவற்றை உண்மையாகக் கொள்ளவேண்டியதில்லை.

நச்சினார்க்கினியார் 'நினையுங்காலை என்ற சூத்திரத்தில் வரும் தொடராலே - அல்லது நினையுங்காலை' என்று விதந்து எடுத்துச் சொல்லியதாலே 'பெயரோடு வந்து பால் விளக்குதலும்

கொள்க' என்று வெறும் உண்மையை மட்டும் சொல்லிச் சென்று விட்டார். அதாவது மூல ஆசிரியர் பெருமைக்குக் குறைவு வரும் என்று அவர் கருதவில்லை என்று நாம் கொள்ளலாம்.[5]

இந்த இடத்தில் நச்சினார்க்கினியர் இன்னொரு உண்மையும் சுட்டிக்காட்டுகிறார்.

இன்னும் இதனானே முற்கூறிய அஃறிணை இயற் பெயர் களும் ஆ ஒன்று : ஆ பல எனப் பெயரால் அறியப்படுதலும் கொள்க என்பார் அவர். ஆ என்பது விரவுப் பெயரானாலும் அஃறிணைக்குள் ஒன்றன் பாலுக்கும் பலவின் பாலுக்கும் பொது வானது. அதாவது ஒரு திணைக்குள் இரண்டு பாலுக்குப் பொது. ஆனால் இங்கு பேசுவது விரவுத்திணை அதாவது இரண்டு திணைக் கும் பொதுவானது. மேலும் அஃறிணை இயற் பெயர் பற்றி முன்னரே (169) தொல்காப்பியர் பேசியுள்ளார். எனவே அங்கு இதைப் பற்றிப் பேசுவதுதான் பொருத்தமாக இருக்கும்.

கல்லாடர் நச்சினார்க்கினியரைப் பின்பற்றி யுள்ளார். தெய்வச் சிலையார் விரவுப் பெயர் வினையால் மட்டுமே பால் விளங்கும் என்ற தொல்காப்பியர் கருத்தை மட்டுமே ஒத்துக் கொண்டு சாத்தன் வந் தான் சாத்தன் வந்தது எப்படி பால் விளங்குகிறது என்பதையே நன்றாகவே - தெளிவாகவே விளக்கியுள்ளார். ஏனைய உரையாசிரி யர்கள் அனைவரும் உதாரணத்தைக் கொடுத்து அது எப்படி பால் விளக்குகிறது என்று குறிப்பிடவே இல்லை. மாறாக தெய்வச் சிலையார்

'சாத்தன் என்னும் பெயர் உயர்திணை ஆண்பாற்கும் அஃறிணை ஆண்பாற்கும் இடு குறியாகி வழங்குதலின் அது வந்தான் என்பத னோடு தொடர்பு பட்டுழி உயர்திணை எனவும் வந்தது என்பத னோடு தொடர்பு பட்டுழி அஃறிணை எனவும் நின்றவாறு கண்டு கொள்க'

என்னும் போது விரவுத்திணை பால் உணர்த்துவது நல்லமுறை யில் தெளிவுபடுத்தப் பட்டிருப்பதை உணரலாம். ஆனால் தெய்வச் சிலையார் ஒன்று என்ற எண்ணுப் பெயரடியாகப் பால்காட்டும்

பெயர்களும் பால் விளக்குதலைப் பற்றி ஏன் குறிப்பிடவில்லை என்ற கேள்வி நமக்கு எழுகிறது. இதனால் தெய்வச்சிலையார் தொல் காப்பியர் குறிப்பிடாத மொழி அமைப்பு பற்றிய புதிய செய்திகளை ஏற்றுக்கொள்ளாதவர் என்று நாம் கொள்ள முடியாது. ஏனெனில் அடுத்த சூத்திரத்தில் சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் தொல் காப்பியர் குறிப்பிடாத இன்னொரு செய்தியும் தமிழ்மொழி அமைப் பில் உண்டே என்று கேள்வி கேட்டு சேனாவரையர் ஒரோவழி' சிறுபான்மை என்று காட்டி மறுத்துவிட்டார் புதிய உதாரணங்களாகக் கொடுக்கப்பட்டவை இரண்டும் இரண்டு வேறு காரணங்களால் பொருந்தாது என்று காட்டி 'அதனால் கொள்ளார்' என்று நச்சினார்க் கினியர் ஏற்றுக்கொள்ளவில்லை; அப்படியிருந்தும் தெய்வச்சிலையார் மட்டும் தொல்காப்பியத்தில் கூறப்படாத அந்தப் புதிய செய்தியை ஒத்துக் கொண்டுள்ளார். எனவே இங்கு பெயர்ச் சொல்லாலும் பால் உணர்த்துவதைத் தெய்வச்சிலையார் ஏன் புறக்கணித்தார் என் பதை ஆராயவேண்டும் சாத்தன் ஒருவன், சாத்தான் ஒன்று போன்ற தொடர்கள் தமிழ்மொழியில் கிடையாது என்றோ அவை தவறு என்றோ யாரும் வாதிடமுடியாது. எனவே தெய்வச்சிலையார் முழு உரையையும் ஆராய்கிறவர்கள் இதை ஒத்துக் கொள்ளாததற்கு தக்க காரணம் கண்டு பிடிக்க முயலவேண்டும். நாம் பொதுவான ஒரு கார ணத்தை வேண்டுமானால் இங்கு குறிப்பிடலாம். தன்னைப் போன்ற இன்னொருவர் எடுத்துக் காட்டிய உண்மைகள் எல்லாவற்றையும் ஒத்துக் கொள்ளாது புறக்கணிக்கும் மனப்பான்மை காணப்படுகிறதே! அதன் பிரதிபலிப்பா? என்று எண்ணிப் பார்க்கலாம். பொதுவாக தமிழ் இலக்கண உலகில் இது போல பல உதாரணங்கள் உண்டு. எப் படியாயினும் இது ஆராய்ச்சியின் வளர்ச்சியை ஓரளவு தடுத்து நிறுத்திவைக்கும் பாங்கு உடையது. ஏனெனில் ஒரு சிலருக்குத் தெய்வச் சிலையார் அந்த உண்மையை ஏற்றுக்கொள்ளவில்லையே அதனால் உண்மையில்லாமல் இருக்குமோ என்ற சந்தேக மனப் பான்மையை ஏற்படுத்தித் தயக்கத்தை ஏற்படுத்திவிடும். சாத்தன் ஒருவன், சாத்தன் ஒன்று என்ற தொடர்கள் சரியானவையா என்று ஒருவர் சந்தேகிக்கலாம். ஆனால் அவைகளைச் சந்தேகிக்கவில்லை என்றால் அதிலிருந்து பெறப்படும் உண்மையைப் புறக்கணிக்கக் கூடாது. அப்படிப் புறக்கணித்த தெய்வச்சிலையார் தன்னை அறிந்தோ அறியாமலோ வளர்ச்சிக்குத் தடையாக இருந்துவிட்டார்

என்பதை உணர்ந்து இன்னும் புதிய செய்திகளைக் காண முயல வேண்டும்.

'வினை' என்பதைப் படர்க்கை வினை என்று கொண்டு எல்லா உரையாசிரியர்களும் உதாரணம் தந்துள்ளார்கள். ஆனால் இங்கு இன்னும் ஒரு பிரச்சனை இருப்பதை அவர்கள் எடுத்துக் காட்டவே இல்லை.

விரவுப் பெயர்கள் என்பது படர்க்கைப் பெயர்களை மட்டும் கொண்டது அல்ல. ஏனெனில்

... ...
எல்லாம் நீயிர் நீயெனக் கிளந்து
அன்னவை தோன்றி அவற்றொடும் கொளலே
(174. 3, 5)

என்று விரவுப் பெயர்களை விரித்துக் கூறும் போது தன்மைப் பெயரையும் (எல்லாம்) முன்னிலைப் பெயரையும் (நீ, நீயிர்) தொல் காப்பியர் சேர்த்துக் கூறியுள்ளார். இந்த பெயர்கள் வினை முற்று எடுத்து வந்தால் பால் காட்டாது.

எல்லாம் வந்தேம் / வந்தோம்
நீ வந்தாய்
நீயிர் வந்திர்

இங்கு வினை முற்று வந்தாலும் பால் உணர்த்தாமல் இடமும் (தன்மை, முன்னிலை), எண்ணும் (ஒருமை, பன்மை) உணர்த்துகின் றன. ஆனால் பெயர் அதுவும் தெளிவாகப் பாலைக் காட்டும் பெயர்ச் சொல் - ஏற்று வந்தால் மட்டுமே

எல்லாம்	மாணவரேம்
நீ	மாணவன் / மாணவி
நீயிர்	மாணவர்

போன்றவை பால் உணர்த்துவதாகக் கொள்ளலாம். ஆனால் இடப் பெயர்கள் பால் உணர்த்துவது எல்லா மொழிக்கும் பொதுவானது. தன்மையும் முன்னிலையும் இடத்தையும் (Person) எண்ணையும்

மட்டுமே காட்டுவன; பால் காட்டுவதில்லை. சில மொழிகள் தன்மையிலும் முன்னிலையிலும் பால் காட்டும். ஹாட்டன்டோட் என்ற மொழியில் தன்மைப் பெயர் பால் வேற்றுமை உடையது.

திரெ 'நான் (ஆண்)'
த 'நான் (பெண்)'
(அகத்தியலிங்கம், 1979 : 83)

அதாவது ஒவ்வொரு பாலுக்கும் ஒவ்வொரு வடிவத்தைக் கொண்டிருக்கிறது. தமிழ் மொழி அமைப்பு அப்படி பால் காட்டுவதாய் அமையவில்லை. எனவே பால் பாகுபாடு பற்றிப் பேசும் போது தன்மை முன்னிலைப் பெயர்களைச் சேர்க்க வேண்டியதில்லை. தொல்காப்பியர் பால் காட்டாத அவைகளை விரவுப் பெயர்களாகக் கருதியது அவ்வளவு சிறப்புடையது அல்ல. அவற்றை இடப்பெயர்கள் (Personal Pronouns) என்று தனியே பாகுபாடு செய்திருக்க வேண்டும். அப்படிச் செய்யாமல் இடப்பெயர்களையும் பால் காட்டும் பிற பெயர்களோடு சேர்த்ததால் விரவுத்திணையின் இலக்கணமும் உயர்திணையின் இலக்கணமும் கூட மாற்ற வேண்டியுள்ளது. இது பற்றி இன்னொரு கட்டுரையில் விரிவாக ஆராயப்படும்.

3. 3. செய்யும் என்னும் வாய்பாட்டால் உயர்திணைப் பால்

தொல்காப்பியர் ஒவ்வொரு பாலுக்கும் தனித்தனி விகுதி உடைய படர்க்கை வினை முற்றால் மட்டுமல்லாமல் ஒன்றுக்கு மேற்பட்ட பாலுக்குரிய விகுதி ஏற்று வரும் போது வினையாலும் அதாவது விரவுவினையாலும் பால் தெரிந்து கொள்ளலாம் என்பதை அடுத்த சூத்திரத்தில் விளக்குகிறார்.

நிகழூஉ நின்ற பால்வரைக் கிளவியின்
உயர்திணை ஒருமை தோன்றலும் உரித்தே
அன்னமரபின் வினை வயினான. (173)

என்பதே அச்சூத்திரம்.

3. 2. 1. சூத்திரத்தின் தனிச் சிறப்பு

சேனாவரையர் மட்டுமே போன சூத்திரத்துக்கும் இதற்கும் வேறுபாட்டை விளக்குகிறார்.

'மேல் விரவுப் பெயர் தத்த மரபின் வினையோடல்லது பால் தெரிபில வென்றார்; இனி அவற்றானன்றி பொதுவினையானும் பால் தெரிய நிற்கும் என்பது உணர்த்தியவாறு'

என்று உரை விளக்கத்துக்கு இடையே குறிப்பிட்டுள்ளார். நச்சினார்க்கினியர் 'அவ்விரவுப் பெயர் விரவு வினையானும் திணை அறியப்படும் என்கிறது' என இந்தச் சூத்திரப் பொருளைப் பொதுமைப் படுத்திக் கூறினார். தெய்வச் சிலையார் 'மேலதற்கு ஓர் புறனடை உணர்த்துதல் நுதலிற்று' என்று கூறியதன் மூலம் மேலே கூறிய கருத்துக்கு மாறுபட்டது என்பதை மட்டுமே புலப்படுத்தியுள்ளார். கல்லாடர், நச்சினார்க்கினியர் கூறும் பொதுக் கருத்தோடு 'எய்திய தன் மேற் சிறப்பு விதி வகுத்தல் நுதலிற்று' என்றும் பொதுமுறையும் விளக்கி மேல் சூத்திரத்தோடு கருத்து தொடர்பு உடையதை விளக்கியுள்ளார்.

3. 3. 2. பாடவேறுபாடு

இங்கு இந்தச் சூத்திரம் பற்றிய இன்னொரு முக்கிய செய்தியும் குறிப்பிடவேண்டும். அதாவது இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் தான் 'பால்வரை கிளவி' என்று பாடம் கொண்டுள்ளார்கள். ஏனையோர் 'பலர் வரை கிளவி' என்ற பாடமே கொண்டுள்ளார்கள். இவர்களுக்கு எப்படி மாறுபட்ட ஏடுகள் கிடைத்தன? இளம்பூரணருக்கு கிடைக்காத ஏடுகள் இவர்களுக்கு கிடைத்து வேறு பாடம் கொண்டார்களா? அல்லது பொருள் சிறக்கும் என்றோ, பொருள் பொருத்தம் உடையது என்றோ இவர்களே மாற்றிக் கொண்டார்களா? என்ற கேள்வி எழலாம். ஆனால் இதற்கு சரியான விடை கிடைக்க வாய்ப்பில்லை.

எப்படியானாலும் பாடவேறுபாடு பொருள் வேறுபாட்டை ஏற்படுத்த வில்லை. எல்லா உரையாசிரியர்களுமே இந்தச் சூத்திரத்தில் செய்யும் என்னும் வாய்பாடே பேசுவதாகக் கொண்டுள்ளார்கள். எனவே விளக்கம் தருவதிலும் புதிய உண்மைகள் காட்டுவதிலுமே உரைகள் மாறுபடுகின்றன.

3.2.3. செய்யும் என்னும் வாய்பாட்டால் உயர்திணை அறிதல்

இளம்பூரணர் 'செய்யும் என்னும் வாய்பாட்டால் உயர்திணை ஒருமைப்பால் தோன்றுதலும் உரித்து, அவ்வொருமை தோன்றுவதற்

கேற்ற வினையிடத்து' என்ற பொழிப்புரை எழுதி 'சாத்தன் யாழ் எழூஉம், சாத்தி சாந்து அரைக்கும்' என்ற வழி யாழ் எழுதலும் சாந்து அரைத்தலும் அஃறிணைக்கு ஏலாது ஒருவற்கும் (ஒருவனுக்கும்) ஒருத்திக்கும் ஏற்றலின் உயர்திணை ஒருமைப்பால் விளங்கிய வாறு கண்டு கொள்க, என்று விளக்கியுள்ளார். இங்கு வினையை மட்டும் குறிப்பிடாது அது ஏற்றுவரும் பெயரையும் சேர்த்தே பேசுவது பெயரும் வினையும் சேர்ந்தே பால் உணர்த்துகிறதோ என்ற ஐயம் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது.

சேனாவரையர் 'எழுதலும் அரைத்தலும் அஃறிணைக்கு என்றும் இயைபு இல்லாதவாறு போல' என்று இந்த சூத்திர உரையிலே வேறொரு சந்தர்ப்பத்தில் குறிப்பிடுவதால் வினை மட்டுமே பால் உணர்த்துவது என்ற கருத்து வலியுறுகிறது.

3.3.3. பால் உணர்த்தும் வினைகள்

நடத்தல், கிடத்தல் முதலாகிய பிறதொழில் பற்றிவரும் பலர் வரை கிளவியான் உயர்திணை ஒருமை தோன்றாமையின் 'அன்னமரபின் வினை வயினான' என்று சேனாவரையர் கூறும் போது கருத்து அளவில் வினையில் இரண்டுவகை 1) அரைத்தல், எழுப்புதல் போன்ற பால் காட்டக் கூடிய வினை 2) பார்த்தல், நடத்தல், தின்னல் போன்றவை பால் காட்டாத பொது வினை என்ற இரண்டு வகை இருப்பது புலப்படுத்தப்பட்டது. மேலும் சூத்திரத்தில் இருக்கும் கடைசி வரிக்கும் சரியான விளக்கம் கொடுக்கப்பட்டு விட்டது. எனவே இங்கு உரையாசிரியர் என்ற முறையில் சேனாவரையர் சிறந்து நிற்கிறார். இந்த விளக்கம் வேறு யாரும் தரவில்லை.

பொதுவாக பெயர்ச் சொற்கள் வினையைக் கொண்டு முடியும்; வினைகள் பெயரை ஏற்று வரும் என்று கூறினாலும் இரண்டிலும் அமைப்பு நிலையில் இல்லாமல் பொருள் நிலையில் கட்டுப்பாடுகள் உண்டு. சிரி, படி போன்ற வினைகள் மனிதன் அல்லது உயர்திணை ஏற்றுவரும். ஈன் (ஈனுதல்) உயிருள்ள பொருளுக்கே பொருந்தும். மேய் என்ற வினை உயிருள்ள அஃறிணைப் பெயரை ஏற்கும். இப்படிப்பட்ட கட்டுப்பாட்டை உணர்ந்த தொல்காப்பியர் வினைகள் பெயரைத் தேர்ந்தெடுப்பதில் கட்டுப்பாடு இருக்கிறது என்று கூறாமல் அந்தக் கட்டுப்பாட்டினால் வினையால் பாலை உணர்ந்து

கொள்ள முடியும் என்ற மொழி அமைப்பில் இருக்கும் ஒரு சிறப்புப் பண்பைச் சுட்டிக் காட்டிவிட்டார். அதாவது இலக்கண ஆராய்ச்சி யில் வெறும் மொழியமைப்பை மட்டும் விரித்துக் கூறாமல் பொருளை நோக்கி - சொற்களில் பயன்பாட்டை நோக்கி அதில் உள்ள கட்டுப் பாட்டைக் கொண்டு மொழி அமைப்பு பற்றிய ஒரு உண்மையைத் தெரிந்து கொள்ளலாம் என்று குறிப்பிட்ட திறன் பாராட்டுவதற்குரி யது. மாற்றிலக்கண மொழியியலாளர் தேர்வுக்கட்டுப்பாடு (Selectional restrictions) என்று சொற்களின் தொடர்நிலை உறவு (Syntactic relation) பற்றிப் பேசும் போது விளக்குவார்கள். மொழி வருணனையில் பொருளியலை (Semantics) சேர்த்துக் கொள்ளலாம் என்று உணரத் தொடங்கியதும்தான் பொருளின் சிறப்புக் கூறுகள் (Distinctive features) சொற்கள் வருமிடத்தை நிர்ணயிக்க உதவு வதைக் கண்டு கொண்டார்கள். எனவே பொதுவாக தேர்வுக் கட்டுப்பாடு என்பது எந்த வினைச் சொல் எந்த பெயரோடு சேரும் என்று விளக்குவதாகும். அப்படிச் சேரும் போது பெயர்ச் சொல்லும் வினைச் சொல்லும் சிறப்புக் கூறுகளில் ஒத்திருக்க வேண்டும். அப்படிச் சொற்களின் சிறப்புக் கூறுகளை ஒத்திருக்கும்படி செய்யும் விதிகளுக்கே சிறப்பான தேர்வு கட்டுப்பாடு[7] என்று மொழியியலில் அழைக்கப்படுகிறது.

தமிழில் சிறப்புக்கூறு ஆய்வு நடைபெறவே இல்லை. ஆயி னும் சொற்களைப் பால்பாகுபாடு செய்து பெயருக்கும் வினைக்கும் தொடர்பு இருப்பதை உணர்ந்து விளக்கும்போது வினைச் சொல்லே எழுவாயின் பாலைக் காட்டும் என்று கூறியது தேர்வுக்கட்டுப்பாடு என்பதை உள்ளூற உணர்ந்ததைப் புலப்படுத்துகிறது. அந்த முறை யில் இந்த சூத்திரம் சிறப்புடையதாக அமைந்துவிட்டது.

3. 3, 4. பிற விரவு வினைகளால் உயர்திணை அறிதல்

செய்யும் என்ற வினைமுற்றே பால் காட்டுகிறது என்று சொன் னாலும் உண்மையில் பாலை உணர்த்துவது வினைப்பகுதி அல்லது அந்த தொழில் மட்டுமே. எனவே அந்த வினைகள் எந்த வினை விகுதிகளை ஏற்று வந்தாலும் பால் உணர்த்தும்; அல்லது செய்யும் என்ற வாய்பாடு போல பிற விரவு வினைக்குரிய ஈறுகளை ஏற்று வந்தாலும் பால் உணர்த்த முடியும். அப்படியானால் செய்யும் என்

னும் வாய்பாடு மட்டும் குறிப்பிட்டது பொருந்தாதல்லவா என்ற கேள்வி தோன்றுகிறது. சேனாவரையரே அக்கேள்வியை எழுப்பிப் பதிலும் கூறியுள்ளார்.

'யாழ் எழூஉதலும் சாந்து அரைத்தலும் முதலாகிய தொழில் வேறுபாடு பற்றி வரும் முன்னிலை வினையானும் வியங்கோளானும் இருவகை எச்சத்தாலும் எல்லாம் உயர்திணைப் பால் தோன்றுதலால் 'பலர்வரை கிளவியின் என வரைந்து கூறுதல் பொருந்தாது எனின்:- அற்றன்று முன்னஞ் சேர்த்தி முறையின் உணர்தல்' சொல் - 193 என முன்னிலைப் பெயராற் பாலுணருமாறு முன்னருணர்த்தப்படுதலானும், அன்னமரபின் வினைபற்றி வரும் வியங்கோள் ஏவற் பொருண்மைத்தாகலின் ஏயதுணர்ந்து செய்யும் உயர்திணை சுட்டியல்லது பெரும்பான்மையும் வாராமையான் ஆண்டன்ன மரபின் வினையாற் பாலுணர்தல் ஒருதலையன்றாகலானும் பெயரெச்சத்திற்கு முடிவாகிய பெயரும் வினையெச்சமும் சிறுபான்மை பொதுவினை கொண்டவழியல்லது தத்தமரபின் வினைகொண்டவழி அவ்வினையே பால் விளக்கலான் ஆண்டெச்சம் பால் விளக்கல் வேண்டாமையானும், அவையொழித்துப் பலர்வரை கிளவியே விதந்து கூறினார். இருவகை யெச்சத்தானும் வியங்கோளானும் சிறுபான்மை உயர் திணைப்பால் தோன்றல் ஒன்றென முடித்தலென்பதனாற் கொள்க.'

முதலில் உரையாசிரியர் கடமையாகிய மூல ஆசிரியர் கருத்தை நியாயப்படுத்துதல் என்ற முறையில் வாதங்களை அடுக்கிக்கொண்டு போனாலும் இறுதியில் அவருடைய வாதங்களில் அவருக்கே நம்பிக்கை ஏற்படவில்லை என்பதுபோல் பிறவினை விகுதிகள் ஏற்று வந்தாலும் பால் உணர்த்தும் என்ற உண்மையை ஒத்துக் கொள்கிறார். ஆனால் அங்கும் 'சிறுபான்மை' என்று பொடி வைத்துப் பேசி அதன் சிறப்பைக் குறைக்கப் பார்க்கிறார். உண்மையில் செய்யும் வாய்பாட்டைவிட வியங்கோள் வாக்கியங்களோ, எச்சத்தொடர் வாக்கியங்களோ சிறுபான்மை என்று கூற முடியாது. மேலே குறிப்பிட்டது போல மூல ஆசிரியர் பெருமைக்குக் குறைவு வந்துவிடக் கூடாது என்பதற்குத்தான் 'சிறுபான்மை' என்று பயன்படுத்தியுள்ளார். வாக்கியங்களின் பயிற்சி முறையை (Frequency) அறிந்து அப்படிக் கூறவில்லை. மேலும் எதிர்க்கும் வாதங்கள் கூட முழுமை

யாக ஏற்றுக்கொள்ளும்படி இல்லை. தன்னுடைய அறிவு சாமர்த்தியத்தால் எப்படியாவது மூல ஆசிரியர் கருத்தை நிலைநாட்ட வேண்டும் என்ற நோக்கமே முக்கியமாகப் படுகிறது. இனி ஒவ்வொரு வாதமாகப் பார்ப்போம்.

3. 3. 4. 1. முன்னிலை

முன்னிலைப் பெயரால் பால் உணர்வது வேறொரு சூத்திரத்தில் (193) குறிப்பிட்டிருக்கிறார் என்பது முதல்வாதம்.

> இன்ன பெயரே இவையெனல் வேண்டின்
> முன்னஞ் சேர்த்தி முறையின் உணர்தல்

என்ற விரவுப் பெயர்களை விளக்கும் போது காணப்படும் சூத்திரமே இது. இதனால் முன்னிலைப் பெயர்களால் பால் உணர்ந்து கொள்ள முடியும் என்று தொல்காப்பியர் குறிப்பிட்டு விட்டதாகச் சேனாவரையர் கருதுகிறார். ஆனால் இந்த சூத்திர உரையில் சொல்லும் சூழலால் பால் உணர்ந்து கொள்ளப் படுவதாகவே சேனாவரையர் உள்ளிட்ட எல்லா உரையாசிரியர்களும் கொண்டுள்ளார்கள். சேனாவரையரே,

> 'ஒரு சாத்தன் ஒருவனாலும் ஒருத்தியாலும் பலரானும் ஒன்றானும் பலவானும் தன்னுழைச் சென்றவழி 'நீ வந்தாய், நீயிர் வந்தீர்' என்னும் அன்றே, ஆண்டு அது கேட்டான் இவன் என்ன பால் கருதிக் கூறினான் என்பது உணரும்'

என்று முன்னிலைப் பெயர்கள் பால் உணர்த்துவது பற்றிவிளக்கியுள்ளார். இங்கு பேச்சு நடக்கும் சூழலால் பால் தெரிந்து கொள்கிறோமே தவிர வினைச்சொல்லால் பால் தெரிந்து கொள்ளவில்லை சாத்தி. சாந்து அரை! என்று ஏவல் வாக்கியமாக சொன்னால் பெண் பாலாக இருக்கும் எனவே இரண்டுக்கும் வேறுபாடு இருக்கிறது என்பது சேனாவரையருக்கும் தெரியாமல் இருந்திருக்காது. விவாதத்துக்காக அதுபற்றித் தொல்காப்பியர் வேறொரு இடத்தில் சொல்லியிருக்கிறார் என்று சொல்லி கேள்வி கேட்டவரின் வாயை அடைத்து விட்டார்.

3. 3. 4. 2. வியங்கோள்

வியங்கோள் பெரும்பான்மையும் உயர்திணையில் அல்லாமல் வராது என்னும் போது அது அவருடைய விருப்பம் சார்ந்த கருத்து

என்பது புலப்பட்டு விடுகிறது. சாத்தன் வாழ்க என்ற வாக்கியத்தில் உயர்திணையில்தான் வியங்கோள் வரும் என்ற கருத்தால் சாத்தன் என்பது ஆண்பால் என்று உணர்ந்து கொள்ளலாம் என்பது சேனாவரையரின் இரண்டாவது வாதம். அப்படியானால் இங்கும் வினைச் சொல் காரணமாக இல்லை என்பதை உணரலாம். அந்த நிலையில் இந்தச் சூத்திரத்தின் முக்கியமான கருத்துக்கு மாறாக முன்னிலை பற்றிய சூத்திரம் அமைந்து விடுகிறது. வியங் கோள் சிறுபான்மை அஃறிணையிலும் வரலாம் என்ற கருத்துப்படி பார்த்தால் வாழ்க போன்ற பொது வினையால் பால் தெரிந்து கொள்ள முடியாமல் போகும். ஆனால் சாத்தன் யாழ் எழுப்புக, சாத்தி சாந்து அரைக்க என்ற வியங்கோள் வாக்கியங்கள் உயர் திணைக்கும் அஃறிணைக்கும் பொதுவாக இருந்தாலும் எழுப்பு அரை என்ற வினைகள் குறிப்பிடும் தொழிலால் உயர்திணையில் ஆண்பால் பெண்பால் என்று நாம் அறிந்துகொள்ள முடியும் எனவே சேனாவரையரின் வியங்கோள் பற்றிய எதிர்வாதம் பொருந்துவதாக இல்லை.

3. 3. 4. 3. எச்சம்

பெயரெச்சம் கொண்டு முடியும் பெயரும் வினையெச்சமும் இன்னொரு வினையைக் கொண்டு முடியலாம். அப்போது அவை தத்தம் வினை கொண்ட வழி அவ்வினையே பால் விளக்கி விடும். எனவே எச்சங்கள் பால் விளக்க வேண்டியதில்லை என்பதே சேனாவரையருடைய மூன்றாவது வாதம். வந்த சாத்தன் ஓடினான், சாத்தன் வந்து ஓடினான் என்ற உதாரணங்கள் சேனாவரையர் கருத்தை மெய்ப்பிக்கின்றன. ஆனால் இப்படிப்பட்ட வாக்கியங்கள் பொதுவினை கொண்டு முடிந்தால்—அதாவது வந்த சாத்தன் ஓடும், சாத்தன் வந்து நிற்கும் என்பன போன்று பொது வினையால் முடிந்தால் பால் தெரிந்து கொள்ள முடியாது போய்விடும். ஆனால் அவையே 'அன்ன வினை மரபின்' கொண்டால் பொதுவினை வந்தாலும் விரவுப் பெயரின் பாலைத் தெரிந்து கொள்ள முடியும்.

உ. ம்.

யாழ் எழுப்பிய சாத்தன் வரும்
சாந்து அரைத்த சாத்தி வரும்

சாததன் யாழ் எழுப்பி வரும்
சாத்தி சாந்து அரைத்து வரும்

எனவே சேனாவரையர் மறுப்பு ஈரெச்சத்தைப் பொறுத்த வரையில் ஒரு பாதியே உண்மை; எப்போதும் பொருந்தாது. இங்கு தொல்காப்பியர் அன்ன மரபின் வினையால் பால் உணர்த்துவது பற்றிப் பேசுவதால் பொதுவினை எதுவானாலும் அதாவது செய்யும் என்னும் முற்று, முன்னிலை, வியங்கோள், எச்சங்கள் ஆகிய அனைத்துமே பால் உணர்த்தும் என்று கொள்வதே மிகவும் பொருந்தும். ஆனால் தொல்காப்பியர் செய்யும் என்ற ஒன்றை மட்டும்தானே குறிப்பிடுகிறார். எனவே ஏனையவை சிறுபான்மை என்று சொல்லி நம்மை நாமே ஏமாற்றிக்கொள்ள வேண்டியதில்லை.

இன்று மொழியியல் ஆய்வால் தேர்வுக்கட்டுப்பாடு பற்றியும் இதன் இலக்கண அவசியம் பற்றியும் பல உண்மைகளைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். முதன் முதலில் மொழிஅமைப்பில் அக்கறை உடைய இலக்கண ஆசிரியன் மொழி அமைப்பு உண்மையை அமைப்பியல் கொண்டு மட்டும் நோக்காது உலக நடைமுறை கொண்டும் நோக்கி அங்கு வினைகள் ஏற்றுவரும் பெயர்ச்சொல்லில் கட்டுப்பாடு இருப்பதை உணர்ந்து அதனாலும் மொழி அமைப்பு பற்றிய ஒரு உண்மையைக் (சில வினைப்பகுதியே பால் காட்டும்) கொள்ள முடியும் என்று கூறியதே நம்மை வியப்போடு நோக்க வைக்கிறது. அவர் அதைச் சொன்ன பிறகு மேலும் சில உண்மைகள் தோன்றினால் அதனோடு இவற்றையும் சேர்த்து மொழிஅமைப்பு பற்றிய செய்திகளை நாம் முழுமைப்படுத்த முயலவேண்டும். அப்படியே நமக்குப் பிறகும் வேறுசில செய்திகள் காண முடியும் என்றும் நாம் நினைக்க வேண்டும். ஆனால் அப்படித் தொல்காப்பியர் கூறிவிட்டாரே; அதனுல் உரையாசிரியராகிய நாம் அவர் கருத்தே சரி என்று நிலை நாட்ட வேண்டும் என்று கருதியே சேனாவரையர் தன்னுடைய திறமையைச் செலவழித்து அநாவசியமாக வாதாடியுள்ளார்.

3. 3. 4 4. உரையாசிரியர்கள் கருத்து

இங்கு இன்னொரு செய்தியும் குறிப்பிட வேண்டும். சேனாவரையர் கேள்வி எழுப்பியபோது முன்னிலை, வியங்கோள், ஈரெச்சம் என்ற மூன்று வகையைக் குறிப்பிட்டு இறுதியில் ஒன்றென

முடித்தலால் வியங்கோள், ஈரெச்சம் ஆகிய இரண்டு வகையே கொள்ளலாம் என்று குறிப்பிட்டார். 'முன்னிலையால் பால் உணரப் படுவது மேலே குறிப்பிட்ட முன்னிலைபற்றிய சூத்திரத்தால் கூறி விட்டதாகக் கருதியதால் சேனாவரையர் முன்னிலையைச் சேர்க்க வில்லை என்று நாம் ஒருவாறு சமாதானம் அடையலாம். ஆனால் நச்சினார்க்கினியரும் அவரை ஒட்டிக் கல்லாடனாரும் வியங்கோள் மட்டுமே கொண்டுள்ளார்கள்.

'இனி ஒன்றென முடித்தலான் வியங்கோளானும் உயர்திணை தோன்றலும் கொள்க'

என்று நச்சினார்க்கினியரும்,

> 'இனி வினையியலுள் வியங்கோள் பின்னர்ச் செய்யும் என்பதனை இயைபின்றி வைத்து ஆராய்ந்ததனான் வியங்கோள் வினையானும் உயர்திணை ஒருமைத் தோன்றும் என்றும் கொள்ளப்படும்',

என கல்லாடனாரும் விளக்கியுள்ளார்கள். ஆனால் தெய்வச்சிலையார் வியங்கோளையும் குறிப்பிடவில்லை. அதாவது இதுபற்றிப் பேசவே இல்லை. பொதுவாகத் தெய்வச்சிலையார் வாதப் பிரதி வாதங்களில் அதிகம் ஈடுபடுவதில்லை.[8] ஆனால் அந்த வாதப் பிரதிவாதங்களின் அடிப்படையை உணர்ந்து அதுபற்றிய தன் கருத்தை நேரடியாக சில இடங்களில் தெரிவிக்கிறார். இது பின் வரும் பகுதியால் (3. 3. 5. 2 பார்க்க) விளங்கும். அவருடைய மற்றொரு பண்பு, வாதப் பிரதிவாதங்களை அறவே புறக்கணித்தல் ஆகும். அது இங்கும் வெளிப்படுகிறது. இதனால் பிற்கால அறிஞர்களிடையே தயக்கத்தையும் மயக்கத்தையும் ஏற்படுத்தி வளர்ச்சியை ஓரளவு தடுத்து விட்டது என்பது மேலே குறிப்பிடப் பட்டது. இங்கு இன்னொரு உண்மையும் சுட்டிக்காட்ட வேண்டும். இன்று இலக்கணங்களையும் இலக்கண உரைகளையும் தொகுத்து ஆராயும்போது எல்லா வேறுபாடுகளையும் கருத்து வேறுபாடாகக், கோட்பாடு வேறுபாடாக (சேனாவரையர் விரவுப்பெயரின் பால் வியங் கோளாலும், ஈரெச்சத்தாலும் உணரலாம் என்று கொண்டார், நச்சி னார்க்கினியரும் கல்லாடரும் வியங்கோளால் மற்றுமே உணரலாம் என்று கொண்டார்கள், தெய்வச்சிலையார் வேறு ஒன்றாலும் உணர

முடியாது என்று கருதுகிறார்) கொண்டு ஆராயக்கூடாது.[9] ஏனெனில் அடிப்படையாக நாம் கேட்க வேண்டிய கேள்வி சாத்தன் யாழ் எழுப்பு; சாத்தன் யாழ் எழுப்புக; யாழ் எழுப்பிய சாத்தன் வரும்; சாத்தன் யாழ் எழுப்பி வரும் போன்ற வாக்கியங்கள் தமிழில் வரக்கூடியவையா? இல்லையா? என்பதுதான். அவை தமிழில் வரலாம்; அவை இலக்கணம் உடையவை என்று கருதினால் உரை ஆசிரியர்கள் இவற்றை ஒப்புக்கொண்டு அவைகளிலிருந்து மொழி அமைப்பு பற்றிய உண்மைகளை உய்த்துணருவதில் தயக்கம் காட்டியது ஒருக்கால் இவற்றைக் குறிப்பிடாததால் மூல ஆசிரியர்க்கு இழுக்கு ஏற்படும் என்று எண்ணிவிட்டார்களோ என்று முடிவுசெய்ய வேண்டும். முழு உரையையும் பார்க்கும்போது சில இடங்களில் மூல ஆசிரியர்கள் குறிப்பிடாத உண்மைகளை உரையாசிரியர்கள் ஏற்றுக் கொள்ளத் தயங்கவில்லை. வேறுசில இடங்களில் தயங்குகிறார்கள் என்று அறிந்தால் அப்படி தயங்குவதற்கான காரணம் என்ன என்று அறிய முயல வேண்டும். மேலே குறிப்பிட்டபடி உதாரணங்கள் ஒத்துக் கொள்ளத் தக்கவையாய் இருந்தும் உரையாசிரியர்கள் தயங்கினால் தங்களோடு ஒத்தவர்கள் கூறும் கருத்து முழுவதும் ஏற்றுக்கொண்டு தங்களுக்குச் சமமானவரையும் புதிய உண்மை சொன்னதால் மூல ஆசிரியரைப்போல மதிக்கும் பண்பு இல்லாமையைக் காட்டுவதாகக் கொள்ளவேண்டுமா என்று எண்ணிப் பார்க்கலாம்.

3. 3. 5. விரவு வினைகளால் அஃறிணை அறிதல்

இதுவரை 'நிகழூஉ நின்ற பலர்வரை கிளவி' என்பதை ஒட்டிய பிரச்சனை விளக்கப்பட்டது.

அடுத்து இரண்டாவது வரியான 'உயர்திணை ஒருமை தோன்றலும் உரித்தே' என்பதில் உள்ள பிரச்சனையை சேனாவரையர் தான் முதலில் எழுப்பிப் பதில் சொல்கிறார். ஆனால் அவருக்குக் கிடைத்த உதாரணங்கள் அல்லது கேள்வியை எழுப்பியவர் கொடுத்த உதாரணங்கள் சரியானவையாக இல்லாததால் அந்த கேள்விக்கே இடமில்லை என்பதுபோல முதலில் மறுத்துவிட்டு உடனே அப்படிப் பட்ட உதாரணங்கள் ஒருவழி, சிறுபான்மை என்று கூறி அதனால் அந்த உண்மையைக் குறிப்பிட வேண்டிய அவசியம் இல்லை என்று மறுத்து விட்டார். ஆனால் நாம் அவருடைய வாதங்களைப் படிக்கும்போது அங்கு எழுப்பிய கேள்விக்கு அவை சரியான விடை தரும்படியான

உதாரணங்களாக இல்லா விட்டாலும் அவற்றை மறுக்கும்போது இன்னொரு உண்மையைக் குறிப்பிடுகிறாரே, அந்த உண்மையையும் இன்னொரு புதிய இலக்கண உண்மையாக எடுத்துக் கொண்டு அதற்காக இன்னொரு கேள்வியையும் எழுப்பி இருக்கலாமே என்று நினைக்கத் தோன்றுகிறது.

3. 3. 5. 1. சேனாவரையரும் நச்சினார்க்கினியரும்

சில வினைகளால் விரவுப் பெயரிலிருந்து உயர்திணைப் பால் தெரிந்துகொள்ள முடிவது போல வேறு சில வினைகளால் அஃறிணைப் பாலும் தெரிந்து கொள்ளலாமே, அதை ஏன் தொல்காப்பியர் சொல்லவில்லை என்பதே கேள்வி. அதற்குச் சான்றாக சாத்தன் புல் தின்னும், சாத்தி கன்று ஈனும் என்ற உதாரணங்கள் தரப்பட்டன. இவை அந்தக் கருத்துக்கு ஆதரவாக இல்லை என்று சேனாவரையர் முதலில் மறுக்கிறார். சாத்தன் புல் தின்னும் என்பதில் எழுதல் அரைத்தல் ஆகிய இரண்டும் உயர்திணைக்கே உரிய வினை எனப் படுவது போல புல்தின்னல் என்பது உயர்திணைக்குப் பொருந்தவே பொருந்தாது என்றுகூற முடியாது (அதாவது உயர்திணைக்கும் வரும் என்று பொருள்); அப்படியே சாத்தி கன்று ஈனும் என்பதில் ஈனும் என்னும் வினையால் அஃறிணைப் பெண்பால் அல்லது அஃறிணை ஒன்றன் பால் என்று விளங்காது, கன்று என்னும் சார்பால்தான் அஃறிணை பால் விளங்குகிறது என்பதே சேனாவரையருடைய வாதம். இங்கு புல் தின்னும் என்பது உயர்திணைக்கும் வரும் என்று சேனாவரையர் கூறியதன் பொருத்தத்தை நாம் சந்தேகிக் கலாம். ஆனால் அதற்கு விடையளிப்பது போல நச்சினார்க்கினியர் உரை அமைந்திருக்கிறது. 'சாத்தன் புல் தின்னும் என்பது புல்லரிசிச் சோற்றைத் தின்னும் என்று உயர்திணைக்கும் ஏற்றலின் அஃறி ணைக்கே அஃது ஆகாமையின் அது கொள்ளார்' என்பதே நச்சி னார்க்கினியார் வாசகம்.

உண்மையில் ஈனும் என்பதைப் போலவே தின்னும் என்பதும் உயர்திணைப் பெயருக்கும் அஃறிணைப் பெயருக்கும் வரும் பொது வினை. அஃறிணைப் பெயர்க்கு மட்டுமே வரும் வினை அல்ல என்றும் நாம் நினைக்கலாம். இரண்டு உதாரணங்களும் அஃறிணை பால் தெரிவிக்கிறது என்பது தவறு என்றாலும் முன்னரே குறிப்பிட்ட படி சேனாவரையர், 'ஒருமை வினையான் ஒருவழி அஃறிணைத்

தோன்றினும் அது சிறுபான்மை யாகலானும் கூறாராயினர் என்பது' என்று கூறி ஓரளவாவது ஒத்துக் கொண்டுள்ளார். ஆனால் நச்சினார்க்கினியர் அந்த இரண்டு உதாரணங்களாலும் அஃறிணைக்கு மட்டும் வராது என்றதன் மூலம் அஃறிணைக்கு சில வினைகள் உரியன என்பதை மறுத்து விட்டார். மேலே முதல் உதாரணத்துக்கு உரிய நச்சினார்க்கினியர் மறுப்பு காட்டப்பட்டது.

இரண்டாவது வாக்கியமான சாத்தி கன்று ஈன்றும் என்பதை 'கன்று என்னும் சார்பான் அஃறிணை தோன்றிற்று; 'அதனால் கொள்ளார்' என்று திட்டவட்டமாக மறுத்துவிட்டார். ஆனால் இந்த உதாரணத்தை விளக்கும் முறையிலிருந்து வினை உயர்திணைக்கும் அஃறிணைக்கும் பொதுவானதாக இருந்தால் செயப்படுபொருளாக வரும் பெயரைக் கொண்டும் எழுவாயாக வரும் விரவுப் பெயரின் பாலை அறிந்து கொள்ளமுடியும் என்ற மற்றொரு மொழிஅமைப்பு உண்மை வெளிப் படுகிறது. ஆனால் இருவரும் பொதுவினையால் அஃறிணைப் பால் தோன்றாது என்ற கருத்தை மறுப்பதிலேயே முழு கவனம் செலுத்தி விட்டு அதை மறுக்கத் தாங்கள் கையாண்ட வாதத்தில் இன்னொரு புது உண்மையும் (வினையோடு வரும் பெயரின் சார்பால் பால் தோன்றுதல்) புதைந்திருக்கிறது என்பதைக் கவனிக்கத் தவறிவிட் டார்கள். இதற்கும் உரையாசிரியர் கடமையாகிய மூல ஆசிரியர் கருத்தை விளக்குவதை மட்டுமே செய்ய வேண்டும்; தாங்கள் மூல ஆசிரியர் போல புது உண்மையை விளக்கக் கூடாது என்று நினைத்துவிட்டார்களோ என்பது தெரியவில்லை. ஆயினும் சேனாவரையர் மூலக்கேள்வியாகிய அஃறிணைப் பாலும் தோன்றுமா என்பதற்கு அப்படி வருவது ஒருவழி என்றும் சிறுபான்மை என்று மாவது ஒத்துக்கொண்டுள்ளார். அதற்கேற்ற வினையைக் கண்டு பிடிக்க முடியாவிட்டாலும் அஃறிணைக்கே உரிய வினை இருக்க முடியும் என்று நம்புகிறார் என்பது அவருடைய வாசகத்தால் புலனா கிறது. ஆனால் நச்சினார்க்கினியர்தான் முழுமையும் மறுத்துவிட்டார்.

3. 3. 5. 2. தெய்வச்சிலையார்

தெய்வச்சிலையார் வாதப் பிரதிவாதங்களில் இறங்க மாட்டார் என்பது மேலே குறிப்பிடப்பட்டது; அப்படி இங்கு அவற்றில் இறங் காமல் சரியான உதாரணத்தைக் கண்டு பிடித்து விரவுவினை அஃறி

மையும் உணர்த்தலாம் என்று தெளிவுபடுத்திய பண்பு பாராட்டத் தக்கதே.

சூத்திரத்தில் உள்ள 'உயர்திணை ஒருமை தோன்றலும் உரித்தே' என்ற வரியைக் கொண்டு 'உம்மை எச்சவும்மையாக அஃறிணை ஒருமை தோன்றலும் உரித்து என்று கொள்க' என்று கோட்பாடு அளவில் விளக்கி விட்டுப் பிறகு 'சாத்தன் புல் மேயும்; சாத்தி புல் மேயும்' என்ற வழி அஃறிணை என்பது பெறப்பட்டது என்று உதாரணத்தைத் தந்து விளக்கியும் காட்டி விட்டார்.

சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் அஃறிணைப் பால் தோன்றாது என்று எவ்வளவு தான் வாதிட்டாலும் அதை ஒதுக்கித் தள்ளி விட்டு சரியான உதாரணத்தைக் காட்டி அஃறிணை ஒருமை தோன்ற முடியும் என்று அலட்டிக் கொள்ளாமல் முடிவு செய்த தெய்வச் சிலையாரின் பண்பு பாராட்டுவதற்கு உரியது. அதே சமயத்தில் வினைபால் அன்றி பெயர்ச் சார்பாலும் அஃறிணைப் பால் தோன்றும் என்று தங்கள் கருத்தையே பொதுமைப்படுத்தி விரவுப்பெயர் பால் உணர்த்துவதில் அந்தப் புது உண்மையை ஒத்துக் கொள்ளாது சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் தாங்களே புறக்கணித்தது போல தெய்வச்சிலையாரும் அலட்சியப்படுத்தியது இலக்கண வளர்ச்சியில் ஒரு சிறு தடைக் கல் என்று நாம் நினைக்க வேண்டி இருக்கிறது.

3. 4. 0. கருத்து வளர்ச்சி

3. 4. 1. இலக்கணமும் உரைகளும்

விரவுப் பெயர்கள் செய்யும் என்னும் வாய்பாட்டு பொதுவினையால் உயர்திணை ஒருமைப் பால் (ஆண் பால், பெண்பால்) அறிந்து கொள்ளக் கூடிய வினைகள் உண்டு என்று தொல்காப்பியர் குறிப்பிட்டார். உரையாசிரியர்கள் விளக்கத்தால் முன்னிலை வினை, வியங்கோள், எச்சம் போன்றவற்றாலும் உயர்திணை ஒருமைப் பால் அறிந்து கொள்ள முடியும் என்றும் சில வினைகளால் அஃறிணைப் பாலும் அறிந்து கொள்ள இயலும் என்றும் பெறப்பட்டன. மேலும் உரையாசிரியர்கள் தந்த விளக்கத்தால் வினை உயர்திணைக்கும் அஃறிணைக்கும் பொதுவாக இருந்தாலும் சார்பாக வரும் பெயராலும் விரவுப் பெயரின் சரியான பாலை அறிந்து கொள்ள முடியும் என்று நாம் பொதுமைப் படுத்தலாம். இவைகளோடு தொல்காப்பியரும்

உரையாசிரியர்களும் குறிப்பிடாத முறைகளும் இருக்கின்றன என் பதும் குறிப்பிடத்தக்கது.

3. 4. 2. மொழியியல்

விரவுப் பெயர்கள் ஏற்று வரும் பெயரடை அடையாலும் அல்லது குறிப்பெச்சத்தோடு வரும் பெயராலும் பால் தெரிந்து கொள்ள முடியும்.

கொம்புடைய சாத்தன் வரும்
கையுடைய சாத்தன் வரும்

என்ற உதாரணங்களில் முன்னது அஃறிணை ஒருமை என்றும் பின்னது உயர்திணை ஆண்பால் என்றும் தெரிந்து கொள்ளலாம். மேலும் மாற்றிலக்கண மொழியியலார் தேர்வுக் கட்டுப்பாடு பற்றி பொது நிலையில் பல உண்மைகளை வெளிப்படுத்தியுள்ளதும் இன்றைய ஆய்வின் வளர்ச்சியைக் காட்டும். சாம்ஸ்கி (1965) ஓரளவே இதைப்பற்றி ஆராய்ந்துள்ளார். அவர் ஆய்விலும் பிறர் ஆய்விலும் தோன்றிய கருத்துக்களைத் தொகுத்து பொர்ன்ஸ்டின் (1977) கொடுத்துள்ளார். அவற்றில் சில இன்றைய ஆய்வின் வளர்ச்சியைக் காட்டுவதாக இருப்பதால் அவை இங்கு குறிப்பிடப் படுகின்றன.

சொற்களைப் பாகுபடுத்துவதும் ஓரளவுக்கு தொடரியல் பண்பைக் காட்டும். செயப்படுபொருள்குன்றியவினை, செயப்படு பொருள்குன்றாவினை என்ற பாகுபாடு தொடரியல் பண்பு உடையது, ஒரு இலக்கணக்கூறு வருமிடம், வராத இடம் ஆகியவற்றைப் பேசும் விதிகளுக்கு கடுமையான உட்பாகுபாட்டு கட்டுப் பாடு (Strict subcategorization restriction) என்று கூறுவார்கள்.[10] ஒரு சொல்லின் சிறப்புக் கூறு (உயர்திணை, அஃறிணை : ஆண் பால், பெண்பால் ; தொகுதிப்பெயர், எண்ணுப் பெயர்) பற்றிப் பேசுவது தேர்வுக் கட்டுப்பாடு என்று குறிப்பிடுவார்கள்.[11] இவை மொழியைப் பயன்படுத்துவோர் வாக்கியம் இலக்கணத்தோடு பொருந்தியதா, இல்லையா என்று இயல்பாக உணருவதற்கு வசதி செய்கிறது என்று கருதுகிறார்கள்.[12] மேலும் தேர்வுக்கட்டுப்பாடு வினைக்கு மட்டுமின்றி செயப்படு பொருளுக்கும் உண்டு என்று சொல்கிறார்கள்[13]. வினைக்குரிய தேர்வுக் கட்டுப்பாடும் பெயரடைக்

குரிய கட்டுப்பாடும் ஒத்தது என்பதை லேக்காவ் என்ற மொழியியல் அறிஞர்கள் கண்டுள்ளார்கள்.[14]

கோபி என்ற வினை உயர்திணையிலேயே வரும் : அஃறிணையில் வராது என்பது ஒரு தேர்வுக் கட்டுப்பாடு. எனவே

சாத்தன் கோபித்தான்

என்பது சரியான வாக்கியம்

* ஆறு கோபித்தது
* மாடு கோபித்தது

என்பது சதாரணமாக நல்ல வாக்கியமாகக் கருத முடியாது. இதைப் போலவே பெயரடையிலும்

* கோபித்த மாடு
* கோபித்த ஆறு
கோபித்த சாத்தன்

இதே கட்டுப்பாடு செல்லும் என்பதை மேலே காட்டிய உதாரணம் புலப்படுத்தும். தேர்வுக் கட்டுப்பாடு மீறியவை அதிக இலக்கணத்தவறு உடையதாகக் கருதப்பட மாட்டாது. உட்பாகுபாடு மீறியவை தவறான வாக்கியமாக அமையும். கவிதையிலும் உருவகக் கதையிலும் தேர்வுக் கட்டுப்பாடு மீறி வருவதைப் பார்க்கலாம்.

கொடு என்ற வினை மூன்று இட வினைகள் (Three place predicates) என்றும் அவை எழுவாய், செயப்படுபொருள், 4ஆம் வேற்றுமை ஏற்ற பெயர் ஏற்று வரும் என்றும் கூறுவார்கள்.

நான் கண்ணனுக்குப் பணம் கொடுத்தேன் என்ற வாக்கியம் சரி. ஆனால்

*நான் கண்ணனிடமிருந்து பணம் கொடுத்தேன் என்பது தவறு. ஏனெனில் நான்காம் வேற்றுமைக்குப் பதில் இங்கு ஐந்தாம் வேற்றுமை வந்திருக்கிறது.

சிரி என்ற வினை உயர்திணை ஏற்று வரும் என்பது தேர்வுக் கட்டுப்பாடு.

குழந்தை சிரித்தது
கண்ணன் சிரித்தான்

என்பது சரியான வாக்கியங்கள்.

*வீடு சிரித்தது

என்பது வாக்கிய அமைப்பில் சரியே; பொருளால்தான் ஒத்துக் கொள்ளத் தயங்குகிறோம். ஆனால் கவிதையிலும் உருவகக் கதையிலும் இப்படி வருவதை ஏற்றுக் கொள்கிறோம். ஆகவே மொழிஅமைப்பு ஆய்வில் இன்று நல்ல வளர்ச்சியடைந்து கொண்டே வந்துள்ளதைக் காணலாம். அந்த வளர்ச்சி, கோட்பாட்டு நிலையிலும் மொழி அமைப்பில் புதிய உண்மையைக் கண்டுபிடிக்கும் நிலையிலும் ஏற்பட்டுள்ளது.

எனவே இலக்கண ஆராய்ச்சியையும் மேற்கொள்ளும் போது வளர்ச்சிப் பாதை நோக்கியதாகவே கொள்ள வேண்டுமே தவிர ஒருவர் கூறிய உண்மையைப் புறக்கணிக்கும் முறையில் அமையக் கூடாது

அடிக்குறிப்புகள்

1. தொல்காப்பிய சூத்திர எண்கள் சேனாவரையர் உரையை ஒட்டி அமைந்தது.

2. இந்த சூத்திரம் விரிவாக ஆராயப்பட்டுள்ளது (ஆய்வுக் கோவை. 14. சண்முகம், 1982)

3. தெய்வச் சிலையார்

ஆடூஉஅறி சொல்மகடூஉ அறிசொல்
பல்லோர் அறியும் சொல்லொடு சிவணி
அம்முற்பாற் சொல் உயர்திணையவ்வே

என்ற சூத்திர உரையில் திணை – பால் பாகுபாட்டில் திணை – எண் – பால் என்ற மூன்று பாகுபாடும் படிநிலையில் அமைந்துள்

ளதை 'உயர்திணை ஒருமை ஆடூஉ அறி சொல் மகடூஉ அறிசொல் என இரு முடிபு உடைத்தாகலின் அச்சொற்கள் பலரறி சொல்லோடு கூடி மூன்று பால் ஆயின'

என்ற விளக்கத்தால் பெற வைத்துள்ளார். இதன் முழுவிளக்கத் துக்கு அகத்தியலிங்கம் & சுந்தரம் (1969) பார்க்க.

4. இடைக் காலத்தில் மிகப் பழைய நூல்களில் கூறியவை முற்ற முடிந்தவை; அவைகளுக்கு மேலே புதிய உண்மைகள் இருக்க முடியாது என்ற நம்பிக்கை பரவலாகக் காணப்படுகிறது. இதைக் கொள்கையளவில் திருக்குறள் உரையாசிரியராகிய பரிமேழலகரிடத் தில் பார்க்கலாம். பரிமேழலகர்

> தம்மிற்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்தில்
> மன்னுயிர்க் கெல்லாம் இனிது (68)

என்ற குறளுக்கு தம்மக்கள் அறிவுடைமை மாநிலத்து மன்னுயிர்க்கு எல்லாம் தம்மின் இனிது' என்று கொண்டு கூட்டிப் பொருள் எழுது வதற்குக் காரணம் மேலே குறிப்பிட்டபடி அறிவு வளர்ச்சியை ஒத்துக் கொள்ளாதது தான். ஆயினும் பரிதியார் ஆற்றொழுக்காகப் பொருள் கொண்டதன் மூலம் அறிவு வளர்ச்சியை ஒத்துக் கொண் டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

5. சுப்பிரமணிய சாஸ்திரியார் (1945 : 155) 'வினை' என் பதை 'முடிக்குஞ் சொல்' என்று பொருள் கொண்டு விரவுப்பெயர் வினையை மட்டும் அல்லாமல் பெயரையும் முடிக்குஞ் சொல்லாகக் கொண்டுவிடலாம்; அப்படியானால் சேனாவரையரும் நச்சினார்க் கினியரும் வெவ்வேறு உத்திகளைக் கையாண்டு பெயரைச் சேர்க்க வேண்டியதில்லை என்பது அவர் கருத்து. இதனால் 'வினை' என் பதற்கு முடிக்குஞ் சொல் என்று புதுப்பொருள் கொடுக்க வேண்டி யுள்ளது. அது மூல ஆசிரியர்களுக்குப் பெருமை கொடுக்கக் கூடிய தாயினும் 'வினை' என்ற சொல்லுக்கு அந்தப் பொருள் உண்டா? அப்படி தொல்காப்பியர் வேறு எங்கேயாவது பயன்படுத்தியிருக்கிறாரா என்று பார்க்க வேண்டும்.

தொல்காப்பியர் பெயரின் முடிக்கும் சொற்களைக் குறிப்பிடும் போது வினை நிலை உரைத்தல் ... ... பெயர் கொளவருதல் (66. 2; 3) என்று பெயரையுப் வினையையும் தனியே கொண்டுள்ளார். எனவே தொல்காப்பியர் கருத்துப்படி 'வினை' என்பதை முடிக்குஞ் சொல் என்ற பொருளில் பெயரையும் வினையையும் சேர்த்துக் குறிப்பிடக் கூடாது என்று கூறலாம்.

6. தற்கால ஆய்வாளர்கள் எந்தப் பாடம் சிறந்தது என்று நிர்ணயிப்பதில் கவனம் செலுத்தியிருக்கிறார்கள். உதாரணமாக சுப்பிரமணிய சாஸ்திரி (1945 : 164) 'பலர்வரைக் கிளவி' என்ற பாடமே சிறந்தது என்று வாதாடியுள்ளார். இதற்கு ஆதாரமாகச் 'செய்யும்' என்ற கிளவி பற்றிய 'பல்லோர் படர்க்கை, முன்னிலை, தன்மை' (227) என்ற சூத்திரத்தை மேற்கோள் காட்டியுள்ளார். இந்தக் கருத்தையே சுந்தரமூர்த்தியும் (கல்லாடனார் உரை, கழகப் பதிப்பு, பக். 130) ஆதரித்துள்ளார்.

நிகழ் காலத்துப் பிற சொல்லை நீக்குதற்குப் பலர் வரைக் கிளவி என்றார் என்பது சேனாவரையர் விளக்கம். பலர்பாலுக்கு வராத சொல் என்பது போலச் சேனாவரையர் பொருள் கொண்டு உள்ளார். ஆனால் பாலுக்கு வரையறையில்லாத 'செய்யும்' என்ற முற்று என்று கொண்டால் அதாவது 'பால்வரைக்கிளவ்' என்ற பாடம் கொண்டால் பொருள் சிறப்பதை உணரலாம். எப்படியென் றால் பால்வரையறையில்லாத செய்யும் என்னும் முற்று சில காரணங்க ளால் பால் உணர்த்த வல்லது என்று கூறும்போது வினை விகுதி சிறப்பு இழந்து வினைப்பகுதி சிறப்புபெறுகிறது. அதாவது சில்வினை பகுதிகளே பால் காட்டும் தன்மை உடையது என்ற கருத்து வலியு றுத்தப்படுகிறது.

7. Ru es... .... which analyze a symbol (generally a complex symbol) in terms of syntactic features of the frames in which it appears I shall call *selectional rules.* The latter expressed what are usually called *"selectional restrictions or restrictions of co-occurrences"*

Chomsky, 1965 : 95

என்ற சாம்ஸ்கியின் மேற்கோளால் பெறப்படும்.

8. இந்த உண்மையை இராம. சுந்தரம் 'தெய்வச்சிலையார் உரைத்திறன்' என்ற கட்டுரையில் (1978 : 8) குறிப்பிடும் கீழ்க் காணும் வரிகளால் உணரலாம்.

'பிற உரையாசிரியர்களை இவர் மறுப்பதாக உள்ள இடங்கள் சிலவே. தன்வழி நின்று உரைகாண்பது இவர் இயல்பு'.

9. இலக்கணங்களையும் உரைகளையும் தொகுத்து ஆராயும் ஆய்வு அதிகமாக மேற்கொள்ளப்படும் இந்த நாளில் அப்படிப் பட்ட ஆய்வாளர்கள் இலக்கண கோட்பாட்டு வேறுபாட்டால் எழுந்த வேறுபாடு என்ன? மொழி அமைப்பு உண்மையைப் புறக்கணிப் பதால் ஏற்படும் வேறுபாடு என்ன? என்று பகுத்து அறிந்து விளக்க வேண்டும். எழுத்ததிகாரத்தில் முதலெழுத்து, சார்பெழுத்து என்று பாகுபடுத்துவதிலும் அவற்றிற்குரிய எழுத்துகள் என்னென்ன என்று கூறுவதிலும் உள்ள வேறுபாடு இலக்கணக் கோட்பாடு வேறுபாடா கும். சொல்லுக்கு முதலில் என்னென்ன எழுத்துகள் வரலாம் என்று கூறுவதில் காணப்படும் வேறுபாடு இரண்டு காரணங்களால் இருக்கலாம். ஒன்று மொழியில் ஏற்பட்ட மாற்றத்தால் ஏற்பட்டது. அப்படி இல்லாவிட்டால் மொழி அமைப்பு உண்மையைப் புறக் கணிப்பதால் ஏற்பட்ட வேறுபாடாகவே கொள்ள வேண்டும்.

10. Rules that relate to the occurrence or non - occurrence of grammatical category symbols are called "Strict subcategorization restrictions"

Bornstein, 1977 : 27

இதையே இன்னொரு இடத்தில்

Rules regarding the occurrence or non-occurrence of constituents such as NP are called "Strict subcategorization restrictions."

Bornstein, P. 92

11. Rules that relate to the feature of words are called "selectional restrictions"

Bornstein, P. 27

12. Selectional and strict subcategorization restrictions enable us to account explicitely for a native speaker's intutions regarding the grammaticality.

13. Selectional restrictions apply not only to the subjects of verbs (இது தான் விரவுப் பெயரின் பாலை வினைக் காட்டும் என்பது) but also to their objects. சாத்தி கன்று ஈனும் என்ற உரையாசிரியர்கள் தந்த உதாரணத்தில் கன்று என்ற செயப்படு பொருளாலே சாத்தி என்ற விரவுப் பெயர் அஃறிணை ஒருமை – பெண்பால் என்பது தெரிகிறது.

Bornstein, P. 93

14. Verbs and adjectives have similar restrictions

Bornstein, P. 97

Lakoff (1970 : 115-33) என்பவர் முதலில் இந்தக்கருத்தை கூறியதாக போர்ன்ஸ்டெயின் (1977 : 93 f. n) குறிப்பிட்டுள்ளார்.

துணை நூல்கள்

அகத்தியலிங்கம் ச. 1979 **சொல்லியல் 1 பெயரியல்** அண்ணாமலை நகர்.

அகத்தியலிங்கம் ச. & சுந்தரம். இராம. 1969 "தொல்காப்பிய முதற் சூத்திரம்" **செந்தமிழ்** பக். 1 – 9.

சண்முகம், செ. வை. 1982 "உரியவை உரிய பெயர் வயினான" **ஆய்வுக்கோவை 14. 4.** பக். 79–84. அண்ணாமலை நகர்

சுந்தரம், இராம 1978 **சொல் புதிது. சுவை புதிது** சென்னை.

திருக்குறள் – பரிமேலழகர் உரை 1967 திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

திருக்குறள் – உரைவளம் (அறத்துப் பால்), தருமபுரம் 1950.

தொல்காப்பியம் – சொல்லதிகாரம் இளம்பூரணர் உரை. 1973 திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை.

தொல்காப்பியம் - சொல்லதிகாரம் கல்லாடனார் விருத்தியுரையும் பழைய உரையும். 1964 திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

தொல்காப்பியம் - சொல்லதிகாரம் சேனாவரையர் உரை. 1974 திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை.

தொல்காப்பியம் - சொல்லதிகாரம் தெய்வச்சிலையார் உரை. 1963 திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை.

தொல்காப்பியம் - சொல்லதிகாரம் நச்சினார்க்கினியர் உரை 1974 திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை.

Bornstein, D. D, 1977 *An Introduction to Transformational Grammar*: Massachusetts.

Chomsky, N. 1965 *Aspects of the theory of syntax*. Massachusetts.

Lakoff, G. 1970 *Irreguiarity in syntax*. Newyork

Subrahmanya Sastri, P. S. 1945 *Tolka:ppiya:m Collatika:ram* (with an English Commentary), Annamalainagar

தற்சுட்டு பதிலிடுபெயர் நீக்கம்

பத்மநாப பிள்ளை,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

தமிழில் படர்க்கை எழுவாய் பெயர்த்தொடர் மீண்டும் மீண்டும் ஒரே வாக்கியத்தில் வரும்போது பின்னர் வரும் பெயர்த்தொடரை 'தான்' என்ற பதிலிடுபெயராக மாற்றுகிறோம். இதைத் தற்சுட்டு பதிலிடு பெயராக்கம் (tanization) என்று குறிப்பிடுவார்கள் (Kumaraswami Raja, 1972). இவ்வாறு வரும் பதிலிடுபெயராகிய தான் – ஐ வேண்டுமாயின் (optional) சில இடங்களில் நீக்கி விடலாம். அதனால் எந்தவிதப் பொருள் மாற்றமும் ஏற்படாது. இவ்வாறு அது எந்தெந்த இடங்களில் நீக்கம் பெறலாம் என்பதைப் பற்றி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

தற்சுட்டு பதிலிடுபெயர் வாக்கியத்தினின்று நீக்கம் பெற்றும், பெறாமலும் வரக்கூடிய சில வாக்கியங்களைக் காண்போம்.

1. கலா தன்னை அடித்துக் கொண்டாள்.

2. கலா தன் புத்தகத்தை எடுத்தாள்.

1a. கலா அடித்துக் கொண்டாள்.

2a. கலா புத்தகத்தை எடுத்தாள்.

வாக்கியங்கள் (1–2)-ல் உள்ள தற்சுட்டு பதிலிடு பெயர் 'தான்' வாக்கியங்கள் (1a–2a)-ல் நீக்கம் பெற்றுள்ளது. வாக்கியங்கள் (1& 1a) இரண்டிற்குமிடையே எந்த விதப் பொருள் மாறுபாடும் இல்லை. ஆனால் வாக்கியம் (2a) வாக்கியம் (2)-ல் உள்ள பொருளைத் தரவில்லை வாக்கியங்கள் (1& 1a) இரண்டும் ஒரே பொருளைத் தந்து நிற்பதற்குக் காரணம் அவற்றில் 'தற்சுட்டுகொள்' (Reflexive koḷ) இருப்பது தான் (Padmanabha Pillai, 1981). அந்த 'தற்சுட்டு கொள்' வாக்கியத்தின் எழுவாயும் செயப்படு பொருளும் ஒன்றுதான் என்பதைக் காட்டி நிற்கிறது. அதனுல்தான் வாக்கியங்கள் (1& 1a) இரண்டும் பொருள் மாறுபடாமல் இருக்கிறது. வாக்கியம் (2) புத்தகம் கலாவுக்கு உரியது என்று தெளிவாகக் காட்டி நிற்க வாக்கியம் (2a)-ல் பதிலிடுபெயர் 'தான்' நீக்கப்பட்டவுடன் புத்தகம் கலாவுக்கு சொந்தமானதா அல்லது வேறு யாருடையதோ என்ற ஐயப்பாடு எழுகிறது. ஆகையால் நாம் கீழே குறிப்பிட்டுள்ளது போன்ற ஒருவிதியை அமைத்துக் கொள்ளலாம்.

3. தற்சுட்டுப் பதிலிடு பெயராகிய 'தான்' –ஐ தற்சுட்டாக்கத்திற்கு (Reflexivization) பிறகு வேண்டுமானால் நீக்கிக் கொள்ளலாம்.

மேற்கண்ட விதியின் செயல்முறையைக் காண்போம். காட்டாக, கீழ்வரும் வாக்கியங்களை எடுத்துக் கொள்வோம்.

4. ஜனதா காங்கிரசோடு தன்னை இணைத்துக் கொண்டது.

5. சீதா இராமன் தன்னை புரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காக அவ்வாறு செய்தாள்.

4a. *ஜனதா காங்கிரசோடு இணைத்துக் கொண்டது.

5a. *சீதா இராமன் புரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காக அவ்வாறு செய்தாள்.

4b. ஜனதா காங்கிரசோடு இணைந்தது.

தற்சுட்டுப் பதிலிடுபெயர் 'தான்' நீக்கப்பட்டவுடன் வாக்கியம் (4a) பிழையானதாகவும், வாக்கியம் (5a) பொருள் மாறுபாடு அடைந்ததாகவும் ஆகிவிடுகின்றன. ஆனால் வாக்கியம் (4b)-ல் தற்சுட்டுப் பதிலிடுபெயர் நீக்கம் செய்ததுடன் செயப்படுபொருள் குன்றா வினையை செயப்படுபொருள் குன்றிய வினையாக மாற்றம் செய்திருப்பதால் அவ்வாக்கியம் திருத்தமானதாக விளங்குகின்றது. வாக்கியங்கள் (4-5) இரண்டுமே தற்சுட்டு வாக்கியங்களாகவே (Reflexive sentences) இருப்பினும் தற்சுட்டு பதிலிடு பெயரை நீக்க முடியவில்லை. ஆகவே மேலே கண்ட விதியை சற்றே திருத்தி கீழ்க்கண்ட வண்ணம் அமைக்க வேண்டியுள்ளது.

6. தற்சுட்டு வாக்கியத்தின் செயப்படுபொருள் குன்றாவினை அதற்கு இணையான செயப்படுபொருள் குன்றியவினையைக் கொண்டிருப்பின், மேலும் அந்த வினை கூட்டு வினை (வினை + கொள்) அமைப்பைக் கொண்டிருப்பின் 'தான்' பதிலிடு பெயரை நீக்கம் செய்ய இயலாது.

வாக்கியம் (4a), பதிலிடுபெயர் 'தான்' இல்லாத நிலையில் பிழையான வாக்கியமாக காணப்படுகிறது. செயப்படுபொருள் குன்றா வினையான 'இணை' அதற்கு இணையான செயப்படுபொருள் குன்றிய வினையைக் கொண்டிருப்பதே இதற்குக் காரணம்.

வாக்கியம் (5a) வாக்கியம் (5) -ல் காணும் பொருளைத் தராது தவறிவிடுகிறது. புரிந்துகொள் என்ற வினை கூட்டுவினையாக இருப்பதும், அதற்கு இணையான ஒருசொல் வினை (simple verb) இல்லாததுமே இதற்குக்காரணம்.

இறுதியாக 'தான்' பதிலிடுபெயர், தற்சுட்டாக்கத்தின் பின்னர் மேலே விவரிக்கப்பட்ட இரண்டு விதிவிலக்கான இடங்களைத் தவிர்த்து, நீக்கம் செய்ய முடியும் என நாம் வரையறுத்துக் கூறலாம்.

துணை நூல்கள்

1. Kumaraswami Raja, N. 1972 "Tanization. and Reflexivization [Abstract]". Third All India Conference of Linguists, Hyderabad.

2. Padmanabha Pillai, B 1981 "Reflexivization in Tamil" xi All India Conference of Dravidian Linguists, Hyderabad.

சொற்களும் நுண்கருத்துகளும்

உயிர் என்ற சொல் நெடுங்காலத்திற்கு முன்னமே இருந்தது; காற்று என்னும் பொருளுடன் இருந்தது. (உயிர்த்தல் – மூச்சு விடுதல்). இந்தச் சொல் வேறு ஒன்றை—வாழ்வுக்கு அடிப்படையான உயிர் என்பதைக்—குறிக்க எவ்வளவோ காலம் கழிந்திருக்கும். ஏன் எனில் காற்றை உணர்ந்த மக்கள், உயிர் உண்டு என்பதை நெங்டுகாலம் கழித்தே உணர்ந்திருப்பார்கள். சொல் பழையது; புதிதாக உணர்ந்த ஒரு கருத்தை உணர்த்துவதற்கு அந்தப்பழைய சொல்லையே பயன்படுத்திக் கொண்டனர். இவ்வாறு ஆராய்ந்தால், ஒழுக்கம் பண்பு உயிர் நன்மை தீமை வாழ்வு அறிவு முதலான நுண்கருத்து உணர்த்தும் சொற்களை அமைத்த முயற்சியை நினைத்துப் போற்ற வேண்டியுள்ளது. ஒவ்வொரு மொழியிலும் இவ்வாறே நுண்கருத்துச் சொற்கள் (words expressing abstract ideas) பிறப்பதற்கு எத்தனை காலமாக வளர்ந்த மனவளர்ச்சி தேவையாக இருந்திருக்கும்! எத்தனை நூற்றாண்டுகளாக முன்னோர் முயன்று உணர்ந்து இவற்றைக் கண்டிருப்பர்! மக்களின் வாழ்வில் காணப்படும் நாகரிகத்தின் வளர்ச்சி எல்லாம் இத்தகைய சொற்களில் விளங்குகின்றன எனலாம்.

டாக்டர் மு. வரதராசனார்
மொழி வரலாறு, கழகப்பதிப்பு,
சென்னை.

மொழியியற் பேரறிஞர்
திராவிட மொழியியலின் தந்தை
டாக்டர் கால்டுவெல் (1814 - 1891).
(Rt. Rev. Robert Caldwell, D. D; LL. D)

சு. சக்திவேல்
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

திராவிட மொழியியல் இன்று நல்லதொரு வளர்ச்சியினைப் பெற்றுள்ளது. பல்வேறு அறிஞர்கள் திராவிட மொழிகளின் பல்வேறு கூறுகளைப் பற்றி ஆராய்ந்து வருகின்றனர். இத்தகைய வளர்ச்சிக்கு அடித்தளமாக இருந்த அறிஞர்கள் பலர். அவர்களில் மிகச் சிறந்த இடத்தைப் பெறும் டாக்டர் கால்டுவெல் அவர்கள் திராவிட மொழியியலின் தந்தை எனக் கருதப்படுவர். இம்மொழிகள் பற்றிய ஆய்வுக்குச் சிறந்ததொரு அடித்தளத்தை அமைத்துத் தந்த பெருமை டாக்டர் கால்டுவெல் அவர்களையே சாரும்.

1814 ஆம் ஆண்டு அயர்லாந்திலே பிறந்து கிளாஸ்கோ கல்லூரியில் பயின்று பி. ஏ. தேர்வில் முதல்வராகத் தேறினார். கல்லூரியில் படிக்குங்காலத்திலேயே மொழி நூல் பாடத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். கலையிலும் வண்ண ஓவியத்திலும் இவர்க்கு மிகுந்த ஈடுபாடு உண்டு. இருபதாவது வயதிலேயே இலண்டன் மிஷனரி சங்கத்தில் சமய ஊழியராகப் பயிற்சி பெற்று 1838 ஆம் ஆண்டு தமிழகம் வந்து சேர்ந்தார். சென்னை வந்த பின்பு டாக்டர் போப், வின்ஸ்லோ, ஜான் ஆன்டர்சன், ஹென்றி பவர் போன்றவர்களுடன் கால்டுவெல்லுக்குத் தொடர்பு ஏற்பட்டது. சி. பி. பிரௌன் (C. P. Brown) உடன் கொண்ட நட்புறவால், கால்டுவெல்லுககுத் தெலுங்கு, சமஸ்கிருதம் படிக்கும்வாய்ப்பு ஏற்பட்டது. 1841-ல் திருநெல்வேலிக்குச் சென்று, இடையன்குடி என்னுமிடத்தில் தங்கி, ஐம்பது ஆண்டுகளுக்கு மேல் கிறிஸ்தவ

சமயப் பிரச்சாரம் செய்து, பெரும்பாலானவர்களை கிறிஸ்தவ சமயத்தில் சேர்த்தார். பாலைவனம் போன்றிருந்த இடத்தைச் சோலை வனமாக்கி, கிறிஸ்தவக் கோயில், உயர்நிலைப் பள்ளி முதலியவற்றை நிறுவினார். 1877-ல் திருநெல்வேலி பிஷப் (Bishop) ஆனார். கோடைகாலத்தில் தங்க, கொடைக்கானலிலும் இல்லம் ஒன்று அமைத்துக் கொண்டார். இருபத்தொன்பதாவது வயதில் எலிசா என்ற பெண்ணை மணந்து, ஒரு ஆண் பிள்ளைக்கும் இரண்டு பெண் பிள்ளைக்கும் தந்தையானார். இவரது துணைவியாரும் பேச்சுத் தமிழில் நன்கு பயிற்சி பெற்றவர். மக்கட்குத் தொண்டு புரிவதிலும் மனிதாபிமான மிக்கவராகத் திகழ்ந்தார். 1877-ல் ஏற்பட்ட பஞ்சத்தைப் போக்க வேண்டிய முயற்சிகள் செய்தார். வரலாற்றுத் துறையிலும் தொல் பொருள் ஆய்வுத் துறையிலும் இவருக்கு மிகுந்த ஈடுபாடு உண்டு.

கால்டுவெல் சமயத்தொண்டுக்கிடையே 37 ஆண்டுகள் தமிழைக் கற்பதிலே செலவழித்தார். அதனால்தான் தமிழ் மொழியில் ஆழ்ந்த புலமை ஏற்பட்டது. சமயப்பணிகளுக்கிடையே மொழி ஆராய்ச்சிப் பணியையும் தொடர்ந்து நடத்தினார். தமிழ் மட்டுமின்றி தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலிய மொழிகளையும் கற்றார். இவரைப் பன்மொழிப் புலவர் என்றே கூறலாம். இவர் இயற்றிய நூல்கள் :

1. A Comparative Grammar of the Dravidian or South Indian family of Languages,
   Harrison, London, 1856

2. Political and general history of the District of Tinnevelly, in the Presidency of Madras from the earliest period to its cession to the English government in A. D. 1801,
   Government Press, Madras

3. Records of the early History of the Tinnevelly mission, the society for promotiong Christian Knowl-

edge and the socicty for the propagation of the gospel in foreign par:s
Higginbothams Co; Madras, 1881

4 Pa:rata kanta Pura:tanam,
The Christian Literature Society
Madras, 1893.

5. Elementary catechism, S. P. C. K. Neyyur, 1855

6. Rudimentary catechism on confirmation S P. C. K; Madras, 1887

7. Narkarunai tiya:na ma:lai, 1858

8. Ta:marait tata:kam, 1871.

'திராவிட மொழி ஒப்பிலக்கணம் அல்லது தென்னிந்திய மொழிக் குடும்பம் (A Comparative Grammar of the Dravidian or South Indian family of languages)' என்ற நூலே உலக அரங்கில் டாக்டர் கால்டுவெல்லின் புகழைச் சுடர்விடச் செய்தது. தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு போன்ற மொழிகள் இந்தோ - ஆரிய மொழிகளிலிருந்தும் முண்டா மொழிகளிலிருந்தும் மாறுபட்டன எனத் திட்டவட்டமாக விளக்கியதுடன் இவற்றைத் 'திராவிட மொழிகள்' என்ற பெயரில் உலகறியுமாறு செய்தார். திராவிட மொழிகள் ஆரிய மொழிகளிலிருந்து மாறுபட்டன என்று கூறியதுடன் சமஸ்கிருத மொழியிலும் தமது செல்வாக்கை நிலைநிறுத்தியுள்ளன எனக் கூறிச் செல்கிறார். சித்திய மொழிகளுடன் திராவிட மொழிகளை ஒற்றுமைப் படுத்திக் காட்டினார். திராவிடமென்ற சொல் சில காலங்களில் தமிழை மட்டுமே குறிக்கப் பயன்பட்டதாயும் இக்காலத்தில் கூட அவ்வாறு சில வேளைகளிற் பயன்படுத்தப்படுவதாயும் கூறும் கால்டுவெல் தம்மைப் பொறுத்தவரையில் தென்னிந்திய மொழிக்குடும்பத்தினை அழைப்பதற்கான தனிப்பெரும் பொதுச்சொல்லாகத் 'திராவிடம்' என்ற சொல்லே அமைந்திருப்பதால் அச் சொல்லைத் தேர்ந்தெடுத்ததாகக் குறிப்பிடுகின்றார். 'திராவிட மொழிகளுள்ளே பழமையான பண்புமொழியாக விளங்கும் தமிழானது, பெருமளவு இலக்கிய கருவூ

லங்களையும் தொன்மையான சொல்வடிவ வேறுபாடுகள் பலவற்றையும் கொண்டு விளங்குவதால் அது தனக்குரியதாகிய முதலிடத்தை வகிக்கின்றது' (Introduction P. 6) என்று குறிப்பிடுகின்றார். பொருளடக்கமே இருபத்திநான்கு பக்கங்களைக் கொண்டது. தென் இந்திய மொழிக்குடும்பத்தின் தனிவரலாறு, இலக்கண அமைப்பிலே காணப்படும் ஒற்றுமை, திராவிடமொழிகளுக்கும் இந்தோ - ஐரோப்பிய மொழிகளுக்கும் காணப்படும் வேற்றுமைகள், சித்திய மொழித் தொடர்பு முதலியவற்றைப் பற்றி விரிவாக ஆராய்ந்துள்ளார்.

கால்டுவெல் தம்முடைய முதல்பதிப்பில் ஒன்பது மொழிகளையே திராவிட மொழிகள் எனக் கூறுகின்றார். இவற்றைத் திருந்திய மொழிகள் (Cultivated languages) திருந்தா மொழிகள் (Uncultivated languages) என்று இருவகையாகப் பிரிக்கின்றார். தமிழ், மலையாளம், தெலுங்கு, துளு, கன்னடம் முதல் பிரிவையும் கூயி, கோண்டி, கோத்தா, தோடா இரண்டாவது பிரிவையும் சார்ந்ததாகும். கால்டுவெல்லின் முதற் பதிப்புக்கும் இரண்டாம் பதிப்பிற்கும் வேறுபாடு உண்டு. முதல் பதிப்பிற்கும் இரண்டாம் பதிப்பிற்குமிடையே வெளிவந்த நூற்களும் கட்டுரைகளும் கால்டுவெல்லின் கவனத்தைக் கவர்ந்தன. குருக் (Kurukh) மால்தோ (Malto) போன்ற மொழிகள் திராவிட மொழிகள் என்ற எண்ணம் உறுதிப்பட்டது. முதல் பதிப்பில் 9 மொழிகளைப் பற்றிப்பேசிய கால்டுவெல் இரண்டாவது பதிப்பில் குடகு மொழியைத் தமிழ், மலையாளம், கன்னடம், துளு, தெலுங்கு ஆகிய மொழிகளுடனும் குருக், மால்தோ ஆகியவற்றை கோத்தா, தோடா, கோண்டி, கூயி ஆகிய மொழிகளுடனும் இணைத்து திராவிட மொழிகள் பன்னிரண்டு எனக் குறிப்பிடுகின்றார். பிராஹூவி (Brahui) பற்றி செய்திகளைப் பின்னிணைப்பாக (Appendix) இரண்டாவது பதிப்பில் கொடுத்துள்ளார்.

கால்டுவெல் அவர்கள் இந்நூலை வெளியிட்டபொழுது, ஒப்பிலக்கண ஆய்வுமுறை வளராத நிலையில் இருந்தது. வரன்முறையான ஆய்வுநெறிமுறை மேற்கொள்ளப்படவில்லை. இந்நூலே உலகிலே மொழிக்குடும்பத்தைப்பற்றி எழுந்த முழுமையான முதல்நூல் என்று கூட குறிப்பிடலாம். இவரது நூலில் தமிழன் தொன்மைக்கும் பழமைக்கும் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டதாகக் கூறுவர்

சிலர், முப்பத்தியேழு ஆண்டுகள் கால்டுவெல் தமிழ் படித்ததின் விளைவாகயிருக்கலாம். அஃதொரு குறையன்று. எல்லிஸ் (1816) அவர்கள் திராவிட மொழிகளிடையே உள்ள உறவைத்தான் சுட்டிக் காட்டினார். ஆனால், இம்மொழிகள் திராவிடமொழிகள் என உல கிற்குக் காட்டிய பெருமை கால்டுவெல்லையே சாரும். கால்டுவெல் காட்டிய அடிச்சுவட்டைப் பின்பற்றி இன்று ஆய்வு செய்யும்போது திராவிடமொழிகள் இருபத்திஇரண்டு உள்ளன என்பதை ஆய்வுலகம் ஏற்றுக்கொள்கின்றது. கால்டுவெல் போட்ட வித்துதான் இன்று மரமாகக் காட்சியளிக்கின்றது. கால்டுவெல் காலத்தில் அனைத்து மொழிகளைப்பற்றிய செய்திகளும் இலக்கணக் கூறுகளும் அவர்க்கு கிடைக்கவில்லை. பழமை வாய்ந்த இலக்கண நூலான தொல் காப்பியமும் அவருக்குக் கிட்டவில்லை. தமிழ்தவிர மற்ற மொழி களுக்குரிய மூலச்சான்றுகளும் நிறைய கிடைக்கவில்லை. அவர் திராவிடமொழிக் குடும்பத்தைப் பற்றி முழுமையாக எண்ண முடிந் ததே தவிர, அம் மொழிகளுக்கிடையே உள்ள உறவுபற்றி (Inter relatinship between languages-subgroups) அவர் எண்ண முடியவில்லை. காரணம் இன்று அனைத்து திராவிட பழங்குடி மொழி களும் (Dravidian Tribal languages) விரிவாக ஆராயப்பட்டுள்ளன. இவ்வாய்வின் அடிப்படையில் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் அறிவியல் அடிப்படையில் ஆராயப்படுகின்றது. கால்டுவெல்லைத் தொடர்ந்து ஜுல்ஸ் பிளாக், எல்.வி, இராமசாமி அய்யர், கே.வி. சுப்பைய்யா, இராமகிருஷ்ணய்யா, எமனோ, பர்ரோ, பி.எஸ். சுப்பிரமணியம், செ.வை. சண்முகம், பி எச். கிருஷ்ணமூர்த்தி, ஆன்டிரனோவ் கமில்சுவலபில் போன்றோர் இத்துறையில் தொடர்ந்து ஆய்வு நடத்தி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்நூல் ஒப்பிலக்கணமாக இருப்பினும் மொழி வரலாற்றையும் வலியுறுத்திச் செல்கின்றார். இக்காலத்தை நோக்க ஒருசில குறைகள் தென் படினும் கால்டுவெல்லின் 'திராவிடமொழிகளின் ஒப்பிலக்கணம்' திராவிட மொழியியல் வளர்ச்சிக்கு அடித்தளமாக அமைந்துள்ளது என்பதை அனைவரும் ஒப்புக் கொள்ளவேண்டும். அப்பெருமை டாக்டர் கால்டுவெல் அவர்களையே சாரும்.

இவரது பரந்த கல்வியறிவைப் பாராட்டி எல்எல்.டி (LL.D) பட்டமும் டி.டி (D.D) பட்டமும் அளிக்கப்பட்டன.

டாக்டர் கால்டுவெல் அவர்கள் சென்னைப் பல்கலைக்கழகத்தின் இருபத்தியேழாவது பட்டமளிப்பு விழா சொற்பொழிவு ஆற்றியது இங்கு குறிப்பிடத்தக்கது. இவர் இராயல் ஆசியாடிக் கழகத்தின் கௌரவ உறுப்பினராகவும் (Honorary member of the Royal Asiatic Society) சென்னைப் பல்கலைக்கழக ஆய்வாளராகவும் (Fellow of the University of Madras) இருந்தார். உலகப் புகழ் பெற்ற டாக்டர் கால்டுவெல் அவர்கள் கொடைக்கானலில் 1891 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் இருபத்தியெட்டாம் நாள் காலமானார்.

தமிழ் கூறு நல்லுலகம் உள்ளவரை அவரது வாழ்வும் வரலாறும் என்றும் நிலைத்திருக்கும்.

திராவிட மொழிகளும் பேசும் மக்கள் தொகையும்

திராவிட மொழிகள்

தென் திராவிட மொழிகள்	நடுத் திராவிட மொழிகள்	வட திராவிட மொழிகள்
தமிழ் (30,465,442)	தெலுங்கு (37,645,439)	குருக் (1,132,931)
மலையாளம் (16,994,421)	கோண்டி (1,384,321)	மால்தோ (88,644)
கன்னடம் (17,305,629)	கோயா (140,776)	பிராகுய் (275,000)
குடகு (17,172)	கூயி (510,907)	
துளு (934,849)	கூவி (168,027)	
தோடா (765)	கோலாமி (46,065)	
கோத்தா (862)	பர்ஜி (84,607)	
கொரகா (4000)	கதபா (8401)	
	கொண்டா (12,298)	
	நாயக்கி (1500)	
	பெங்கோ (1254)	
	மண்டா	

— டாக்டர் ச. அகத்தியலிங்கம்
உலகமொழிகள், திராவிட மொழிகள்—1
அண்ணாமலை நகர்

செயப்படு பொருள் குன்றிய/குன்றா வினைகளும், காரண வினைகளும்

H. சித்திரபுத்திரன்
தமிழ்ப் பல்கலைக்கழகம்

முன்னுரை

மொழிகளில் வினைகள் பல இலக்கணக் கூறுகளுடன் தோன்றுகின்றன. இவ்விலக்கணக் கூறுகள் பல விகுதிகள் அல்லது ஒட்டுக்கள் மூலம் வெளிக்காட்டப்படுகின்றன, செயப்படுபொருள் குன்றிய (Intransitive), குன்றா (Transitive) மற்றும் காரண (Causative) வினைகள் என்பனவெல்லாம், அவ்வினைகள் காட்டும் தொடர்நிலை அமைப்பாலும், சொற்பொருண்மையாலும் எழுந்த இலக்கணக் கூறுகளே. வினை, செயப்படுபொருளுடன் தோன்றும் பொழுது செயப்படுபொருள் குன்றாவினையென்றும், செயப்படு பொருள் இல்லாது தோன்றும் பொழுது செயப்படுபொருள் குன்றிய வினையென்றும், வினையின் தொழில் இயக்கப்பட்டு மற்றொரு எழுவாயால் செயல் நடைபெறும் பொழுது காரண வினையென்றும் பெயர் பெறுகின்றது (ஹார்ட்மான் ஸ்டார்க் 1973). இவ்வினைகளின் செயல்முறையைக்கீழ் வருவது போன்று எழுதிக் காட்டலாம்.

செயல்
எழுவாய் $_1$ ——→ குன்றிய / குன்றா வினை
வினை
இயக்கு செயல்
எழுவாய் $_1$ ——→ எழுவாய் $_2$ ——→ காரணவினை

மேற்கண்டதல் வினையின் செயல் எழுவாய்$_1$ ஆல் செய்யப்படுமானால் அது செயப்படுபொருள்குன்றா/குன்றிய வினைஎன்றும் அதன்செயல் எழுவாய்$_1$ ஆல் இயக்கப்பட்டு எழுவாய் $_2$ ஆல் செய்யப்படும் பொழுது காரண வினையென்றும் பெயர் பெறுகிறது. காரணவினையின் செயல் எழுவாய்$_2$ ஆல் மட்டும்தான் செய்யப்படுகிறதே அன்றி எழுவாய்$_1$ ஆல் அல்ல. இங்கு எழுவாய்$_1$ ஒரு காரண எழுவாயாகத்தான் செயல்படுகிறது என்பது வெளிப்படை. வினைகள் எப்பொழுதும் செயப்படுபொருள் குன்றியோ அல்லது குன்றாமலோ தோன்றும். ஆனால் காரண வினைகளாகத் தோன்றா. காரணவினைகள் எப்பொழுதும் செயப்படுபொருள் குன்றாமலே தோன்றும்.மாறாக செயப்படுபொருள் குன்றா வினைகள் எப்பொழுதும் காரண வினைகளாகத் தோன்றுவதில்லை.

ஆங்கில மொழியில் இவ்விலக்கணக் கூறுகளை விளக்கத் தனி விகுதிகளோ அல்லது விதிமுறைகளோ (Process) இல்லை. இம்மொழியில் வினைகள் செயப்படுபொருள் குன்றிய அல்லது குன்றாதனவாய் எவ்வித விகுதி இணைப்பும் (suffixation) அல்லது உள்ளமைப்பு மாற்றமும் (Internal change) அதாவது உருபன் நிலையில் இன்றிச்செயல்படுகின்றன. ஒருவினையே ஒருசூழலில் செயப்படுபொருள் குன்றிய வினையாகவும் மற்றொன்றில் செயப்படுபொருள் குன்றா வினையாகவும் செயல்படுகின்றது. எனவே இவ்வினைகளை, அவை தோன்றும் சூழல் (Context) மூலம்தான் இனங்கண்டுகொள்ளமுடியும். எடுத்துக்காட்டாகக் கீழ்க்கண்ட சொற்றொடர்களைக் காண்போம்.

செயப்படுபொருள்குன்றிய வினைகள்

1. The letter *dated* 29 th November' 1981
2. Suspicion *lurked* in his mind
3. I am dying for a cup of coffee
4. How frightful to have a husband who snores

செயப்படுபொருள்குன்றா வினைகள்

5. I *consoled* him
6. We should *control* our mind

7. He can *express* himself eloquently

8. Rama purchased a book

பொது வினைகள்

9. The lyric *sings* well (Int)

9a. She sang the baby to sleep (Tr)

10. Arun *Played* extremely well (Int)

10a. You should not *Play* tricks (Tr)

11. I *turned* aside (Int)

11a. He *turned* the wheel (Tr)

12. He left yesterday (Int)

12a. Mani *left* the school (Tr)

சொற்றொடர்கள் 1-4ல் வரும் வினைகள் எப்பொழுதும் செயப்படு பொருள் குன்றிய வினைகளாகவும், 5முதல் 8வரையுள்ளவை எப் பொழுதும் செயப்படுபொருள் குன்றா வினைகளாகவும் தோன்றுகின் றன. ஆனால் 9-12 வரை வரும் வினைகள் ஒருசூழலில் செயப்படு பொருள் குன்றிய வினைகளாகவும் (9, 10, 11, 12), மற்றொன்றில் குன்றா வினைகளாகவும் (9a, 10a, 11a, 12a) தோன்றுகின்றன. ஆங்கிலமொழியில் பெரும்பான்மையான வினைகள் மேற்கண்டது போன்ற பொது வினைகளாகவே (Common verbs) காணப்படுகின் றன என்பது இங்கு சிறப்பாக நோக்கத்தக்கது. இதைப்போலவே காரண வினைகளைக் குறிக்கவும் இம்மொழியில் தனியொரு விகு தியோ அல்லது விதிமுறையோ இல்லை. குறிப்பிட்ட சில வினை களைக் கையாளுவதன் மூலம் இவ்விலக்கணக் கூறுகள் வெளிக் காட்டப்படுகின்றன.

எடுத்துக்காட்டு:

The king *made* the soldiers to fight

The bettles *caused* the buds to bloom.

திராவிடமொழிகளில் இவ்விலக்கணக் கூறுகள் அமைப்பு நிலையிலும் (Structure level), தொடர்நிலையிலும் (Syntactic level), பொருள்

நிலையிலும் (Semantic level) ஒன்றுக்கொன்று மாறுபட்டுத் தோன்றுகின்றன. இவ்விலக்கணக் கூறுகள் சில சொல்லாக்கங்கள் மூலமாகவும், விகுதிகளின் மூலமாகவும் வெளிக்காட்டப்படுகின்றன (கால்டுவெல், 1856 : 53). உதாரணமாகத் தமிழில் சில செயப்படுபொருள் குன்றாவினைகள், செயப்படுபொருள் குன்றிய வினைகளிலிருந்து ஒலிகளின் உள்மாற்றங்கள் (Internal charge) மூலமாகவும், விகுதிகளைச் சேர்பதன் மூலமாகவும் வருவிக்கப்படுகின்றன. காரண வினைகள், செயப்படுபொருள் குன்றிய/குன்றா வினைகளுடன் காரணவினை விகுதிகள் இணைவதால் தோன்றுகின்றன.

எடுத்துக காட்டு :

உள்மாற்றம்

பெருகு	—	பெருக்கு
ஓடு	—	ஓட்டு
அடங்கு	—	அடக்கு
திரும்பு	—	திருப்பு
வருந்து	—	வருத்து
அமைந்து	—	அமைத்து

விகுதிகளின் இணைப்பு

நட	—	நடத்து	
பாய்	—	பாய்ச்சு	
செய்	—	செய்வி	காரணவினை
வளர்	—	வளர்ப்பி	காரணவினை
படி	—	படிப்பி	காரணவினை

மேற்காணும் இலக்கணக் கூறு விகுதிகளும் (Grammatical suffixes), சொல்லாக்க விதிகளும் (Process of word formation) திராவிட மொழிகளில் மாறுபட்டுக் காணப்படுகின்றன. தமிழ் மொழியில் இவ்விலக்கணக் கூறுகள் வினைப் பாகுபாட்டின் (Verb classification) அடிப்படைப் பண்புகளாகக் கருதப்படுகின்றன. இறந்த கால விகுதிகளால் மட்டுமே முன்னர் வகை செய்யப்பட்டு வந்த தமிழ் வினைகள் இவ்விலக்கணக் கூறுகளாலும் தற்கால மொழியியலாளர்களால் பகுக்கப்படுகின்றன.

இந்த ஆய்வுக் கட்டுரையில் செயப்படு பொருள் குன்றிய / குன்றா வினைகளும், காரண வினைகளும் விளக்க மற்றும் வரலாற்று அடிப்படையில் ஆராயப்படுகின்றன.

1. மரபு இலக்கணங்களின் கொள்கை

தொல்காப்பியம் இவ்விலக்கணக் கூறுகளைப் பற்றி வெளிப்படையாகவோ தெளிவாகவோ எதுவும் கூறவில்லை. மரபு இலக்கணங்களில் குறிப்பாக வடமொழி இலக்கணங்களை அடியொற்றிச் செல்வன மட்டும் இவ்விலக்கணக் கூறுகளை விளக்குகின்றன. வீரசோழியம், பிரயோகவிவேகம், இலக்கணக்கொத்து ஆகியன இவ்வகையைச்சாரும். இடைக்காலத் தமிழின் சிறந்த இலக்கணமாகக் கருதப்படும் நன்னூல் காரணவினைகளை மட்டும் காட்டிச்செல்கிறது.

1.1 தொல்காப்பியத்தில் இவ்விலக்கணக் கூறுகளைப்பற்றி தெளிவான விளக்கம் எதுவும் இல்லை. ஆனால் தொல்காப்பியர் தன்வினை, பிறவினை பற்றிக் கருத்துக் கொண்டுள்ளதாக இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் தொல்காப்பிய சொல்லதிகார சூத்திரத்திற்கு உரையெழுதும்போது கூறுவர் (தொல் 76). இவர்கள் கருத்துப்படி **தபு** என்றசொல் தன்வினையாகவும் பிறவினையாகவும் செயல்பட முடியும்.

தபு[1] — நீ சாவ / நீ சாப்பண்ணு — பிறவினை

தபு[2] — நீ சா , — தன்வினை

மேற்காட்டிய எடுத்துக்காட்டில் 1,2 என்பன முறையே உயர்ந்த தாழ்ந்த ஒலியழுத்தங்களைக் (Pitch) குறிக்கின்றன. இதுதவிர எட்டு வகையான வினைக்குறியீடுகள் (Primaries) தொல்காப்பிய சூத்திரம் 596ல் கொடுக்கப்பட்டுள்ளன. இக்குறியீடுகளை விளக்க வந்த உரையாசிரியர்கள் வினைகள் செயப்படுபொருள் இன்றியும் தோன்றலாம் எனக் குறிப்பிடுவர். வினை இலக்கணம் கூறும் தொல்காப்பியர் வினைகளில் காணப்படும் இவ்வடிப்படைப் பண்புகளைக் கூறாதது சிந்திக்கத்தக்க ஒன்றாகவே உள்ளது.

1.2 **வீரசோழியம்** செயப்படுபொருள்குன்றிய/குன்றா வினை களைக் காரிதத் தாதுவின் கீழ் குறிப்பிடுகிறது (வீசோ. 65) இதன்படி **ஆட்டு, ஆற்று, தீற்று** முதலியனகாரிதம்; இவற்றுடன் —வி—, —பி— இணையுமாயின் அது காரித காரிதம்; மேலும் —வி—, —பி— தம்மில் இருமுறை இணையின் அது காரித காரித காரிதம். இவ்விலக்கண ஆசிரியர் கூற்றுப்படி எல்லாச் செயப்படு பொருள் குன்றியவினைகளும் கேவலதாதுக்கள். இக்கேவலதாதுக் களிலிருந்து எல்லா வகை காரிதத்தாதுக்களும் தோன்றுகின்றன.

எடுத்துக் காட்டு :

ஆடு ஆறு	கேவலதாது	ஆட்டு ஆற்று	காரிதம்
ஆட்டுவி ஆற்றுவி	காரித காரிதம்	ஆட்டுவிப்ப ஊட்டுவிப்ப	காரித காரித காரிதம்

மேற்காணும் எடுத்துக் காட்டில் காரித காரிதம் காரண வினைகளா கவும் காரித காரித காரிதம் ஈரடுக்குக் காரண வினைகளாகவும் (Double causative) இருக்கக் காணலாம். வீரசோழியம் வினைச் சொற்களைப் பகுக்காமல் அவற்றின் முழுவடிவத்தையும் அப்படியே கொடுத்துள்ளது. இதற்குக் காரணம் சொல்லியல் கோட்பாட்டில் இவ்வகை காரிதச் சொற்களைப் பகுப்பது சற்று சிரமமாகத் தோன் றியிருப்பதுதான் என்று கூறுவார் சண்முகம் (1980:428). வீரசோழி யம் காரித காரிதம் என்றும் இதன் பின் வந்த நன்னூல் போன்ற மத்திய கால இலக்கணங்கள் ஈரேவல் என்றும் கூறும் வினை + காரணவினை விகுதி$_1$ + காரணவினை விகுதி$_2$ போன்ற வினை யமைப்புக்களைத் தமிழில் காணமுடிவதில்லை. இலக்கிய மொழி யிலோ அல்லது பேச்சு மொழியிலோ பயின்று வராத ஒரு சொல் அமைப்பை இவ்விலக்கண நூல்கள் கொடுப்பதின் நோக்கம் தெளி வாக விளங்கவில்லை. இவ்வகை வினைகளை விளக்கவந்த இலக் கண விளக்க நூலாசிரியரும் ஈரேவல் என்பனவெல்லாம் காரண வினைகளின் அமைப்பைத்தான் காட்டுகின்றனவே தவிர அவை ஏவலில் எவ்விதச் சிறப்பும் கொண்டிருக்கவில்லை, ஏவலில் வேண்டு மிடத்து விகுதிகள் இடப்படுகின்றன என்றும் இவ்வகைப் பகுப்பு முற்றிலும் தேவையற்ற ஒன்று என்றும் கூறுகின்றார் (இவி. 44)

வீரசோழிய உரையிலிருந்து காரித காரித கரிதம் ஆக்க செயப்படு பொருள் குன்றா (Derived transitive) வினைகளிலிருந்து மட்டும் வருவிக்கப்படுகிறதா அன்றி இயல்பு செயப்படுபொருள் (Inherent transitive) வினைகளிலிருந்தும் கேவலத்தாதுவிலிருந்தும் உருவாக்கப்படுகின்றதா என்று தெரிந்து கொள்ள முடியவில்லை. செயப்படுபொருள் குன்றா வினைகளைப் பற்றி இந்நூல் கூறியிருப்பினும் அவற்றின் அமைப்பைப் பற்றியோ அல்லது செயப்படுபொருள் குன்றிய வினைகளிலிருந்து எவ்வாறு வருவிக்கப் படுகின்றன என்பதைப்பற்றியோ கூறவில்லை.

1.3. 13ம் நூற்றாண்டு இலக்கணமான நன்னூல் காரணவினைகளைமட்டும் குறிப்பிடுகின்றது. நன்னூல் இவ்வினைகளுக்கென ஒரு தனிச் சூத்திரம் கொள்ளாமல் ஏவல் வினைகளின் கீழ் விளக்குகின்றது (நன். 138). இவ்விலக்கணக் கருத்துப்படி ஏவல்வினைகள் மூன்றுவகைப்படும். அவை : **1. செய் ஏவல் 2. செய்வி ஏவல் 3. ஈரேவல்.** இச்சூத்திரத்தின் மூலம் நன்னூல் இரண்டு காரணவினை விகுதிகளையும் (-வி-, -பி-) அவற்றின் வரன்முறைகளையும் குறிப்பிடுகின்றது. வீரசோழியம் காரிதகாரிதம் என்று குறிப்பிடுவதைச் செய்வி ஏவல் என்றும், காரிதகாரிதகாரிதம் என்று குறிப்பிடுவதை ஈரேவல் என்றும் இந்நூல் விளக்குகின்றது. மூவகை ஏவல்களுக்கும் நன்னூல் உரையாசிரியர்கள் கொடுத்துள்ள எடுத்துக்காட்டுகளைக் காண்போம்.

எடுத்துக்காட்டு:

நட வா	செய் ஏவல்	நடப்பி வருவி	செய்வி ஏவல்
		நட-ப்பிப்பி வரு-விப்பி	ஈரேவல்

நன்னூல் காண்டிகை உரையில், ஏவல் வினைகளின்கீழ் செயப்படுபொருள் குன்றாவினைகள் வருவிக்கப்படும் முறைகள் கொடுக்கப்பட்டுள்ளன.

எடுத்துக்காட்டு

பாய்	—	பாய்ச்சு	இயங்கு	—	இயக்கு
உருள்	—	உருட்டு	திருந்து	—	திருத்து
நட	—	நடத்து	தோன்று	—	தோற்று
எழு	—	எழுப்பு	ஆடு	—	ஆட்டு
துயில்	—	துயிற்று	தேறு	—	தேற்று
			உருகு	—	உருக்கு

மேற்காணும் வினைகளில் முதல்பிரிவில் விகுதிகளின் இணைப்பும் இரண்டாவதில் வினைகளில் உள்மாற்றமும் நடைபெறக் காண்கி றோம். தற்கால மொழியியலார் இவ்விரு வகைகளையும் விகுதிகள் இணைப்பின் கீழ்க்கொணர்வர்.

1.4 17ஆம் நூற்றாண்டு இலக்கண நூலான **பிரயோக விவேகம்** **'சகன்மகம்' 'அகன்மகம்'** என்று முறையே செயப்படு பொருள் குன்றா, குன்றிய வினைகளைக் குறிப்பிடுகின்றது. மேலும் இவ்விலக்கணக் கருத்துப்படி வினைகள் செயப்படுபொருள் குன்றியோ, அல்லது குன்றாமலோ தோன்றும். இவ்வினைகளுடன் —வி—, —பி— என்ற விகுதிகள் இணைவதால் காரண வினைகள் தோன்றுகின்றன (பி.வி. 35). 'வீரசோழியம்' 'காரித காரிதம்' என்று குறிப்பிடுவதை இந்நூல் 'காரிதம்' என்று குறிப்பிடுகின்றது.

எடுத்துக் காட்டு ;

நட, வா } செயப்படுபொருள் குன்றியவினை

மடி, விடு, சீ } செயப்படு பொருள் குன்றாவினை

எடுப்பித்த, உழுவித்த, தொழுவித்த, உடுவிப்பு } காரணவினை

ஆக்க செயப்படுபொருள் குன்றா வினைகளைப் பற்றியோ அல்லது அவை செயப்படுபொருள் குன்றிய வினைகளிலிருந்து எவ்வாறு வருவிக்கப் படுகின்றன என்பதைப் பற்றியோ இந்நூல் விளக்கம் தரவில்லை.

1.5 **17** ஆம் நூற்றாண்டின் மற்றொரு இலக்கணமான **இலக்கண விளக்கம்,** நன்னூல் போன்று காரண வினைகளை ஏவலின் கீழ் பேசுகிறது. ஆனால் ஏவல், செய்வி ஏவல், ஈரேவல் எனப் பிரிக்கப் படவில்லை. —வி— —பி— என்ற விகுதிகள் காரணவினை விகுதிகளாகக் காட்டப்பட்டுள்ளன, (இ.வி.44) முன்னர்க்கண்டது போல் இந்நூலாசிரியர் ஈரேவல்' என்ற வினை அமைப்பு முற்றிலும் தேவையற்ற ஒன்று என்ற கருத்தைக் கொண்டுள்ளார்.

1. 6. 17ஆம் நூற்றாண்டு இலக்கணமான **இலக்கணக்கொத்து** இவ்விலக்கணக் கூறுகளைத் 'தனிவினை' 'தொடர்வினை' என்பவற்றின்கீழ் பேசுகிறது. (இ. கொ. 65, 66, 67). இந்நூலின் கருத்துப்படி தனிவினை என்பது வினைப் பகுதிகளாகவும், தொடர்வினை என்பது பகுதிகளுடன் விகுதிகள் சேர்ந்த நிலையாகவும் உள்ளது. தனிவினை 1. செயப்படுபொருள் குன்றாவினை 2. செயப்படுபொருள் குன்றியவினை 3. பொதுவினை என மூன்றுவகைப்படுகிறது.

எடுத்துக்காட்டு:

நட போ வா வாழ்	– செயப்படுபொருள் குன்றல்	மடி முடி தேய் பிரி	- பொதுவினை
விடு வை உண் பார்	– செயப்படுபொருள் குன்றாமை		

இங்கு பொதுவினைகள் என்பது ஒரு புதிய பாகுபாடாகும். ஆயினும் இங்குக் கூறப்படும் பொதுவினைகள் ஆங்கிலப் பொதுவினைகளிலிருந்து மாறுபட்டவை. ஆங்கிலப் பொதுவினைகள் (Common verbs) எல்லா இலக்கணக் கூறுகளிலும் எவ்வித மாறுபாடுமின்றி காணப்படத் தமிழ்ப்பொது**வி**னைகள் ஏவலில் மட்டுமே ஓரே வினையமைப்புடன் மாறுபாடின்றிக் காணப்படுகிறது.

அமை	நீ அங்குஅமை, ஏவல்–குன்றியவினை நீ அதைஅமை. ஏவல்–குன்றாவினை

அமைய = தங்க — செய எச்சம் – குன்றியவினை

அமைக்க = செய்ய — செயஎச்சம் – குன்றாவினை

மேற்காணும் அமைப்புடைய வினைகளைத் தமிழில் ஒருவினைப் பாகுபாட்டின் கீழ் கொண்டுவரமுடியும். தனிவினை போன்று தொடர்வினையும் மூன்றுவகைப்படும். அவை பின்வருவன–

பிரிவார் ஆடுவார்	} தன் வினை	பிரிப்பார் ஆட்டுவார்	} பிறவினை

தேற்றா ஒழுக்கம் தேற்றிப் பிரிந்தான் ஆறினிம் தோற்றி காலம் தோற்றா	} பொது வினை

இவ்வெடுத்துக்காட்டில் தன்வினை செயப்படுபொருள் குன்றிய வினையாகவும் பிறவினை ஆக்க செயப்படுபொருள் குன்றா வினையாகவும் இருக்கக் காணலாம். மேற்காணும் பொது வினைகள் சில இடங்களில் ஆங்கிலப் பொது வினைகளுடன் ஒப்பாக உள்ளன. ஏனெனில் அவை காட்டும் பொருண்மை அவை தோன்றும் சூழல் மூலமேதான் உணரப்படவேண்டும். கீழ்க்காண்பன போன்று எட்டு வகையான பிறவினைகள் இவ்விலக்கணத்தில் கொடுக்கப்பட்டுள்ளன.

1. வினைகள் உள் மாற்றங்கள் இல்லாமல்
   கட்டு, வெட்டு

2. வினைகள் உள் மாற்றங்களுடன்
   ஆட்டினான், ஓட்டினான்

3. வினைகள் உள் மாற்றங்கள் இல்லாமல் + வி
   கூட்டுவித்து, வெட்டுவித்து

4. வினைகள் உள் மாற்றங்கள் இல்லாமல் + பி
   உண்பித்து, காண்பித்து

5. வினைகள் உள்மாற்றங்கள் இல்லாமல் + பி + பி
   நடப்பிப்பி

6. வினைகள் உள் மாற்றங்களுடன் + வி
நடத்துவித்து

7. வினைகள் உள் மாற்றங்களுடன் + பி
ஊட்டுபித்து

8. வினைகள் மாற்றங்களுடன் + வி + பி
நடத்துவிப்பி

இவ்விலக்கண ஆசிரியர் செயப்படுபொருள் குன்றா வினைகளை யும் பிறவினைகளையும், காரண வினைகளையும் வேறுவேறா கப் பிரித்துக் காணவில்லை. மேற்காணும் எட்டு வகைகளில் முதலாவதில் வினைகள் இயல்பு செயப்படுபொருள் குன்றாவினைக ளாகவும் இரண்டாவதில் ஆக்க செயப்படுபொருள் குன்றாவினைக ளாகவும் உள்ளன. ஏனையவை பலவகைப்பட்ட காரண வினைகளைக் காட்டுவனவாக உள்ளன. எடுத்துக்காட்டு 3, 4, 6, 7ல் வரும் வினை கள் தலா ஒருகாரணவினை விகுதியுடனும், 5, 8ல் வருவன இரண்டு காரணவினைவிகுதிகளுடனும் காணப்படுகின்றன. எடுத்துக்காட் டுக்கள் 3, 4ல் வரும் வினைகள் இயல்பு செயப்படுபொருள் குன்றா வினை + காரண விகுதியாகவும், 5, 8ல் வரும் வினைகள் செயப் படுபொருள் குன்றியவினை + காரணவினைகளாகவும், ஆக்க செயப்படுபொருள் குன்றாவினை + காரண விகுதிகளாகவும் உள்ளன.

1. 7. சுவாமிநாதம் (19ம் நூற்றாண்டு) இலக்கண விளக்கத் தைத் தழுவி இவ்விலக்கணக் கூறுகளை விளக்குகின்றது. மற்றைய இலக்கணங்கள் இவ்விலக்கணக் கூறுகள் பற்றி எதுவும் கூறவில்லை.

2. தமிழில் செயப்படுபொருள் குன்றா/குன்றிய வினைகள்

செயப்படுபொருள் குன்றிய/குன்றா வினைகளைப்பற்றி மொழி யியல் அறிஞர்களிடையே பல்வேறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. செயப்படுபொருள் குன்றிய/குன்றா என்ற பாகுபாடுமூலம் தமிழ் வினைகளை விளக்குவர் ஒருசாரார் [ஆர்டன், 1891; ஜோதிமுத்து, 1956; சுப்பிரமணியம், 1971; போப், 1979 (மறுபதிப்பு)] செயப்படு பொருள் குன்றிய/குன்றா என்ற வினைப்பாடு தமிழுக்கு ஏற்ற ஒன் றல்ல என்றுகூறி தன்வினை, பிறவினை என்ற குறியீடுகள் மூலம் விளக்குவர் மற்றொரு சாரார் [அகத்தியலிங்கம், 1981; பாலசுப்பிர

மணியம், 1981. கால்டுவெல் 1856, 450]. செயப்படுபொருள் குன்றிய/குன்றா வினைகளை முறையே தன்வினை, பிறவினை என்பவற்றுடன் ஒப்பிட்டு அவை தன் நோக்கு (Selfwards), பிறன் நோக்கு (Action wards), செயல் சொற்கள் (Action words) என்று கூறுவர். கால்டுவெல்லின் இச்செயல் செயப்படுபொருள் குன்றிய/குன்றா வினைகள் முறையே தன்வினை, பிறவினைகளுக்குச் சம மானவை என்ற எண்ணம் மலர வித்திட்டது.

சுப்பிரமணிய சாஸ்திரி (1947: 166) தன்வினை, பிறவினை என்ற பாகுபாட்டை ஏற்றுத் தன்வினை அதன் எழுவாயாக அவ் வினையின் தொழில் செய்பவரைக் (doer) கொண்டிருக்கும் என்றும், பிறவினை அதன் செயப்படுபொருளாக அவ்வினையின் தொழில் செய்பவரைத் தவிர மற்றையதைக் கொண்டிருக்கும் என்பார். இவர் கருத்துப்படி, தன்வினை செயப்படுபொருள் குன்றியோ அல்லது குன்றாலோ இருக்கலாம். ஆனால் பிறவினை எப்பொழுதும் காரணவினையாகவே இருக்கும். மீனாட்சிசுந்தரன் (1965 : 111) மாணிக்கம் (1973) ஆகியோர் தமிழ் வினைப்பாகுபாடு, தன்வினை, பிறவினை என்பதில்தான் உள்ளது என்று கூறுகின்றனர். அகத்திய லிங்கம் (1981 : 68) செயப்படுபொருள் குன்றிய/குன்றா என வினைப் பாகுபாட்டில் ஏற்படும் சிக்கல்களை விளக்கியுள்ளார். பாலசுப்பிரமணியம் (1981) செயப்படுபொருள் குன்றிய/குன்றா வினைப்பாகுபாடு முற்றிலும் பொருள் அடிப்படையில் எழுந்த ஒன்று என்றும் இப்பகுப்பினால் சில வினைகளை விளக்கமுடியாது என்றும கருத்துக்கொண்டுள்ளார். இவர் கருத்துப்படி கால்டுவெல் செயப்படு பொருள் குன்றிய/குன்றா வினைகளைத் தன்வினை, பிறவினைகளு டன் ஒப்பிட்டதற்குக் காரணம் எல்லாப் பிற வினைகளும் செயப்படு பொருள் குன்றாமல் தோன்றுவதும் பெரும்பான்மையான தன் வினைகள் செயப்படுபொருள் குன்றித் தோன்றுவதும் ஆகும். அகத்தியலிங்கம் (1981 : 68) தமிழ் வினைப் பாகுபாட்டை விளக்கு மிடத்தில் தன் வினை பிறவினை என்ற பாகுபாடு சொல்லியல் அடிப்படையிலானது என்றும், செயப்படு பொருள் குன்றிய / குன்றா என்ற பாகுபாடு தொடரியல் அடிப்படையிலானது என்றும் குறிப்பி டுவார். இவர் கருத்துப்படி தமிழ் வினைப்பாகுபாடு தன்வினை, பிற வினை என்பதில்தான் உள்ளது. வினைகள் அடிப்படையில்

தன்வினைகள் என்பதும், அவற்றிலிருந்து எல்லா பிற வினைகளும், காரண வினைகளும் வருவிக்கப்படுகின்றன என்பதும் இவர் கருத்து. இதன்படி தன் வினைகள் செயப்படு பொருள் குன்றியோ அல்லது குன்றாமலோ தோன்றலாம். ஆனால் பிறவினைகளும் காரணவினைகளும் எப்பொழுதும் செயப்படு பொருள் குன்றாமலே தோன்றும். இவ்விளக்கத்தைப் பின் வருமாறு எழுதிக்காட்டலாம்.



இங்கு தன்வினை$_2$ பிறவினையாக மாறும் தகுதி பெற்றது, ஆனால் தன்வினை$_1$ அவ்வாறு மாறும் தகுதியற்றது. இரண்டு தன் வினைகளும் காரண வினைகளாக மாறும் தகுதி பெற்றன.

உண், உணர், காண், பயில், நவில், போன்ற சில வினைகள் செயப்படு பொருள் குன்றிய / குன்றா வினைப் பாகுபாட்டில் செயப்படு பொருள் குன்றா வினையின் கீழ் அடக்கப்பட்டாலும் அவற்றிலிருந்து **ஊட்டு, உணர்த்து, காட்டு, பயிற்று, நவிற்று** போன்ற செயப்படு பொருள் குன்றா வினைகள் வருவிக்கப் படுகின்றன. ஒரு செயப்படு பொருள் குன்றா வினையிலிருந்து மற்றொரு செயப்படுபொருள் குன்றாவினை வருவிக்கப்படுவது இப்பாகுபாட்டில் விளக்க முடியாத ஒன்றாகவே உள்ளது. **ஊட்டு, உணர்த்து** போன்றவற்றைத் தனிவினைகளாகக் கொள்வதன் மூலம் சொல் பொருண்மை உணர்வு (Semantic relationship) மறைக்கப்படுகின்றது. தன்வினை என்ற பாகுபாட்டின்மூலம் இவ்வினைகளை விளக்க

முடியும். அதாவது **உண், உணர்** போன்றன தன்வினைகள். **ஊட்டு, உணர்த்து** என்பவை மேற் கூறிய தன்வினைகளிலிருந்து வருவிக்கப்படும் வினைகள்.

திராவிடமொழிகளின் ஒப்பிட்டாய்விற்காக செயப்படுபொருள் குன்றிய/குன்றா என்ற வினைப்பாகுபாடே இவ்வாய்வில் எடுத்துக் கொள்ளப்படுகிறது. **ஊட்டு, உணர்த்து** என்ற வினைகள் செயப்படுபொருள் குன்றாவினைகளிலிருந்து (முறையே **உண், உணர்**) வருவிக்கப்படும் ஒருவகை ஆக்கசெயப்படுபொருள் குன்றாவினையாகக் கொள்ளப்படுகிறது. இது ஒப்புமையாக்கத்தினால் (Analogy) தோன்றிய ஒருபண்பாக இருக்கலாம். இவ்வகை வினைகளின் எண்ணிக்கை மொழிகளில் மிகக் குறைவாக உள்ளதால், வினைப் பாகுபாட்டில் இவற்றைத் தனியாக ஒரு குறியிட்டுக்காட்டமுடியும். உதாரணமாக இவ்வகை வினைகளை செயப்படுபொருள் குன்றா வினையின் கீழ் **+உண், +உணர், +பயில் +நவில்** எனக் குறிப்பிடலாம். இவ்வகையில் வரும் பெரும்பான்மையான வினைகள் **-ந்த்-** இறந்த காலம் கொள்பவையாகவே உள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கது

தமிழில் செயப்படுபொருள் குன்றா வினைகள் நான்கு முறைகளில் வருவிக்கப்படுவதாக கால்டுவெல் (1856 : 450) கூறுகின்றார். அவை பின் வருவன;-

1. வினையின் ஈற்றசையிலுள்ள (மெ)ல்லொலி + (ஒ)ல்லொலியை அல்லது வல்லொலியை இரட்டிப்பதின் மூலம்:

(மெ) ஒ$_1$ → ஒ$_1$ ஒ$_1$

எடுத்துக்காட்டு:

மெவ$_1$ → வ$_1$ வ$_1$

அடங்கு — அடக்கு

திருந்து — திருத்து

நிரம்பு — நிரப்பு

வ$_1$ → வ$_1$ வ$_1$

உருகு — உருக்கு

பெருகு — பெருக்கு

2. கால விகுதிகளின் மெய்யெழுத்துக்களை வல்லினமாக்குவதன்மூலமும், இரட்டிப்பதன் மூலமும்:
எடுத்துக்காட்டு:

வல்லினமாக்குதல்

சேர்ந்தான் — சேர்த்தான்
சேர்வான் → சேர்ப்பான்

இரட்டித்தல்

சேர்கிறான் — சேர்க்கிறான்

3. செயப்படுபொருள் குன்றா வினை விகுதிகளை இணைப்பதன்மூலம்,

எடுத்துக்காட்டு:

தாழ் — தாழ்த்து
சுழல் — சுழற்று
மீள் — மீட்டு

4. வினையிறுதி மெய்யெழுத்துக்களான 'ட்', 'ற்' என்பனவற்றை இரட்டிப்பதன்மூலம்,

எடுத்துக்காட்டு:

வாடு — வாட்டு
ஓடு — ஓட்டு
மாறு — மாற்று

மேற்காணும் நான்குமுறைகளில் மூன்றுவித சொல்லியல் விதிகள் செயல்படுவதைக் காணலாம். முதல்விதியில் (முறைகள் 1, 2, 4) வினையின் ஈற்றசையில் ஒலிமாற்றமும் (Sound change), இரண்டாவதில் (முறை - 3) விகுதிகளின் இணைவும் (Suffixation), மூன்றாவதில் (முறை- 2) கால விகுதிகளின் மாற்றமும் (change of tense) நடைபெறக் காண்கிறோம். வினைகளின் ஈற்றசையில் நிகழும் மாற்றங்களை விளக்க எந்த விகுதியையும் அல்லது சந்தியையும் கால்டுவெல் பயன்படுத்தவில்லை. ஆனால் தற்கால

மொழியியலாளர் இம்மாற்றங்களை விளக்கத் தனித்தனி விகுதி களைப் பயன்படுத்துகின்றனர். எடுத்துக் காட்டாக சா. வே. சுப்பிரமணியன் சிலப்பதிகார மொழி ஆய்வில் பின் வருவனவற்றைச் செயப்படு பொருள் குன்றா விகுதிகளாகக் கொடுத்துள்ளார்.

{ -த்- } | - ḏ - ~ - z - ~ - * - ~ - ச்ச் - ~ -த்த்

- ~ - X - x - க்க் - ~ - ப்ப் - |

இவரது ஆய்வில் - த் - அடிப்படையாகக் கொள்ளப்பட்டுப் பிற விகுதிகள் மாற்றுருபுகளாக ஒலியியல் மாற்றும் சொல்லியல் அடிப் படையில் வரையறை செய்யப்படுகின்றன. எல்லா வகை வினை மாற் றங்களும் இவரது ஆய்வில் பல மாற்றுருபுகள் மூலம் விளக்கப்படு கின்றன. இதனால் மாற்றுருபுகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டு சந்தியும் விவரிக்கப் படுகின்றது. பொதுவாக இவ்வாய்வால் எவ்வித எளிமையும் (Economy) முழுமையும் (Completness) ஏற்படுவதில்லை. ஆகவே மொழியியல் அறிஞர்கள் (அகத்தியலிங்கம். 1970; சண்முகம்; 1970; சுப்பிரமணியம், 1971) மிக்க குறைவான சந்தி விதிகள் மூலம் எல்லா ஒலி மாற்றங்களையும் விளக்கி மாற்றுருபு களின் எண்ணிக்கையை மிகவும் குறைத்தனர். அகத்தியலிங்கம், -X -, - த்த் - என்ற இரண்டே விகுதிகள் மூலம் எல்லா ஆக்க செயப்படு பொருள் குன்றா வினைகளையும் விளக்குகின்றார். இவர் கருத்தின் படி - X - காலமாற்றத்தினையும், - த்த் - பிறவகை ஒலி மாற்றங்களையும், விகுதிகளின் இணைவையும் விளக்கும்.

1. (மெ) $வ_1 \rightarrow வ_1\ வ'_1 /-$ & -த்த்-
   -த்த்-′ $\rightarrow \phi/\ வ_1\ வ_1$ & – &
   அடங்க்-த்த்- → *அடக்கத்த்-
   *அடக்க்த்த் → அடக்க் → அடக்கு

2. -X-
   அமை X த்- → அமைத்த்-
   அசை-X-த் → அசைத்த்-

சுப்பிரமணியம் (1971) திராவிட மொழிகளின் ஆக்கசெயப்படு பொருள்குன்றாவினைகளை -ந்த்-, -ப்ப்- என்ற இரண்டே விகுதி

கள் மூலம் விளக்குகின்றார். முன்னர்க் கண்டது போல் அதிக மான மாற்றுருபுகளைப் புகுத்தி மொழியைச் சிக்கலாக்குவதைவிட குறைந்த விகுதிகள் அல்லது விதிமுறைகள் மூலம் எளிமைப் படுத்து வது ஆய்வில் ஏற்றதொன்றாகவும் மற்ற மொழிகளுடன் ஒப்பிடும் பொழுது ஒரு ஒழுங்கமைப்புக் கொண்டதாகவும் விளங்குகிறது.

2.1 செயப்படுபொருள்குன்றாவினைகளின் வகைகள்

இரண்டுவித செயப்படுபொருள் குன்றாவினைகள் மொழிகளில் காணக்கிடைக்கின்றன. அவை: 1. இயல்பு செயப்படுபொருள் குன்றாவினை (Inherent transitive). 2. ஆக்கசெயப்படுபொருள் குன்றாவினை (Derived transitive). இரண்டாவது வகை வினைகள் செயப்படுபொருள் குன்றிய வினைகளிலிருந்து விகுதிகளின் இணைவு மூலமோ அல்லது உள்மாற்றங்கள் மூலமோ தோன்றுகின்றன. முதல் வகை வினைகள் அடிப்படையிலே செயப்படுபொருள் குன்றா வினைகளாக உள்ளன. இவற்றிற்கென தனியாக செயப்படு பொருள், செயப்படுபொருள் குன்றிய வினைகள் இல்லை. இவ்வினைப் பாகுபாட்டைக் கீழ்வருவது போன்று எழுதிக் காட்டலாம்.



இப்பாகுபாட்டில் முதல் பிரிவு வினை$_2$ன் கீழ் அமையும் செயப்படு பொருள் குன்றிய வினைகள், செயப்படுபொருள் குன்றாவினைகளாக மாறத் தகுதிபெற்றன. இவ்வாறு வருவிக்கப்படும் செயப்படுபொருள் குன்றாவினைகள் ஆக்கவினைகளாக இரண்டாவது பிரிவு வினை$_2$ன் கீழ் அடக்கப்படுகின்றன.

2.2 செயப்படுபொருள் குன்றாவினை விகுதிகள்

கீழ்க்காணும் ஐந்து விகுதிகள் செயப்படுபொருள் குன்றா விகுதிகளாக தமிழ் இலக்கியங்களில் காணக் கிடைக்கின்றன.

1. -X- 2. -த்- 3. -த்த்- 4. -ப்ப்- 5. -ச்ச்- இவ்விகுதிகளில், -ப்ப்-, -ச்ச்- என்பன மிகக் குறிப்பிட்ட சில வினைகளில் மட்டுமே தோன்றுகின்றன. இவ்வாய்வில் -த்த்- என்ற விகுதியே அடிப்படை விகுதியாகக் கொள்ளப் படுகிறது. மற்ற விகுதிகள் சொல்லியல் நிலையில் வரையறை செய்யப்படுகின்றன.

2.2.1 —X—

இது கால இடை நிலைகளின் மாற்றத்தால் வருவிக்கப்படும் செயப்படுபொருள் குன்றா வினைகளை விளக்கப்பயன்படுகிறது. -ந்த்- இறந்தகால இடைநிலை கொள்ளும் செயப்படுபொருள் குன்றிய வினைகள் இவ்விகுதியின் இணைவால் -த்- இறந்தகாலம் கொளளும் வினைகளாக மாற்றம் பெறுகின்றன. இவ்விகுதியை அடுத்து வல்லினத்தை முதலாகக் கொண்ட விகுதி வரின், வல்லெழுத்து இரட்டிக்கும். மற்றஇடங்களில் இவ்விகுதி ϕ வாக மாற்றம் பெறும்.

எடுத்துக் காட்டு:

அவி - X - த் - அ→ அவித்த அகம் 70 - 15

ஒழி - X - த் - உ→ ஒழித்து பதி 72 - 13

கிழி - X - த் - அ→ கிழித்த பத்து 4 - 430

தேய் - X - த் - அ→தேய்த்த பரி 21 - 70

தொலை - X - த் - அ→ தொலைத்த கலி, 42 - 1

அழி - X - த் - உ → அழித்து குறள் 359

ஒழி - X - மின் → ஒழிமின். சிலம்பு 30 - 198, மணி 8-60

பிரி - X - த் - அ → பிரித்த பெருங். 1.33 - 137

மறை - X - த் - அ → மறைத்த பெரிய. 1560 - 3

இவ்விகுதி -ச்ச்-, -ப்ப்- என்ற விகுதிகளுடன் குறிப்பிட்ட சில வினைகளில் உறழ்நிலையில் (Free variation) தோன்றும்.

எடுத்துககாட்டு :

தொலைத்த ~ தொலைச்சிய நற். 205 - 3

ஒழித்து ~ ஒழிப்பி பெருங். 2.9 - 229

குறிப்பிட்ட ஒரு வினைப்பாகுபாட்டின் கீழ் அமையும் வினைகளில் மட்டுமே இவ்விகுதி தோன்றுவதால் வரலாற்று நிலையில் எந்த மாற்றமும் பெறுவதில்லை. எல்லாக்காலத் தமிழ் இலக்கியங்களிலும் காணக் கிடைக்கிறது.

2. 2. 2. - த் -

- இன் - இறந்தகால இடை நிலை தோன்றும் வினைகளில் இவ்விகுதி தேன்றுகிறது. இவ்விகுதி, வினைகளின் ஈற்றசையிலுள்ள மெல்லெழுத்து + வல்லெழுத்துக்களையோ அல்லது வல்லெழுத்துக்களையோ இரட்டிக்கும். [(மெ) வி → விவ்]

எடுத்துக் காட்டு :

அடங்க் - த் - இ → அடக்கி	புறம் 91 - 10
X ஏற் - த் - இ→ ஏற்றி	புறம் 168 - 10
அழுந்த் - த் - இ - - அ → அழுத்திய	அகம். 61 - 8
ஓட் - த் - இ → அ ஓட்டிய	நற். 270 - 9
திருந்த் - த் - இ - அ → திருத்திய	பரி. 1 - 39
ஏற் - த் - இ → ஏற்றி	கலி. 95 - 27
நீங்க் - த் - ப் - அள் → நீக்குவள்	மணி. 21 - 81
கூட் - த் - இன் - ஏன் → கூட்டினேன்	பெருங். 48 - 63
ஆக் - த் - இ - ф → ஆக்கி	அப்பர். 43 - 1
நீங்க் - த் - ப் - ஆய் → நீக்குவாய்	வல்லி. 4-3-22-4

குறிப்பிட்ட வினைகளில் மட்டுமே இவ்விகுதியும் தோன்றுவதால் வரலாற்று நிலையில் எந்தவித மாற்றமும் அடைவதில்லை.

2. 2. 3. - ச்ச் -

இவ்விகுதி **இழி, ஒழி, காய், தொலை, பாய்.** ஆகிய ஐந்து வினைகளில்மட்டும் தோனறுகிறது. இவ்வினைகள் அனைத்தும் - ந்த் - இறந்தகாலம் கொள்ளும் வினைகளாகவே உள்ளன. இது - ப்ப் - என்ற விகுதியுடன் **ஒழி** என்ற வினையிலும், - த்த் - விகுதியுடன் **காய், பாய்** போன்ற வினைகளிலும் - X - விகுதியுடன் **தொலை** என்ற வினையிலும் உறழ் நிலையில் தோன்றும்.

எடுத்துக்காட்டு:

தொலை - ச்ச் - இ - ϕ → தொலைச்சி புறம். 69 - 10; அகம். 3 - 7 ; ஐங். 365 - 1 ; நற். 43 - 3; பத்து. 4 - 141

தொலை - ச்ச் - இ - அ → தொலைச்சிய நற். 205 - 3; பத்து. 10 - 176

தொலை - ச்ச் - உம் - ϕ → தொலைச்சும் அகம். 182 - 8

தொலை - ச்ச் - இ - அ → தொலைச்சிய சிலம்பு. 10 - 131

பாய் - ச்சி - இ - ϕ → பாய்ச்சி பெருங். 4 - 12 - 84 ; அப்பர். 104 - 3

இழி - ச்ச் - உம் - ϕ → இழிச்சும் அப்பர். 629 - 3

ஒழி - ச்ச் - பான் → ஒழிச்சுவான் நாலாயிரம் 840

இழி - ச்ச் - இ - ϕ → இழிச்சி பெரிய. 1004 - 1

காய் - ச்ச் - இ - ϕ → காய்ச்சி பெரிய. 742 - 2

-ப்ப் -, -த் - மற்றும் - த்த்- என்பனவற்றுடன் இவ்விகுதி உறழ் நிலையில் தோன்றும்.

எடுத்துக்காட்டு:

பாய்ச்சிய (பெருங். 4. 12 - 84) ~ பாய்த்திய (பெரிய. 3577 -1)

ஒழிச்சுவான் (நாலாயிரம் 840 - 1) ~ ஒழிப்பி (பெருங். 2. 9 - 299)

தொலைச்சிய (நற். 205 3) ~ தொலைத்த (கலி. 42 - 1) எல்லாக்காலத் தமிழிலும் மிகக் குறைந்த எண்ணிக்கையில் இவ் விகுதி பயின்று வருகின்றது. இவ்விகுதி தோன்றும் வினைகளுள் தொலை என்ற விகுதியே அதிகம். கழி, ஒழி என்ற இரு வினை களும் தலா ஒரு இடத்தில் மட்டும் காணப்படுகிறது. இவ்விகுதி அதிகமாக வினையெச்சங்களில் -இ- இடைநிலைக்கு முன்னர்க் காணப்படுகிறது.

2. 2. 4. - ப்ப் -

இவ்விகுதி அல×, ஒழி, கழி, இட×, பர× போன்ற வினைகளில் மட்டும் தோன்றுகிறது. இது - × - உடன் ஒழி, கழி போன்ற வினைகளிலும்; - ச்ச் - விகுதியுடன் ஒழி என்ற வினையிலும்; - த்த் - விகுதியுடன் கிட× என்ற வினையிலும் உறழ் நிலையில் தோன்றும்.

எடுத்துக் காட்டு :

கழி - ப்ப் - இ - ϕ → கழிப்பி	புறம். 152 - 20; நற். 369 - 3; அகம். 120 - 4; பத்து 2 - 111
கிட× - ப்ப் - இ - ϕ → கிடப்பி	அகம். 107 - 4; புறம். 93 - 8; குறு. 114-1
பர× - ப்ப் - இ - ϕ → பரப்பி	புறம். 16 - 2; அகம். × 14-7; குறு. 335-2, பதி 21-21; நற். 150 - 2ϕ, பத். 1 - 242
கழி - ப்ப் - இ - அ → கழிப்பிய	பரி. 2 - 15; சிலம்பு 8 - 42; 42
கழி - ப்ப் - இன் → கழிப்பின்	மணி 24 - 42
பர× - ப்ப் - இ - ϕ → பரப்பி	பரி. 7 - 15; மணி 3-16. கலி. 123 - 6; சிலம்பு 4 - 1
அல× - பப் - இ - அ →	அலப்பிய கலி. 75 - 7
ஒழி - ப்ப் - இ - ϕ → ஒழிப்பி	பெருங் 29 - 229
கழி - ப்ப் - இ - ϕ → கழிப்பி	பெருங் 3 - 22 - 227
பர× - ப்ப் - இ ϕ → பரப்பி	பெருங் 1 - 32 - 78; நாலாயிரம். 924 - 3
பர× - ப்ப் - இ - அ → பரப்பிய	அப்பர். 1018 - 3
பர× - ட்ப் - இன் - அர் → பரப்பினர்	பெரிய. 953 - 4

பர$\times$ - ப்ப் - உர் ϕ → பரப்பும் வில்லி. 6.1 ; 16 - 3

-ப்ப்-, -ந்த்- என்ற விகுதிகளுடன் உறழ் நிலையில் தோன்றலும் உண்டு.

எடுத்துக்காட்டு :

கிடப்பி (புறம். 93-8) ~ கிடத்தி (மணி. (28-13) இவ்விகுதி அதிக எண்ணிக்கையில் வழக்கிலில்லாவிட்டாலும் எல்லாக்காலத் தமிழிலும் பயின்று வந்துள்ளது. **பர$\times$** என்ற வினையுடன் இவ்விகுதி அதிக எண்ணிக்கையில் காணப்படுகின்றது. **அல$\times$, ஒழி** என்ற வினைகள் தலா ஒரு இடத்தில் மட்டும் இவ்விகுதியுடன் காணப்படுகின்றது. வினையெச்சங்களில் இவ்விகுதி அதிகம் வழக்கிலுள்ளது.

2. 2. 5. -த்த்-

-ந்த்- இறந்தகாலம் தோன்றும் வினைகளிலும், -த்- இறந்த காலம் தோன்றும் வினைகளிலும் இவ்விகுதி வருகின்றது. இது -ச்ச்-, -ப்ப்- என்பனவற்றுடன் உறழ்நிலையில் தோன்றும்.

எடுத்துக் காட்டு :

உருள் + த்த் + இ + ϕ → உருட்டி புறம். 152-3

அகல் - த்த் - இ - ϕ → அகற்றி அகம் 399-9

சேர் - த்தி - இ - ϕ சேர்த்தி குறு 69-3

இரு $\times$ - த்த் - இ - ϕ → இருத்தி சிலம்பு, 13-41

பயில் + த்தி + இன் + - ஆர் → பயிற்றினார் வில்லி 8. 17 - 147 - 2

விடு $\times$ த்த் + உ → விடுத்து வில்லி 1.5 வி 43 -3

குறிப்பிட்ட வினைகளுடன் மட்டும் தோன்றுவதால் இவ்விகுதி வரலாற்று நிலையில் எந்தமாற்றமும் அடையவில்லை. இவ்விகுதி தோன்றும் -த்- இறந்தகாலம்கொள்ளும் வினைகள் மிகக்குறைவு. ல், ள் என்ற எழுத்துக்களைக் கொண்டு முடியும் வினைகளுடன் சேரும் நிலையில் இவ்விகுதி பல சந்தி மாற்றங்களுக்கு உள்ளாகின்றது.

மேற்காணும் ஐந்து விகுதிகளும் பலவகையான வினைப் பாகு பாட்டில் தோன்றுவதைக் கீழுள்ளது போல எழுதிக் காட்டலாம்.



2–3. செயப்படுபொருள் குன்றாவினை விகுதிகளின் வரலாறு

மேற்கண்ட ஐந்து விகுதிகளும் சொல்லியல் வரம்பிற்கு உட் பட்டவை. இவ்விகுதிகளுள் -X-, -த்-, -த்த்- என்பன தங்களுக் கெனத் தனிப்பட்ட வினைகளைக் கொண்டன. எஞ்சியவை குறிப் பிட்ட சில வினைகளில் மட்டும் காணப்படுகின்றன. -ச்ச்-, -ப்ப்- என்ற இரு விகுதிகளும் உறழ்நிலையில் தோன்றுகின்றன. இவை இரண்டும் -X-, -த்த்- என்ற விகுதிகளுடன் சில குறிப்பிட்ட வினைகளில் உறழ்நிலையில் தோன்றுகின்றன.

திராவிட மொழிகளின் ஒப்பாய்வில் (24) சுப்பிரமணியம் (197: 50) நான்கு விகுதிகளைத் தொல் திராவிட விகுதிகளாகக் கொண் டுள்ளார். அவ்விகுதிகள் பின் வருவன; 1. *—(V)PP— 2. *–த்த்-

3. *-ப்ப்- 4. *-ச்ச்-

2.3.1. கால இடைநிலைகளின் மாற்றங்கள் மூலம் செயப்படு பொருள் குன்றிய/குன்றாவினை வேறுபாடுகளை விளக்கும் முறை, தென்திராவிடமொழி உட்பிரிவாகிய தமிழ்-கொடகு பிரிவில் மட்டும் காணப்படுகிறது (சுப்பிரமணியம், 1971:95). இவ்வாய்வில் -X- என்ற விகுதி இவ்வகை மாற்றத்தைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகிறது. மூலத்திராவிட மொழியைச் சார்ந்த இப்பண்பு தமிழ்-கொடகு உட்பிரிவில் மட்டும் காணப்படுவது இங்கு சிறப்பாக நோக்கத்தக்கது.

2.3.2. செயப்படுபொருள் குன்றிய வினைகளின் ஈற்றசையிலுள்ள மெல்லொலி + வல்லொலி$_1$ அல்லது வல்லொலியை $_1$, வல்லொலி$_1$+வல்லொலி$_1$ என்று மாற்றிச் செயப்படுபொருள் குன்றா வினைகளைப் பெறும் முறை தென்திராவிட, நடுத்திராவிட மொழிகளில் மட்டுமே காணப்படுகிறது. இவ்வாய்வில் -த்- என்ற விகுதி இவ்வகை மாற்றத்தை விளக்குவதைக் காணலாம்.

இவ்விகுதியால் மாற்றம் பெறும் வினைகளில் பெரும்பான்மையானவை மெல்லின வல்லின மெய்மயக்கத்தால் ஆனவை (மெ வ). இவற்றுள்ளும் - ங்க் - மெய்மயக்கம் கொண்ட வினைகளே அதிகம். சுப்பிரமணியம் (1971 – 95) கருத்துப் படி தமிழ் - குடகு, கொண்டா - கூவி உட்பிரிவு மொழிகளில் காணப்படும் ம்ப் > ப்ப் என்ற மாற்றத்தில் – ப்ப் - ஒலி பெறும் வினைகளே காலத்தால் முற்பட்டவை. ஈற்றசையில் - ம்ப் - என்ற மெய்களைக் கொண்ட வினைகள் ஒப்புமையாக்கத்தால் தோன்றின. அவை காலத்தால் பின் தோன்றியவை. வல்லொலி$_1$ –> வல்லொலி$_1$ + வல்லொலி$_1$ என்ற மாற்றத்தில் க் > க்க என்ற வினைகளே அதிகம். மூலத் திராவிட மொழிப்பண்பாகிய இவ்வகை ஒலி மாற்றங்கள் வடதிராவிட மொழிகளில் காணப்படாதது இங்குக் குறிப்பிடத்தக்கது.

2. 3. 3.

- த்த் - விகுதி தெலுங்கு பிராகுயி மொழிகள் தவிர மற்ற எல்லாத் திராவிட மொழிகளிலும் காணப்படுகிறது. இது தென்திராவிட மொழி உட் பிரிவாகிய தமிழ் - குடகு மொழிகளில் அதிகம். கால்டுவெல் (1856 : 454) இவ்விகுதியை கன்னடமொழி – ಡಿ

உடன் ஒப்பிட்டு, அதை அத்து / த்து என்ற சாரியையிலிருந்து விளக்குவார். செயப்படு பொருள் குன்றா வினை விகுதியைச் சாரியையுடன் ஒப்பிட்டுக் கூறுவது பல நிலைகளில் ஏற்றதாக இல்லை.

2. 3. 4.

– ப்ப் – விகுதி கோடா, கோண்டி, குருக், மால்தோ தவிர மற்ற திராவிட மொழிகளில் காணப்படுகிறது. துளு, தெலுங்கு, கொலாமி போன்ற திராவிட மொழிகளில் இவ்விகுதி அதிகம். தமிழில் இவ்விகுதி அதிகம் காணப்படாவிட்டாலும் பெரும்பான்மையான நூல்களில் வழக்கிலுள்ளது. மத்திய காலத் தமிழில் மிகக் குறைவான எண்ணிக்கையில் உள்ளது. பின் பழந்தமிழ் நூலாகிய சிலப்பதிகாரத்தில் 15 இடங்களில் இவ்விகுதி வந்துள்ளது. [மற்றவை : புறநானூறு - 8; குறுந்தொகை - 7; ஐங்குறு நூறு - 1; பதிற்றுப்பத்து – 5; நற்றிணை - 7; பத்துப்பாட்டு - 12; பரிபாடல் - 2; கலித்தொகை - 4; மணிமேகலை - 3] பரX என்ற வினையில் மட்டும் தற்காலத்தில் வழக்கிலுள்ளது.

2. 3. 5.

செயப்படு பொருள் குன்றா வினை விகுதி - ச்ச் - தமிழ், கோடா, கன்னடம், துளு, தெலுங்கு, கோண்டி, கொண்டா, பெங்கோ, கூவி போன்ற மொழிகளில் காணப்படுகிறது. இவ்விகுதி தமிழுடன் நெருங்கிய தொடர்புடைய மலையாளத்தில் இல்லை. தமிழில் இவ்விகுதி ஐந்து வினைகளில் மட்டும் காணப்படுகிறது. இவ்விகுதி 'இ' 'ஐ' என்ற எழுத்துக்கள் கொண்டு முடியும் வினைகளில் மட்டும் தோன்றுகின்றது. அதனால் இதை - த்த் - என்ற விகுதியின் அண்ண ஒலியாகக் (Palatal sound) கருதலாம். ஆனால் - த்த் - 'இ', 'ஐ' கொண்டு முடியும் எல்லா வினைகளிலும் 'ச்ச்' ஆக மாற்றம் பெறாமை இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். இவ்விகுதியை ஒரு கிளை மொழி (Dialectal feature) மாற்றமாகக் கொள்ளலாம். இவ்விகுதி இலக்கியங்களில் அதிக எண்ணிக்கையில் வராவிடினும், பரவலாகப் பழந்தமிழிலும், மத்திய காலத்தமிழிலும் வழக்கிலுள்ளது. அகநானூற்றில் 9 இடங்களில் இவ்விகுதி வந்துள்ளது. இது தவிர புறநானூறு (7), ஐங்குறுநூறு (2), நற்றிணை (3), பத்துப்பாட்டு(4), சிலப்பதிகாரம் (1) ஆகிய இலக்கியங்களிலும் வந்துள்ளது. மத்திய

காலத்தமிழில் மிக்ககுறைவாகவே காணப்படுகிறது. (பெருங்கதை - 5, அப்பர் தேவாரம் - 1, நாலாயிரதிவ்வியப் பிரபந்தம் - 1). வில்லி பாரதத்தில் மிலை என்ற செயப்படு பொருள் குன்றா வினையுடனும் வருகின்றது.

இது வரை கண்டவற்றின்படி கீழ்க்காணும் முடிவுகள் தெளிவாகின்றன.

1. – X – தென்திராவிட மொழி உட் பிரிவின் ஓர் இலக்கணப் பண்பு.

2. விகுதிகள் -த்-, -த்த்- என்பன மூலத் திராவிடமொழியைச் சார்ந்தவை.

3. -ப்ப்-, -ச்ச்- என்பன மூலத் திராவிடமொழி விகுதிகள். ஆனால் மிக்க குறைவான மொழிகளில் வழக்கிலுள்ளன. இதன் காரணம் சரிவரத்தெரியவில்லை.

2.4 காரண வினைகள்

இரண்டு வித அமைப்புடைய காரணவினைகள் தமிழில் காணப்படுகின்றன. அவை: 1. சொல்லியல் காரணவினைகள் (morphological causatives), 2. தொடரியல் காரணவினைகள் (syntactical causatives) முதல்வகை வினைகள் சில காரணவினை விகுதிகளின் இணைவாலும், இரண்டாவது வகை வினைகள் செய வென எச்சமும் சில துணைவினைகளும் சேர்வதன் மூலமும் தோன்றுகின்றன. முதல்வகைவினைகள் சொல்லியல் வரம்பிற்கும் இரண்டாவது வகைவினைகள் தொடரியல் வரம்பிற்கும் உட்பட்டு இயங்குகின்றன.

எடுத்துக்காட்டு:

சொல்லியல் காரண வினைகள்	தொடரியல் காரண வினைகள்
செய்வி	செய்ய–வை
படிப்பி	படிக்க–வை
நடத்து–வி	நடக்க–வை

முதல் பிரிவு வினைகள் -வி-, -பி- என்ற இரண்டு விகுதிகளின் இணைவாலும், இரண்டாவதுவகை வினைகள் செய்ய, படிக்க, நடக்க என்ற செயவெச்சங்களுடன் வை என்ற துணைவினை இணை வாலும் தோன்றியுள்ளன. மேற்கண்ட இருவிகுதிகளும் செயப்படு பொருள் குன்றிய வினையுடனோ அல்லது செயப்படுபொருள் குன்றா வினையுடனோ அல்லது இவை இரண்டுடனுமோ இணையும். எவ்வகையில் தோன்றிய காரண வினையாயினும், அது செயப்படுபொருள் குன்றா வினையாகவே இருக்கும் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

2. 4. 1. காரணவினை விகுதிகள்

– இ –, -[1]பிX - என்ற இரண்டு காரண வினை விகுதிகள் தமிழ் இலக்கியங்களில் காணக்கிடக்கின்றன. இவ்வாய்வில் -பிX- என்ற விகுதியே அடிப்படை விகுதியாக எடுத்துக் கொள்ளப்படுகிறது. இரண்டுவிகுதிகளும் சொல்லியல் வரன் முறைக்கு உட்பட்டன.

2. 4. 1. 1.

– இ –

-இ- இறந்தகால இடைநிலைகளின் முன்னர் இவ்விகுதி தோன்றுகிறது. மூன்று வகை வினைகளிலும் இவ்விகுதி தோன்றுகிறது. (- ந்த் -, - த் -, - இன் - இறந்தகாலம் கொள்ளும் வினைகள்)

எடுத்துக் காட்டு :

இருX - இ - இ - φ → இரீஇ	புறம். 150 - 8
உடுX - இ - இ - φ → உடீஇ	புறம். 392 - 15
Xஉற் - இ - இ - φ → உறீஇ	புறம். 152 - 2
அசை - இ - இ - φ → அசைஇ	அகம். 399 - 10
கடை - இ - இ - φ → கடைஇ	அகம் 74 - 11
தரு - இ - இ - φ → தரீஇ	அகம் 138 - 10
கடை இ - இ - φ → கடைஇ	ஐங் 360 - 4
கொள் இ - இ - φ → கொளீஇ	குறு 34? - 4
உடு - இ - இ - φ → உடீஇ	பத்து 3 - 236
பகொள் - இ - இ - φ → கொளீஇ	கலி 84 - 7

1. – பி – என்ற விகுதியே பலவகைப்பட்ட சந்தி மாற்றங்களை விளக்குவதற்காக – பிX – என்று எடுத்துகொள்ளப்படுகிறது.

மேற்கோள் - இ - இ - φ --> மேற்கொளீஇ குறள். 938

பட் - இ - இ - φ --> படீஇ சிலம்பு. 27 - 240

இருX - இ - இ - φ --> இரீஇ மணி. 4 - 88; பெருங். 1 - 36 - 140

இழை - இ - இ - φ --> இழைஇ பெருங். 1 - 51 - 51

ஒரு - இ - இ - அ --> ஒருஇய பெருங். 4 - 17 - 83

இவ்விகுதி தோன்றும் பெரும்பான்மையான வினைகள் வினையெச்சமாகக் காணப்படுகின்றன. இவ்வகை காரணவினைகள் பழந்தமிழில் அதிகம் வழக்கிலுள்ள இவ்விகுதி தோன்றும் பெரும்பான்மையான கால உறழ்ச்சியுடன் (Free variation in tense) காணப்படுகின்றன. உதாரணமாக இருX என்ற வினை - ந்த் - இறந்த காலம் கொள்ள வேண்டும். ஆனால் - இ - இறந்த காலம் பெற்று - இ - காரண விகுதியுடன் காரண வினையாக இயங்குகிறது. இவ்விகுதி மத்திய காலத் தமிழில் மிக குறைவு. தற்காலத் தமிழில் வழக்கில் இல்லை.

2. 4. 1. 2. - பிX -

எல்லா வகை வினைகளிலும் இவ்விகுதி தோன்றும். இவ்விகுதி வினைகளை அடுத்தும், செயப்பாட்டு வினை விகுதிகளை அடுத்தும் தோன்றும். 'ய்', 'ர்', 'ல்', ழ், ள் என்ற இடையினத்தைக் கொண்டு முடியும் வினைகளில் இவ்விகுதி தோன்றும்பொழுது - விX - என்று மாற்றம் பெறுகின்றது.

எடுத்துக் காட்டு :

போர்X - பிX - த் - உ --> போர்ப்பித்து புறம். 286 - 5

பிரி - பிX - த் - உ --> பிரிவித்து பரி. 5 - 61

ஏல்X - பிX - க் - உம் --> ஏற்பிக்கும் பரி. 20 - 96

நிகழ் - பிX - த் - ஓன் -> நிகழ்வித்தோன் சிலம்பு 20-4-4

உற் - பிX - க் - அ -> உறுவிக்க மணி 30 - 87

சிறX - பிX த் - உ -> சிறப்பித்து பெருங் 2 - 10 - 152

அசை - பிX - த் - அ -> அசைவித்த அப்பர் 2551 - 1

குடிX - பிX - த் – உ → குடிப்பித்து பெரிய 1378 - 2
எடுX - பிX - த் – அ → எடுப்பித்த வில்லி 6.1 – 74 – 4
விளை - பிX – ப் - ஆய் → விளைவிப்பாய் வில்லி 9.8: 144 – 4

—பிX – பழந்தமிழில் புறநானூற்றில் மட்டும் ஓர் இடத்தில் வந்து உள்ளது. பின்பழந்தமிழில் சற்று அதிகமான எண்ணிக்கையில் காணப்படுகிறது. மத்தியகாலத்தமிழில் இவ்விகுதி அதிகம் வழக்கிலுள்ளது. தற்காலத் தமிழில் தொடரியல் காரணவினைகளே அதிகம்.

2. 4. 2. காரண வினை விகுதிகளின் வரலாறு

கால்டுவெல் (1856 : 460 - 62) - இ - என்ற விகுதியையே திராவிடமொழிகளின் காரணவினை விகுதியாகக்கொண்டுள்ளார். - பிX - (~ - வி X -) விகுதியிலுள்ள - ப் -, வ் - என்பன எதிர் கால விகுதியாக இவரால் கொள்ளப் படுகிறது. கால்டுவெல் இவ் விகுதியை (- இ -) ஈ என்ற வினையிலிருந்து வருவிக்கின்றார். சுப்பிரமணிய சாஸ்திரி (1934 : 151 - 53), இராமசாமி ஐயர் (1938 : 754) ஆகியோரும் கால்டுவெல்லைப் பின்பற்றி - இ - யை ஈ என்ற வினையிலிருந்து வருவிக்க முயல்வர். சுப்பிரமணிய சாஸ்திரி (1934) - விX - என்பதிலுள்ள - வ் - என்ற மெய்யை உடம்படு மெய்யாகக் கொள்வார். விகுதிகளைக் குறிப்பிட்ட வினைகளிலிருந்து வருவிக்கும்முறை பழங்கால மொழியியலார் நடுவில் வழங்கிவந்த ஒரு தொன்மையான வழக்கமாகும். ஆகையால்தான் காரணவினை விகுதியையும் ஈ என்ற வினையிலிருந்து வருவிக்க கால்டுவெல் போன்ற அறிஞர்கள் முயன்றனர். ஆனால் தற்கால மொழியியலார் இவ்வகை முறைகளுக்கு ஊக்கமளிப்பதில்லை. இதற்குக் காரணம் ஒருமொழியிலுள்ள எல்லா விகுதிகளையும் முழு வினைகளிலிருந்து வருவிக்கமுடியாது என்பதுதான் (சுப்பிரமணியம், 1971 : 90).

சுப்பிரமணியம் (1971 : 90) –விX– (~ –பிX–) என்ற விகுதியையே மூலத்திராவிடமொழியாகக் கொண்டுள்ளார். மலையாள பழம் இலக்கியங்களில் இவ்விகுதி காணப்படுகிறது. ஆனால் –விX– என்பதிலுள்ள –வ்– விடுபட்டு –இ– என்ற விகுதியே தற்கால மலையாளத்தில் காரணவினை விகுதியாக உள்ளது.

எடுத்துக்காட்டு

செய் – வி (பழம் மலையாளம்)

எழுத் – இ (தற்கால மலையாளம்)

இதுவரை கண்டவற்றிலிருந்து பின்வரும் உண்மைகள் தெளிவாகின்றன :

1. பழந்தமிழ் இலக்கியங்களில் –இ– என்ற விகுதியே காரண வினை விகுதியாக அதிகம் வழக்கிலுள்ளது. பின் பழந்தமிழில் –இ– –பிX– என்ற இரண்டும் வழக்கிலுள்ளது. மத்தியகாலத்தமிழில் ஒன்றிரண்டு இடங்கள் தவிர மற்ற இடங்களில் –பிX–என்ற விகுதியே அதிகம் உள்ளது. தற்காலத்தமிழில் –இ– விகுதி வழக்கிலில்லை. –பிX– விகுதி குறைவாகக் காணப்படுகிறது. இவற்றிற்கும் மேலாகத் தற்காலத் தமிழில் தொடரியல் காரணவினைகள் அதிகம் பயன்படுத்தப்படுகிறது.

எடுத்துக் காட்டு :

கொளீஇ -	தரீஇ -	தழீஇ	[பழந்தமிழ்]
↓	↓	↓	
கொள்வித்து ~ கொளீஇ	தருவித்து ~ தரீஇ	தழுவித்து ~ தழீஇ	{பின்பழந் தமிழ்}
↓	↓	↓	
கொள்வித்து ~ கொள்ளச் செய்து	தருவித்து ~ தரச்செய்து	தழுவித்து ~ தழுவச் செய்து	{மத்திய காலத் தமிழ்}
↓	↓	↓	
கொள்ளச் செய்து ~ கொள்ள வைத்து	தரச்செய்து ~ தரவைத்து	தழுவச் செய்து ~ தழுவவைத்து	{தற்காலத் தமிழ்}

சொல்லியல் காரண வினை –இ–	→	சொல்லியல் காரண வினை –இ– –பிX–	→	சொல்லியல் –பிX– + தொடரியல் காரணவினை	→	தொடரியல் காரண வினை
(பழந்தமிழ்)		(பின்பழந்தமிழ்)		(மத்தியகாலத் தமிழ்)		(தற்காலத் தமிழ்)

இக்கட்டுரை முற்றுப்பெற பல வழிகளில் ஊக்கமும், ஆக்கமும் தந்து உதவிய பேராசிரியர் டாக்டர். சண்முகம், செ. வை அவர்களுக்கும், மற்றும் பல வழிகளில் உதவிய ஆராய்ச்சி நண்பர் சா. வளவன் அவர்களுக்கும், செல்வி சுசீலா அவர்களுக்கும் என் உளம் நிறைந்த நன்றி.

பயன்பட்ட இலக்கிய இலக்கண நூல்கள்

இலக்கிய நூல்கள்

முன்பழந்தமிழ் நூல்கள்

புறநானூறு (புறம்) 1973	திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை
அகநானூறு [அகம்] 1973	,,
குறுந்தொகை [குறு] 1972	,,
ஐங்குறுநூறு [ஐங்] 1966	,,
பதிற்றுப்பத்து [பதி] 1968	,,
நற்றிணை [நற்] 1976	,,
பத்துப்பாட்டு [பத்து] 1978	,,

பின்பழந்தமிழ் நூல்கள்

பரிபாடல் [பரி] 1969	,,
கலித்தொகை [கலி] 1969	,,
திருக்குறள் [குறள்] 1967	,,
சிலப்பதிகாரம் [சிலம்பு] 1972	,,
மணிமேகலை [மணி] 1972	,,

முன்மத்தியகாலத் தமிழ் நூல்கள்

பெருங் கதை [பெருங்] 1968	உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை
அப்பர் தேவாரம் [அப்பர்] 1957, 1961, 1963 (4,5,6 திருமுறைகள்)	தருமபுர ஆதீனம், தருமபுரம்.
நாலாயிர திவ்விய பிரபந்தம் [நாலாயிரம்] 1973	திருவேங்கடத்தான் திருமன்றம் சென்னை

பின்மத்தியகாலத் தமிழ் நூல்கள் பெரியபுராணம் [பெரிய] 1937 (திருத்தொண்டர் புராணம்)	கோவைத் தமிழ்சங்கம் கோயம்புத்தூர்
வில்லிபாரதம் [வில்லி] 1970 (பகுதி 1 - 10)	கோபாலகிருஷ்ணமாச்சாரியார் கம்பெனி, சென்னை

இலக்கண நூல்கள்

தொல்காப்பியம் (மூலம்)	1967 திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை
வீரசோழியம் 1970	,,
நேமிநாதம் 1973	,,
நன்னூல் காண்டிகை உரை 1972	,,
நன்னூல் விருத்திஉரை 1974	,,
பிரயோக விவேகம் 1973	தஞ்சாவூர் சரஸ்வதிமகால் வெளியீடு, தஞ்சாவூர்
இலக்கணவிளக்கம் 1972	,,
இலக்கணக் கொத்து 1973	தஞ்சாவூர் சரஸ்வதி மகால் வெளியீடு, தஞ்சாவூர்
தொன்னூல் விளக்கம் 1978	தமிழ் பதிப்பகம், அடையாறு, சென்னை
முத்துவீரியம் 1972	திருநெல்வேலி சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை
சுவாமிநாதம் 1975	அண்ணாமலைப்பல்கலைக் கழகம், அண்ணாமலைநகர்

[மேற்காணும் இலக்கணங்களின் எல்லாஉரைகளும் எடுத்துக் கொள்ளப்பட்டன]

துணை நூல்கள்

அகத்தியலிங்கம், ச. 1981 வினையியல் - சொல்லியல்

Agesthialingom, S. 1970 "Intrasitive and Transitive in Tamil" II. All India University Tamil Teacher's conference (mimeo), Tirchy.

Agesthialingom, S. & Shanmugam, S. V. 1971 *The Language of Tamil Inscriptions* (1250 - 1350) Annamalai University, Annamalainagar.

Arden, A. H. 1891 *A Prog ressive Grammar of the Tamll Language. Reprinted,* 1969 CLS, Madras.

Balasubramanian, K. 1981 *A Descriptive Grammar of Tolka ppyiam.* Ph. D Dissertation, Annamalai University, Annamalainagar.

Caldwell, Robert 1856 *A Comparative Grammar of the Dravidian or South Indian family of Languages* [Reprinted, 1956,] Madras University. Madras.

Hartmann and Stork 1973 *Dictionary of Language and Linguistics* [Reprinted, 1976] Allied Science Publishers Ltd. London.

Jothimuthu, P. 1956 *A Guide to Tamil by Direct method* CLS, Madras.

Manickam V. SP. 1972 *A Study of Tamil verbs*. Annamalai University, Annamalainagar.

Meenakshisundaran, T. P. 1965 *A History of Tamil Language*. Deccan College, Post - Graduate and Research Institute, Poona.

Pope, G. U. *A Hand book of the Tamil Lauguage* [Reprinted, 1979] Asian Eductional Service, New Delhi.

Ramaswami Ayyar, 1938 'The morphology of Old Tamil verbs" *Anthropos*, Vol. 33 Wien.

Subrahmanyam, P. S. 1971 *Dravidian Verb Morphology* [A comparative study] Annamalai University, Annamalai nagar.

Subrahmanya Sastri, P. S. 1934 *History of Grammatical theories in Tamil and their relations to the grammatical literature in Sanskrit*. The Journal of Oriental Research, Madras.

——— ——— 1947 *Comparative Grammar of the Tamil Language*, 38. Fandyan Lane, Andavar Street, Trichy.

தமிழக மொழிகள் - ஒரு மதிப்பீடு

விஜயேந்திரபாஸ், வி. எஸ்.

பல்வேறு மாநிலங்களைத் தன்னகத்தே கொண்டு திகழும் இந்தியநாட்டில் பரவலாகப் பல மொழிகளும் பேசப்பட்டு வருகின்றன. அவற்றுள் 1961, 1971 ஆண்டுகளில் தொகுக்கப்பட்ட மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி தமிழக மக்களிடையே நிலவி வரும் பலதரப்பட்ட மொழிகளைக் குறித்து மதிப்பீடு செய்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

1961-ம் ஆண்டு எடுக்கப்பட்ட மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி, இந்தியாவில் மொத்தம் 1652 மொழிகள் பல இனத்தவர்களால் பேசப்பட்டுவருகின்றன. (அவற்றுள்ளும் தனியாக ஒரு குடும்பத்திலும் சேர்க்கமுடியாத மொழிகளாக 527 மொழிகள் காணக்கிடக்கின்றன.) அம்மொழிகள் பேசும் மக்களின் மொத்த எண்ணிக்கை 43,89,36,918 ஆகும்.

இந்திய ஆட்சிமுறை சட்டத்தில் எட்டாவது அட்டவணையில் அஸ்ஸாமி (Assamese), வங்காளம் (Bengali), குஜராத்தி (Gujarathi)

இந்தி (Hindi), கன்னடம் (Kannada), காஷ்மீரம் (Kashmiri), மலையாளம் (Malayalam), மராத்தி (Marathi), ஒரியா (Oriya), பஞ்சாபி (Punjabi), சமஸ்கிருதம் (Sanskrit), ஸிந்தி (Sindhl), தமிழ் (Tamil), தெலுங்கு (Telugu), உருது (Urudu) ஆகிய மொழிகள் ஆட்சி மொழிகளாக (திருந்திய மொழிகளாக) குறிக்கப்பட்டுள்ளன. 1971-ம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பினில் இம்மொழிகள் 52,27, 59,625 மக்களால் பேசப்படுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்திய மொத்த மக்கள் தொகையில் இது 97.37 சதவீதமாகும். (1961-ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி இது 87.13 சதவீதமாகக் காணப்பட்டது.)

இம்மொழிகள் பேசும் மக்களிலும் அதிகமாக காணப்படுபவர்கள் இந்திபேசும் மக்களேயாகும். முதன்மை இடம் பெற்ற இம்மொழி பேசும் மக்கள் மொத்த மக்கள்தொகையில் 38.1 சதவீதமாகும். இதனையடுத்து வங்காள மொழி இரண்டாவது இடத்தினையும் (8.18%) தெலுங்கு மூன்றாவது இடத்தினையும், தமிழ் ஐந்தாவது இடத்தினையும் பெறுகிறது.

திராவிடமொழிக்குடும்பமானது உலகமொழிக்குடும்பங்களில் ஐந்தாவது இடத்தினையும், இந்தியமொழிக்குடும்பங்களில் இரண்டாவது இடத்தினையும் பெற்றுத் திகழ்கின்றது. திராவிடமொழிக் குடும்பத்தில் .தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகள் பேசுகின்ற மக்கள்தொகை 95.5 சதவீதமாகும்.

இக்கணக்கெடுப்பின் அடிப்படையில் நோக்குவோமாயின் மொத்த தமிழ்நாட்டு மக்கள்தொகையில் 84.51 % மக்கள் தமிழையே தாய்மொழியாகக் கொண்டுள்ளனர். தமிழகம் தவிர இலங்கை, மலேயா, ஆப்பிரிக்கா, இந்தோனேஷியா போன்ற நாடுகளிலும் தமிழ்மொழி பேசும் மக்கள் அதிகமாகக் காணப்படுகின்றனர்.

மேலும் 1911 முதல் தமிழகம் தவிர பிற மாநிலங்களில் தமிழ் மொழி பேசுபவர்களின் எண்ணிக்கையைக் கணக்கிடுவோமெனில் பாண்டிச்சேரி அவற்றுள் முதலிடத்திலும், கேரளம், இலட்சத்தீவு ஆகியன இரண்டாவதாகவும், அந்தமான் நிக்கோபார் தீவுகள் மூன்றாவதாகவும், கர்நாடகம் ஆறாவது இடத்திலும் நிரல்பட

விளங்குவதனைக் காணலாம். இம்மாநிலங்கள் மட்டுமன்றி பம்பாய், டெல்லி, கல்கத்தா போன்ற நகரங்களிலும் பிற திராவிடமொழிகள் பேசுபவர்களின் எண்ணிக்கையைவிடத் தமிழ் மொழி பேசும் மக்களின் எண்ணிக்கையே அதிக அளவில் காணப்படுகின்றன.

மகாராஷ்டிர மாநிலமானது தமிழ்நாட்டினின்று மிகத்தொலைவில் உள்ளது. அதனைத்தொட்டு அடுத்த மாநிலங்களாக விளங்குவன ஆந்திரா, கர்நாடகா ஆகியன. ஆயினும் மகாராஷ்டிரத்தில் தெலுங்கு கன்னடம் ஆகிய மொழிகள் பேசும் மக்களைவிட தமிழ்மொழிபேசும் மக்களே அதிகம் காணப்படுகின்றனர்.

1971-ம் ஆண்டில் எடுக்கப்பட்ட மக்கள்தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் காணின், இந்திய மொத்த மக்கள்தொகையில் தமிழ்மொழி பேசுபவர்களாக ,76,90,064 பேர்கள் காணப்படுகின்றனர். அவற்றுள் 3,48,17,421 பேர்கள் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள். தமிழ்நாட்டிலுள்ள மொத்த மக்கள் தொகை 4,11,99,168. அவற்றுள் 4,11,91,588 மக்கள் 35 வகைப்பட்ட மொழிகளைப் பேசிவருகின்றனர். இம்முப்பத்தைந்து மொழிகளையும் ஐந்து பிரிவினுள் அடக்கலாம். அவையாவன.

1. திராவிட குடும்பம் (Dravidian Family) – 97.1799 %
2. இந்தோ-ஆரியன்குடும்பம் (Indo-Aryan Family) - 2.7423 %.
3. ஆஸ்டிரிக் குடும்பம் (Austric Family) - 0.00030 %.
4. திபெத்தோ-சைனீஸ் குடும்பம் (Tibeto Chinese Family) 0.00016 %.
5. அயல் நாட்டு மொழிகள் (அரபி, சைனீஸ், ஆங்கிலம், பேர்ஸியா) - 0.07726 %.

திராவிடக் குடும்பம் (Dravidian Family)

திராவிட மொழிக் குடும்பத்திற்குட்பட்ட ஏழு மொழிகள் தமிழ் நாட்டில் 97. 1799% மக்களால் பேசப்படுகின்றன. (ஆண்கள் 2, 02, 29, 945. பெண்கள் 1, 98, 07, 349). அம்மொழிகள் பேசும்

மக்களுள்ளும் 84. 51 சதவீதம் மக்களால் பேசப்படும் மொழியாகத் தமிழ் அமைந்து முதலிடம் பெற்று விளங்குகிறது. இரண்டாவது இடத்தினை தெலுங்கு மொழியும் (8. 73%) மூன்றாவது இடத்தினை கன்னட மொழியும், மலையாளம் நான்காவது இடத்தினையும் பெற்றுத்திகழ்கின்றன. இந்நான்கு மொழிகளைத் தவிர த் தமிழ் நாட்டில் துளு (Tulu) மொழியினை 288 மக்களும் குருக் மொழியினை (Kurukh) இரண்டே இரண்டு பேர் மட்டும் பேசி வருகின்றனர். மேற்கூறியவற்றை கீழ்க்காணும் அட்டவணையில் தெளிவாகக்காணலாம.

எண்	மொழிகள்	சதவீதம்	மொத்தம்	ஆண்கள்	பெண்கள்
1.	தமிழ்	84.5100	38,817,421	17.570,237	17,242.184
2.	தெலுங்கு	8 7382	3,600,078	1,814,331	1,785,747
3.	கன்னடம்	2.5664	1,056,512	531,487	525,015
4.	மலையாளம்	1.3573	559,168	331.713	147,473
5.	துளு	0.0793	3,837	1,977	1,860
6.	கூர்க்	0.00069	288	188	100
7.	குருக்	0.000005	2	2	—
	மொத்தம்	97.1799	40,037,294	20,229,945	19,807,349

2. இந்தோ - ஆரியன் குடும்பம் (Indo - Aryan Family)

தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகையில் இந்தோ - ஆரியன் குடும்ப மொழிகளைப் பேசும் மக்களாக 2. 7243 சதவீதத்தினர் கணக்கிடப்பட்டுள்ளனர். அக்குடும்ப மொழி பேசுபவர்களின் எண்ணிக்கை மொத்தம் 11, 22, 369 ஆகும். (ஆண்கள். 5, 57, 350) (பெண்கள் 5, 45, 019). மேற்குறிப்பட்ட மக்களனைவரும் இந்தோ ஆரியன் மொழிக்குடும்பத்திற்குட்பட்ட பதினைந்து மொழிகளைப் பேசி வருகின்றனர். அவர்களிலும் ஏறக்குறைய உருது மொழி பேசுகின்ற மக்களே சரிபாதியளவில் காணப்படுகின்றனர். மொத்த மக்கள் எண்ணிக்கையில் 1. 8437 சதவீத மக்கள் பேசப்படும் மொழியாக உருது மொழி சிறந்து விளங்கி, முதலிடத்தில் காணப்படுகிறது. குஜராத்தி இரண்டாவது இடத்தினையும், இந்தி மூன்

றாவது இடத்தினையும், மராத்தி நான்காவது இடத்தினையும் பெற்று விளங்குகின்றன. குஜராத்தி, இந்தி, மராத்தி ஆகிய மொழிகளைப் பேசும் மக்களின் எண்ணிக்கை முறையே 1,19,045, 77,445, 59,965 ஆகும்.

இந்தோ - ஆரிய மொழிக்குடும்பங்களில் மேற்குறிப்பிட்ட நான்கு மொழிகளைத் தவிர, இதர மொழிகளான அஸ்ஸாமி, டோக்ரி, (Dogri) காஷ்மீரி, லாண்ட (Lhanda) ஒரியா, சமஸ்கிருதம், முதலிய மொழிகளைப் பேசுகின்ற மக்களின் எண்ணிக்கை மிகக்குறைவாகவே காணப்படுகின்றன. அவற்றைக் கீழ்க் கண்ட அட்டவணை தெளிவாகக் காட்டும்.

எண்	மொழிகள்	சதவீதம்	மொத்தம்	ஆண்கள்	பெண்கள்
1.	உருது	1.84374	659,607	388,055	371,552
2.	குஜராத்தி	0.48320	119,045	100,045	98,563
3.	இந்தி	0.1880	77,445	43,313	34 132
4.	மராத்தி	0.14558	59 965	30,850	29,115
5.	ஸிந்தி	0.02028	8,353	4,267	4,086
6.	கொங்கணி	0.0143	5,908	3,008	2,900
7.	பஞ்சாபி	0.01218	5,018	2,937	2,045
8.	வங்காளம்	0.00877	3,615	2,225	1,360
9.	நேப்பாளி	0.0057	2,354	1,718	636
10.	ஒரியா	0.00102	422	276	146
11.	சமஸ்கிருதம்	0 00061	253	152	101
12.	டோக்ரி	0.00033	135	114	21
13.	அஸ்ஸாமி	0.00032	134	96	38
14.	காஷ்மீரி	0.00023	94	53	41
15.	லாண்ட	0.00005	20	8	12
	மொத்தம்	2.74,320	1.122,369	577,350	545,019

3. ஆஸ்டிரிக் குடும்பம் (Austric Family)

பிற குடும்ப மொழிகளைப் பேசும் மக்களின் எண்ணிக்கையுடன் இக்குடும்ப மொழிகளைப் பேசும் மக்களின் எண்ணிக்கையை ஒப்பிட்டு நோக்கின், ஆஸ்டிரிக் குடும்ப மொழி பேசுபவர்களின் எண்ணிக்கை மிகக்குறைந்த அளவிலேயே காணப்படுகின்றது.

இக்குடும்ப மொழிகளாவன நிக்கோபரீஸ் (Nicobarese), காசி (Khasi), சந்தலி (Santali) ஆகும். ஆகமொத்தம் 12 பேர்களே இம்மொழிகளைப் பேசுகின்றனர். இவர்கள் தமிழ் நாட்டு மக்கள் தொகையில் 0.00003 சதவீதமாகும். அவர்களில் நிக்கோபரீஸ் மொழியினை 5 பேர்களும் (ஆண். 1. பெண்கள் - 4) காசி மொழியினை 4 பேர்களும் (ஆண் - 3. பெண் - 1) சந்தலி மொழியினை 3 பேர்களும் (ஆண் - 1. பெண்கள்2) பேசி வருகின்றனர்.

4. திபத்தோ சைனீஸ் குடும்பம் (Tibeto - Chinese Family)

இக்குடும்ப மொழியினையும் தமிழ்நாட்டில் மிகக் குறைந்த அளவு மக்களே பேசிவருகின்றனர். இவர்களின் மொத்த எண்ணிக்கை 67 ஆகும். இவர்கள் தமிழக மக்கள் தொகையில் 0.000016 சதவீதத்தினராகக் காணப்படுகின்றனர்.

திபெத்தோ சைனீஸ் குடும்பமொழிகளாக திபெத்தியன் (Tibetean), மணிப்பூரி (Manipuri), சிக்கிம் (Sikkim), பால்டி (Balti), அங்கமி (Angami), லோதா (Lotha), லூஷாய் (Lushai), நாகா (Naga) ஆகிய எட்டு மொழிகளும் காணக்கிடக்கின்றன. அம்மொழிகளினுள்ளும் திபெத்தியன், மணிப்பூரி ஆகிய மொழிகள் தவிர பிறமொழிகளைப் பேசுபவர்களின் எண்ணிக்கை மிகக் குறைந்த அளவிலேயே காணப்படுகின்றது.

எண்	மொழிகள்	சதவீதம்	மொத்தம்	ஆண்கள்	பெண்கள்
1	திபெத்தியன்	0.00006	35	21	14
2	மணிப்பூரி	0.00005	21	18	3
3	சிக்கிம்	0.00001	5	3	2
4	பால்டி	0.000005	2	2	—
5	அங்கமி	0.000002	1	1	—
6	லோதா	0.000002	1	1	—
7	லூஷாய்	0.000002	1	1	—
8	நாகா	0.000002	1	1	—
	மொத்தம்	0.00016	67	48	19

5. அயல் நாட்டு மொழிகள்

அயல்நாட்டு மொழிகளான ஆங்கிலம், அரபு, சீனம், பேர்ஸியா போன்ற மொழி ள் பேசுபவர்களாக தமிழ்நாட்டில் மொத்தம் 31,791 மக்கள் காணப்படுகின்றனர். (ஆண்கள் 16,302, பெண்கள் 15,489) அமமொழிகளிலுள்ளும் ஆங்கிலம் (English) முதலாவது இடத்தினையும், அரபு மொழி (Arabic) இரண்டாவது இடத்தினையும் பெற்று விளங்குகின்றன. சீனமொழி (Chinese) பேசுபவர்களாக 259 மக்களும், பேர்ஸியா (Persian) மொழி பேசுபவர்களாக 187 மக்களும் காணப்படுகின்றனர். இம்மொழி பேசுபவர்களின் எண்ணிக்கை தமிழக மொத்த மக்கள் தொகையில் 0.0772 சதவீதமாகும்.

எண்	மொழிகள்	சதவீதம்	மொத்தம்	ஆண்கள்	பெண்கள்
1	ஆங்கிலம்	0.07311	30117	15,378	74,739
2	அரபு	0.00298	1228	634	594
3	சீனம்	0.00063	259	194	65
4	பேர்ஷியா	0.00045	187	96	91
	மொத்தம்	0.0772	31,791	16,302	15,480

1971 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பினில் 7630 மக்கள் இன்ன மொழியினைப் பேசுகின்றவர்கள் என்பது குறிக்கப் படவில்லை. அதற்குக் காரணம் யாதெனின் கணக்கெடுப்பில் எடுக்கப்படும் மொழியானது ஒட்டு மொத்தமாக இந்தியாவில் குறைந்தது 3000 மக்களாவது பேசப்படுவதாக இருத்தல் வேண்டும். இன்ன மொழியினர் என்பதைக் குறிக்கப்படாத மக்கள் தமிழக மொத்த மக்கள் தொகையில் 0.01841 சதவீதத்தினராகக் காணப் படுகின்றனர்.

இந்திய ஆட்சிமுறைச் சட்டத்தின்கீழ் காணப்படும் எட்டாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏழு மொழிகளையும் அதிகமாகப்பேசும் மக்களையுடைய மாவட்டமாக தமிழ்நாட்டில் விளங்குவது சென்னை மாவட்டமேயாகும். இங்கு வங்காள மொழியினை 1554 மக்களும், மராத்தியினை 16.794 மக்களும், இந்தியினை

31,252 மக்களும், காஷ்மீரி மொழியினை 96 மக்களும் ஒரியா், பஞ்சாபி, சிந்தி ஆகிய மொழிகளை முறையே 195, 2237, 5559 மக்களும் பேசிவருகின்றனர். இவ்வாறு பல்வேறுபட்ட மொழிகளைப் பேசும் மக்கள் சென்னையில் மட்டும் மிகுந்த அளவில் காணப்படு வதற்குக் காரணம், தமிழ்நாட்டில் சென்னை தலைநகராக விளங்கு வதனை முதற்காரணமாகக் கூறலாம். அது மட்டுமன்றி சென்னை மாநகரம் பல்வேறு இனமக்கள் ஒன்றுகூடி கல்விகற்கும் இடமாகவும், தொழிற்சாலைகள் நிறைந்த இடமாகவும், சிறந்ததொரு வியாபாரத் தலமாகவும், துறைமுகம், விமானத்தளம் ஆகியன அமையப் பெற்ற தால், பலஇனமக்களும், பலநாட்டுமக்களும் ஒன்றுகூடுவதற்கு சிறந்த இடமாகவும் திகழ்வதால் பலமொழி பேசும் மக்கள் சென்னையில் இயைந்து காணப்படுவதில் வியப்பேதுமில்லை.

தமிழக மாவட்டங்களில் பலமொழிகள் பேசப்பட்டு வரினும் கீழ்க்குறிப்பிடும் மாவட்டங்களில் மட்டுமே கீழ்க்காணும் மொழிகள் அதிகமாகப் பேசப்படுகின்றன. கோயம்புத்தூர் மாவட்டத்தில் கன் னடம் (3,45,968 பேர்கள்) தெலுங்கு (8,24,312 பேர்கள்) ஆகிய மொழிகள் பேசும் மக்கள் அதிகமாகக் காணப்படுகின்றனர். குஜராத்தி மொழியே அதிகமாக மதுரைமாவட்டத்தில் (92843 மக்கள்) பேசப் பட்டுவருகின்றது. தஞ்சாவூர் மாவட்டதில் உருதுமொழியினையே 2,24,613 மக்கள் சிறப்பாக பேசிவருகின்றனர். கன்னியாகுமரி மாவட்டமானது கேரள எல்லையோரப்பகுதியாக காணப்படுவதனால் மற்றமாவட்டங்களைவிட இங்குதான் 1,46,617 பேர்கள் மலையாள மொழியினைப் பேசி வருகின்றனர். எல்லா மாவட்டங்ளிலும் தமிழ் மொழி பேசும் மக்கள் காணப்படினும் தஞ்சாவூர் மாவட்டத்தில் தான் தமிழ்மொழி மிகுதியான மக்களால் பேசப்பட்டுவருகின்றது.

மேற்குறிப்பிட்டுள்ள பத்தியானது எந்தெந்தமொழி எம்மா வட்டங்களில் அதிகமாகப்பேசப்பட்டு வருகின்றது என்பதனை விளக்குகிறது. இனி எந்தெந்த மாவட்டங்களில் மிகக்குறைந்த அளவில் ஒருமொழியானது பேசப்படுகின்றது என்பது பற்றியசெய்தி கள் அடுத்து கூறப்படுகின்றது. சமஸ்கிருதம் ஸிந்தி ஆகியமொழி கள் மதுரைமாவட்டத்தில் சிறிதளவே பேசப்படுகின்றது. அவை முறையே சமஸ்கிருதம் 254, ஸிந்தி 8353 ஆகும். ஆனால்

கன்னியாகுமரி, தர்மபுரி ஆகிய மாவட்டங்களில் இம்மொழிகள் பேச்சுவழக்கில் இல்லை. ஓரியா மொழியினைப் பேசுபவர்கள் தர்மபுரி, சேலம், இராமநாதபுரம், கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களைத் தவிர தமிழ்நாட்டில் பிற மாவட்டங்களில் இம்மொழியினை மொத்தம் 422 மக்கள் பேசுகின்றனர். அஸ்ஸாமி, காஷ்மீரி போன்ற மொழிகள் தென்னார்க்காடு, தர்மபுரி, மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் பேச்சுமொழியாக காணப்படவில்லை.

ஒவ்வொரு பத்துவருட மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி நோக்கின், 1911 முதல் தமிழ்நாட்டில் தமிழ்மொழி பேசுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே வருவத்தனைக் காணலாம். தமிழ்நாட்டில் தமிழ்மொழிக்கு அடுத்த நிலையில் கடந்த 1911 - 1951 காலமாக தெலுங்கே இரண்டாவது இடத்தினில் சிறப்புற்று விளங்குகிறது. ஆனால் 1951 - 61-ம் ஆண்டு கணக்கெடுப்பினில் இது 1.08./. ஆக குறைந்தபோதிலும் 1961 – 1971-ம் ஆண்டு கணக்கெடுப்பினில் இது 7·/. ஆக கூடி காணப்படுகிறது. அதனைக் கீழ்க்கண்ட அளவானது உறுதிப்படுத்துகின்றது.

1911 - 28,00509; 1921 - 29,14,594; 1931 - 30,80,860
1951 - 34,006,35; 1961 - 33,63,834; 1971 - 36,000,78

தமிழ், தெலுங்கு ஆகிய மொழிகள் தவிரத் தமிழ்நாட்டில் அவற்றிற்கடுத்த நிலையில் கன்னடமொழியானது பெரும்பான்மையான மக்களால் பேசப்பட்டு (அம்மொழி நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்துகொண்டே) வருகின்றது.

அடுத்து தமிழ்நாட்டில் தாய்மொழியாக அன்றி இரண்டாவது மொழியாக மக்களால் பேசப்படும் மொழிகளில் எவையெவை சிறந்து விளங்குகின்றன என்பதனைக் காண்போம். அவற்றிலும் தமிழ் மொழியே 34,04,766 மக்களால் பேசப்பட்டு முதலிடம் வகிக்கின்றது. இந்திமொழியானது 16,06,959 மக்களால் பேசப்பட்டு இரண்டாவது இடத்திலும், தெலுங்கு 3,99,221 மக்களாலும், மலை

யாளம் 65,557 மக்களாலும் உருது 35,763 மக்களாலும் பேசப்பட்டு முறையே மூன்றாவது, நான்காவது, ஐந்தாவது இடத்திலும் விளங்கு கின்றன.

தமிழ்நாட்டின் அடுத்த மாநிலமாக கர்நாடகம் விளங்கினும், தமிழ்நாட்டில் கர்நாடகத்தினை இரண்டாவது மொழியாகப் பேசு கின்ற மக்களின் எண்ணிக்கை மிகவும் குறைவே (290). இம்மொழி கள் தவிர பிறமொழிகளை இரண்டாவது மொழியாகப் பேசுபவர்க ளின் எண்ணிக்கை கீழ்க்கண்ட அட்டவணையில் தெளிவாகக் குறிப் பிடப்பட்டுள்ளது.

எண்	மொழிகள்	மொத்தம் ஆட்கள்	எண்	மொழிகள்	மொத்தம் ஆட்கள்
1.	அஸ்ஸாமிஸ்	4	8.	மராத்தி	1,816
2.	வங்காளம்	152	9.	ஒரிஸா	29
3.	குஜராத்தி	13,818	10.	பஞ்சாபி	64
4.	ஹிந்தி	1,606,959	11.	சமஸ்கிருதம்	3,602
5.	கன்னடம்	290	12.	தமிழ்	3404,766
6.	காஷ்மீரி	1	13.	தெலுங்கு	399,221
7.	மலையாளம்	65557	14.	உருது	35,763

மேற்காட்டிய சான்றுகளினின்று தமிழ்நாட்டில் அமைந்து விளங்கும் பல்வேறு மொழிக்குடும்பங்கள் பற்றியும் அம்மொழிக்குடும் பங்களில் எவ்வெம்மொழிகள் எந்தெந்த மாவட்டங்களில் அதிகமான அளவில் பேசப்பட்டுவருகின்றன என்பது பற்றியும், எவையெவை குறைந்த அளவில் பேசப்பட்டு வருகின்றன என்பது பற்றியும், அவ் வாறு அம்மொழிகள் மிகுதியாகவும் குறைவாகவும் வழங்கப் பட்டு வருவதன் பல்வேறு காரணங்கள் குறித்தும் இக்கட்டுரையின் கண் பல செய்திகளைக் கண்ணுற்றோம்.

தமிழ், தெலுங்கு, கன்னடம் ஆகிய இம்மூன்று மொழிகளும் தமிழ்நாட்டில் அமைந்து விளங்கும் தன்மையினைக் கீழ்க்கண்ட வரைப்படச் செய்தி உறுதிப்படுத்தும். (graph).



துணை நூல்கள்

1. Asok Mitra 1978 "India's population Vol I & II" (Aspects of quality and control) Jawaharlal Nehr University, Abhinav Publications. New Delhi.

2. Asok Mitra 1961, "Census of India, 1961 Language Tables" Vol I Part II c (ii), Census Commissioner of India, New Delhi.

3. Asok Mitra. 1961, "Census of India 1961 VoI I Part xi C (i). Inquiries into the spoken language of India, Census Commissioner of India, New Delhi.

4 Chandrasekhar 1971, Census of India 1971 series I. Part II. c (i) Social and Cultural Tables.

5. Europa. 1978, "The Europa year Book 1978. A world Survey Vol II Europa Publications Limitted, London·

6. Grierson 1961. *Linguistic Survey of India* Vol IV. Munda and Dravidian Languages, Motilal Banarasidas.

7. Nigam. R.C. 1971 Census of India 1971 (Monograph Series) Language Handbook on Mothertongues in Censues Office of the registrar general of India Ministry of Home Affairs, New Delhi.

8- Research and Reference Division, 1978, "India 1978" A Reference Annual Publication Division. Ministry of information and Broadcasting Govt. of India.

9. Vijayendra Bhas 1979. *Language information of South* India M.A. Dissertation, University of Kerala.

கன்னித்தமிழ்

தமிழ் மொழியின் வரலாற்றை நோக்கின் ஒரு உண்மை பளிச் சிடக் காணலாம். எத்தனையோ நூற்றாண்டுகட்கு முன்னர் இது வாழ்ந்திருப்பினும் இன்றும் அதிக மாற்றமின்றி வாழும் நிலையி லுள்ளது. சங்ககால இலக்கியங்களில் காணப்படும் தமிழ் மொழிக்கும் கி. பி. ஆறாவது நூற்றாண்டில் தோன்றிய பக்திப் பாடல்களின் தமிழ் மொழிக்குமிடையே பல வேற்றுமைகள் உண்டு. இது போன்றே கி. பி. 10 ஆவது நூற்றாண்டுத் தமிழ் மொழிக்கும் இருபதாவது நூற்றாண்டைய தமிழுக்கும் வேறுபாடுகள் உண்டு. நாட்டுப் புறத்துத் தமிழுக்கும் நகரப்புறத்துப் பேச்சுக்கும் இடையே வேற்றுமைகள் பல இருக்கலாம். ஐயர் பேச்சுக்கும் ஐயங்கார் பேச்சுக்குமிடையே கூட வேற்றுமைகள் இருக்கும். இது போன்று ஒரு அறிஞனின் பேச்சும் ஒரு ஆதிவாசியின் பேச்சும் தம்முள் மாறுபட்டிருக்கலாம். சாமானி யர்களின் பேச்சில் சில கொச்சை இருக்கலாம்; பல கோளாறுகளும் இருக்கலாம். ஆனால், இவ்வேறுபாடுகளெல்லாம் பிற மொழிகளி டையே காணும் வேறுபாட்டை நோக்கின் குறைந்தளவிலேயே உள்ளன எனக் கருத இடமுண்டு. எடுத்துக் காட்டாக, ஆங்கில மொழியை நோக்கின் இவ்வுண்மை நன்கு தெரியும். பழைய ஆங்கி லத்தை (Old English) சரியாக உச்சரிக்கக்கூட முடியாத நிலையில் பல ஆங்கில மாணவர்கள் இருப்பதைக் காணலாம். அதற்கெனத் தனிப் பயிற்சியும் அயரா முயற்சியும் இல்லையென்றால் அது மாறு பட்ட மொழியாகவே தோன்றும். ஆனால், தமிழ் மொழியின் வர லாறு ஏனோ இந்த நிலையை உருவாக்கவில்லை. மாறுபாடுகள் சில வற்றைக் கொண்டு காணப்படினும் தமிழ் மொழி மாறுபட்ட பல மொழிகளாக மாறிவிடவில்லை. எனவேதான் இம்மொழியினைப் பற்றி பேசும் அறிஞர்கள் அன்றும் இன்றும் கன்னியாகவே வாழும் தமிழ் மொழி என்று குறிப்பிடுவர். இதனை உள்ளத்திற் கொண்டு தான் மனோன்மணீய சுந்தரனார்

சீரிளமைத் திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே

...

எனப் பாடிச் சென்றார்.

டாக்டர் ச. அகத்தியலிங்கம்,
உலகமொழிகள், திராவிடமொழிகள் 1
அண்ணாமலைநகர்.

'சூரசமஹாரம்' நாவலில் காணும் இலங்கைத் தமிழ்

சா. வளவன்,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

இலங்கையில் உள்ள மக்கட் தொகையில் இருபது விழுக்காடு தமிழர்களாவர். கி. பி. முதல் நூற்றாண்டிலிருந்து வரலாற்றைத் தொகுத்து வைத்திருக்கும் இலங்கையில் அப்போதே தமிழர்கள் வாழ்ந்து கொண்டிருந்தது குறிக்கப்பட்டுள்ளது. (கணபதிப்பிள்ளை 1958:220). இலங்கையில் உள்ள மாந்தைக் கப்பல் துறை பற்றிக் குறுந்தொகையும் (34), அகநானூறும் (376) கூறும். ஈழத்துப் பூதன் தேவன் சங்கப் புலவனாவான். எனவே ஒரு காலத்தில் இலங்கை தமிழ்நாட்டுடன் இருந்து பின்னர் கடலால் பிரிக்கப்பட்டது என்ற பிற துறை ஆய்வாளர் கூற்றுக்கு இவையும் சான்றாகின்றன. இலங்கைக் கிளைமொழியில் காணும் தமிழின் கூறுகளில் சிலவற்றை ஒப்பிட்டுக் காண சூரசம்ஹாரம் நாவலை மொழி மாதிரியாகக் கொண்டு முயல்கிறது இக்கட்டுரை. ஆனந்த விகடன் வார இதழில் இருபது வாரங்கள் தொடர்ந்து இலங்கை எழுத்தாளர் அருள் சுப்பிர

மணியத்தால் எழுதப்பட்டு 24—1—1982 இதழில் முடிவடைந்த இந்த நாவலில் அவருடைய எடுத்துரைக்கும் போக்கு முதலிய உத்திகளில் உள்ள குறைகளைக் கருதாமல் அவர் வழியே கிடைத்த கிளை மொழிச் சொற்களில் சேர்ந்தவற்றைக் கொண்டு மட்டுமே இக்கட்டுரை அமைந்துள்ளது.

122 பக்கமுள்ள இந்நாவலில் பொதுத்தமிழ்க் கூறுகளும் பேச்சுப் பொதுதமிழ்க் கூறுகளும் இணைந்தே உள்ளன. ஆங்கிலச் சொற்களைத் தமிழில் இலங்கை வாழ் மக்களின் உச்சரிப்புக் கேற்பவே எழுத முயன்றுள்ளார் ஆசிரியர். அவையும் ஒலியன் மாற்றத்தில் சேர்த்தே சுட்டப் பெறுகின்றன. பின்னிணைப்பாகத் தேர்ந்த சொற்கள் தொகுக்கப் பெற்றுள்ளன. அடைப்புக்குறியில் உள்ள எண்கள் நாவலின் அத்தியாயங்களைக் குறிக்கும்.

உயிர் ஒலியன்கள்:

'ஔ' இந்நாவலில் பயன் படுத்தப்படவில்லை. மனம் கதறும் போது 'ஐயோ' (12) என்பதாக ஆசிரியர் குறித்திருக்கிறார்.

இ ஈ   உ ஊ
எ ஏ   ஒ ஓ
அ ஆ

இண்டு (4) கட்டு (3) ஈட்டி (11) ஆட்டத்து (10)
எண்டு (5) குட்டி (1) ஏட்டி (11) ஓட்டத்து (10)
ஒண்டு (13) கொட்ட (2) ஊடாக (9)

மெய்யொலியன்கள் :

வடசொற்களான ஜ, ஷ, ஸ என்பவற்றுள் 'ஸ' வைப் பயன் படுத்தியுள்ளார் ஆசிரியர். 'ஷ' எங்கும் பயன்படுத்தப்படவில்லை. 'ஜ' விஜயா, ஜீலா என்ற இரு பெயர்களிலும் 'பில்கிறிமேஜ்' என்ற ஆங்கிலச் சொல்லிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழில் 'ழ' கரம் இல்லையானாலும் 'வழமை' போன்ற சொற்களில் ஆசிரியர் பயன்படுத்தியுள்ளார்.

ப் த் ட் ச் க்
ம் ந்ன் ண் ஞ்

ழ்
ல் ள்
ர்
வ் ற் ய்

காலை	(12)	காட்டு	(2)	தொட்டு	(13)	நாய்	(8)
சாலை	(15)	காற்று	(1)	பொட்டு	(13)	ஞாயிற்று	(5)
எண்ணெய்	(13)	பால்	(1)	அம்பு	(15)	வெட்டி	(1)
என்ன	(13)	மாலை	(4)	அன்பு	(1)	பெட்டி	(2)
கார்	(10)	குழி	(2)	புலி	(20)		
கால்	(10)	குடி	(1)	புளி	(16)		
காய்	(2)						

மெய்ம்மயக்கம் :

சில எடுத்துக் காட்டுக்களே தரப் பெற்றுள்ளன.

க்க்	த்த்	ல்ல்	ப்ப்	ற்ற்
அக்கிராசனம்	மாத்தேல்லை	காணேல்லை	துறப்பு சப்பாத்து	சாற்றி

ம்ம்
நமமள்

க்ஸ்	ச்ன்	ட்ற்	ல்ற்
சக்ஸஸ்	பிரச்னை	ட்றகுலா	சொல்றன்

ற்ப்	ற்ஸ்	ஸ்ர்
நிற்பாட்டியது தாற்பரியம்	லெற்ஸ் (let us)	பாஸ்ரன் (fasten) ஸ்ராட் (start)

ஸ்ற்
லிஸ்று (list)

ர்க்க்	ர்ப்ப்
பார்க்கேலாது	பார்ப்பம்

ஓஓஓஓ

கடலின் பேரிரைச்சலைக் குறிக்க (1) ஆசிரியர் கையாண்டுள்ளார்.

ல் ல் ல் ல் ல் ல்

நல்ல்ல்ல்ல்லாயிருங்க (10) மனதார வாழ்த்தியதாக, கருதிக்கொள்ள ஆசிரியர் கையாண்டுள்ளார்.

ஒலியன்கள் மாறுபாடு :

ஒலியன் மாற்றங்களில் சில மட்டுமே சுட்டப் பெறுகின்றன. நாவலில் உள்ள மாதிரிகளைக்கொண்டு மட்டுமே சுட்டப்பெறுகின்றன. வல்லின 'ற' சொல்லிறுதியாக இலங்கைத் தமிழில் பயன்படுகிறது. வல்லின நுனிநா அண்பல் தடையொலியான இதனை (t) மயக்கத்தின்போதும், இரட்டிக்கும்போதும் ஒலிக்கின்றனர் இலங்கைத்தமிழர். வருடொலியாகவும் பயன்படுகின்றது. ஜ, ஷ ஒலியன்களுக்குப் பதிலாக 'ச'வை ஒலிக்கின்றனர்.

அ > ஆ
நடத்தி > நடாத்தி

அ > எ
பனியன் > பெனியன்

அ > இ
எப்படி > எப்பிடி
பயப்பட > பயப்பிட

அ > ஏ
காணவில்லை > காணேல்லை

ஆ > அ
காலண்டர் > கலண்டர்

ஆ > ஒ
யானைகுன் > மொன்குன்
லாரி > லொறி
நான் > நொன் (non)
ஆப் > ஒவ் (of)

இ > அ
லேபில் > லேபள்

உ > இ
சந்து > சந்தி.
உம்முனு > உம்மின்னு

எ > ஏ
யெஸ் > யேஸ்

ஏ > அ
போவேன் > போவன்

ஏ > இ
தேதி > திகதி

ஏ > ஈ
சேர் > சீற்

ஏ > எ
ஏர் > எயர் (air)

ஐ > அ
உடைப்பு > உடப்பு

ஐ > இ ஓ > அ
வெண்டைக்காய் > வெண்டிக்காய் ஒன் > வன் (one)

ஒ > ஓ ஓ > அ
டிப்ளொமா > டிப்ளோமா பார்ப்போம் > பார்ப்பம்

ஓ > ஒ
போலிசு > பொலிசு.

மெய்யொலியன்கள் மாற்றம்

ட் > ɸ ட் > ர் ர் > ற்
ட்ரெயின் > ரெயின் தந்திட > தந்திர ரெடி > றெடி
டெல் > ரெல் ரன்வே > றன்வே
டு > ரு (to)
ஸ்டுடியோ > ஸ்ருடியோ

ல் > ள் ழ் > ள் ற் > த்
லேபில் > லேபள் வழவழப்பு > வளவளப்பு சுற்றி > சுத்தி
கொழுத்த > கொளுத்த

இவ்வாறே த் > ற் மாற்றமும் உள்ளது. எ. கா. சாத்தி > சாற்றி.

ஜ் > ச் ஜ் > ட்
ஜன்னி > சன்னி எஜுகேட் > எட்டிகேட் / ஏடிகேட்
ஜனம் > சனம்
ஜோலி > சோலி

ஷ > ச/ட
உஷார் > உசார்
ஷட்டர் > சட்டர்
நிமிஷம் > நிமிசம்/நிமிடம்
மனுஷன் > மனுசன்
விஷம் > விசம்
விஷயம் > விசயம்/விடயம்.

உருபன்கள் :

வேற்றுமை :

ஐ இரண்டாம் வேற்றுமையுருபாகவும், ஆல், ஒடு மூன்றாம் வேற்றுமையுருபுகளாகவும் செயல்படுகின்றன. – உக்கு, – ஐக்கு நான்காம் வேற்றுமையுருபுகளாகப் பயின்றுவருகின்றன.

எ. கா.

அவன் + உக்கு = அவனுக்கு.
இரவு + ஐக்கு = இரவைக்கு.
இண்டு + ஐக்கு = இண்டைக்கு.

ஐந்தாம் வேற்றுமையுருபான 'இல்' நிலைமொழியின் இறுதிஉகரத்தை நீக்கி நேரே புணர்கின்றது.

எ. கா.

கொழும்பு + இல் = கொழும்பில்.

மீது, மேல் எனவரும் பேச்சுப் பொதுத்தமிழ் உருபுகட்கு இணையாக இலங்கைத் தமிழில் —இல் **உருபு** பயின்று வருகின்றது.

எ. கா.

அவனில் — 'அவன் மேல்'
என்னில் — 'என்மீது'

— இல உருபும் வழங்குகின்றது.

வெளில — 'வெளியில்'

ஆறாம் வேற்றுமைக்கு - உடைய, - ரை, - ட உருபுகளாகின்றன.

எ. கா.

எம் + உடைய = எம்முடைய
என் + ரை = என்ரை
அவங்க + ட = அவங்கட
உங்க + ட = உங்கட
எங்க + ட = எங்கட

சொற்றொடரியலிலும் புதுமையுள்ளது. பொதுத்தமிழில் 'பார்ப்பதற்குமுன்' என வழங்கும் தொடரைப் 'பார்க்கமுதல்' (19) என இலங்கைத் தமிழில் வழங்குவது புதுமையாகும். அவ்வாறே 'வயதான தாய்' என நாம் வழங்குவதை அவர்கள் 'வயது போன தாய்' (2) என்கின்றனர். குறுமொழி மரபுத் தொடர்களும் காணப் பெறுகின்றன.

எ. கா.

சணல் பறந்து கொண்டிருந்தது (3)
பகிடி விட்டது (16)
இடக்குப் பிடக்காக (13)

வினைமுற்றை அடுத்து முன்னிலை யொருமைப் பெயரான 'நீ' வருமானால் இரண்டும் இணைந்து ஒன்றாகின்றதுமுண்டு.

எ. கா. வந்தனி — வந்தாய் நீ (9)

எதிர்மறையைக் குறிக்க இல்லை, ஏலாது என்ற சொற்கள் பயன் படுகின்றன. இவை செயவென் எச்சத்தோடு சேர்ந்து ஒரே சொல்லாகி வினைமுற்றாய்ப் பயின்று வருகின்றன, புணர்ச்சி விதிக்குள் அடங்காத சிறப்புப் பெற்றவை இவை.

எ. கா.

காணேல்லை
பார்க்கேல்லை சொல்லேலாது
போகேல்லை பார்க்கேலாது
மாத்தேல்லை

முடிவுரை

விரிவான ஆய்வுக்கு இந்நாவலில் இடம் உள்ளமையைக் காட்டு முகத்தான் இங்குச் சில சிறப்புக் கூறுகள் மட்டுமே சுட்டப் பெற்று உள்ளன. ஆய்வு தொடருமானால் அதுவே இக்கட்டுரைக்கு வெற்றியாகும்,

அடிக்குறிப்பு

Kanapathi Pillai, K., (1958), "The Jaffna Dialect of Tamil" I. L. Turner Jublee, Vol. 1. p, 220.

சொல்லன்கள் :

இங்கு, சிறப்பாய்க் காணப்பட்ட சில சொற்களை மட்டுமே நாவலில் இருந்து தொகுத்துள்ளோம். அடைப்புக் குறிக்குள் இருப்பவை அத்தியாய எண்கள்.

பெயர்ச்சொற்கள்

அக்கிராசனம் (2) 'தலைமை'
அண்ணை (13) 'அண்ணன்'
அந்தரம் (8) 'துன்பம்'
அந்தியேடு ( ) 'சுடுகாடு'
அப்பு (1) 'அப்பா'
அமைச்சு (1) 'அமைச்சகம்'
அரை (16) 'இடுப்பு'
அழுங்குப்பிடி (19) 'முரட்டுப்பிடி'
அறிவித்தல் பலகை (13) 'அறிவிப்புப்பலகை'
ஆகாசமுகில் (3) 'மேகம்'
இடி (19) 'அடி'
இண்டு (13) 'இன்று'
இலையான் (13) 'ஒருவகைப்பூச்சி'
இஸ்திரிக்கை (7) 'சலவை'
ஈக்கில் (14) 'இலைநரம்பு'
ஈடேற்றம் (1) 'முன்னேற்றம்'
உடப்பு (1) 'உடைப்பு'
உடுப்பு (6) 'ஆடை'
எம் (3) 'நம்'
ஒண்டு (13) 'ஒன்று'
ஓராட்டு (7) 'தாலாட்டு'
கட்சிதம் (13) 'கச்சிதம்'
கதிரை (2) 'நாற்காலி'
கவலையீனம் (15) 'கவனமின்மை'
கள்ளன் (8) 'திருடன்'
கறல் (6) 'துரு'
காப்பு (3) 'பாதுகாப்பு'
குச்சுஒழுங்கை (7) 'சிறியசந்து'
குச்சுவீடு (15) 'சிறியவீடு'
குமர்ப்பிள்ளை (16) 'குமரிப்பெண்'
கூதல் (11) 'குளிர்'
கூரைவளை (1) 'மேற்கூரை'
கெதி (14) 'கதி'
கொழுக்கி (8) 'கொக்கி'
கோப்பி (1) 'காப்பி'
சடுதி (3) 'விரைவு'
சதம் (10) 'இலங்கை நாணயம்'
சந்தி (10) 'சந்தி'
சப்பாத்து (5) 'பூட்ஸ்'
சமன் (2) 'சமம்'
சவர்க்காரம் (2) 'குளிக்கும்சோப்பு'
சாரன் (8) 'லுங்கி'
சீனி (1) 'சர்க்கரை'
சுற்றாடல் (7) 'சுற்றுப்புறம்'
செற்றி (11) 'நாற்காலி'
சோளகக் காற்று (14) 'தென்றல் காற்று'
சோற்று (11) 'சோறு'
டொபிப்பெட்டி (6) 'மிட்டாய்ப் பெட்டி'
தலகணி (8) 'தலையணை'
தலையிடி (6) 'தலைவலி'
தழை (8) 'துன்பம்'

தாற்பரியம் (7) 'தாத்பரியம்'
திகதி (1) 'தேதி'
துறப்பு (5) 'சாவி'
நம்மள் (17) 'நம்'
துளம்பு (6) 'கொசு'
நெருக்குவாரம் (11) 'கட்டாயம்'
பட்டன்பொல் (14) 'காவலர் கைத்தடி'
பரகசியம் (14) 'அம்பலம்'
பராயம் (19) 'வயது'
பிரச்னை (9) 'பிரச்சினை'
பிள்ளையள் (14) 'பிள்ளைகள்'
பிளம்பு (2) 'பிழம்பு'
புகையிரத வண்டி (1) 'இரயில்'
புதினம் (1) 'புதுமை'
பெரிய மட்டை (16) 'பெரிய அட்டை'
போத்தல் (10) 'பாட்டில்'
மடைப்பயல் (19) 'மடையன்'
மரை (14) 'புலி'
மனசு (8) 'மனம்'
மேசைலாச்சி (1) 'மேசை இழுப் பறை'
மொக்கன் (17) } 'மடையன்'
மொக்கு (16) }
வளவளப்பு (2) 'வழவழப்பு'
வாங்கு பலகை (9) சாப்பிட அமரும்
வாங்கு மேசை (9) பலகையும் மேசையும்
விசர் (12) 'பேய்'
விசாரம் (20) 'கவலை'
விறாந்தை (19) 'வராந்தா'
வெண்டிக்காய் (8) 'வெண்டைக் காய்'
வெள்ளனை (16) ' டியல்'

ஆக்கப் பெயர்கள் :

அடிப்பு (18) 'வீசல்'
அலங்கரிப்பு (2) 'ஒப்பனை'
ஒளிப்பு (1) 'மறைப்பு'
குளிப்பு (2) 'குளித்தல்'
தணிப்பு (1) 'தணித்தல்'
தரிப்பு (8) 'தங்கல்'
நெருப்பு (16) 'உயரம்'
வழமை (5) 'பழக்கம்'
வாசிப்பு (2) 'ஒலித்தல்'

பெயரடை :

கன (17) 'அதிக'
சிவத்த (1) 'சிவப்பு'
பாரிய (2) 'நீண்ட'
பென்னம் பெரிய (1) 'மிகப் பெரிய'

உரிச் சொல் :

அங்கால (13) 'பிறகு'
ஒருக்கா (17) 'தனியாக'
பேந்து (14) 'பிறகு'

செயவென் எச்சம் :

கோவிக்க (14) 'கோபப்பட'
தலையிழுத்துக் கொள்ள (13) 'தலைவார'
பயப்பிட (13) 'பயப்பட'
மெனக்கெட (8) 'வீணாக்க'

பெயரெச்சம் :

இத்துப்போன (8) 'இற்ற'
ரசித்த (10) 'சுவைத்த'
வளுகிய (8) 'வழுக்கிய'
வைச்சிருந்த (14) 'வைத்திருந்த'

வினையெச்சம் :

இளக்கி (8) 'நெகிழ்த்தி'
இறுக்கி (8) 'நெருக்கி'
எடுத்திற்று (14) 'எடுத்துக் கொண்டு'
எழும்பி (13) 'எழுந்து'
ஒழுங்கு படுத்தி (3) 'குறித்து'
கதைத்து (2) 'கூறி'
குந்தியிருந்து (3) 'அமர்ந்து'
கையிழந்து (6) 'தொலைந்து'
சாற்றி (5) 'சாத்தி'
துலைச்சு (6) 'தொலைந்து'
நடந்திற்று (14) 'நடந்து'
நூர்த்து (14) 'அணைத்து'
நூகர்ந்து (16) 'அணைந்து'
பவுடர் இட்டுக் கொண்டு (8) 'பவுடர்போட்டு'
பரிந்து (20) 'கருணை கொண்டு'
பாவித்து (5) 'பயன்படுத்த்'
பிந்தாமல் (3) 'விரைந்து'
பிரட்டி (8) 'புரட்டி'
முழித்து (18) 'விழித்து'

வினைமுற்று :

அம்மிட்டுக் கிட்டான் (10) 'அகப் பட்டுக் கொண்டான்'
அறைந்தது (1) 'ஒலித்தது', 'அடித்தது'
ஏலும் (13) 'இயலும்'
ஓம் (8) 'ஆம்'
காணேலை (8) 'காணவில்லை'
காவியது (8) 'பிசைந்தது'
கொழுவட்டும் (10) 'சிக்கட்டும்'
சப்திக்கிறது (1) 'ஒலிக்கிறது'
சமீபித்தார் (20) 'நெருங்கினார்'
சீவிக்கும் (10) 'ஜீவிக்கும்'
சொல்லேலாது (8) 'சொல்ல விய லாது'
ஞாபகித்தது (1) நினைவுக்கு வந் தது'
நிற்பாட்டியது (2) 'நிறுத்தியது'
பார்க்கேலாது (3) 'பார்க்க விய லாது'
புறப்படுத்தினார் (10) 'புறப்படச் செய்தார்'
போகேல்லை (13) 'போகவில்லை'
போயிற்றுது (7) 'போனது'
மணித்தது (3) 'மணி ஒலித்தது'
மாத்தேல்லை (5) 'மாற்றவில்லை'
முரயலை (14) 'முடிய வில்லை'
வச்சிருக்காய் (13) 'வைத்திருக் கிறாய்'

தொழிற் பெயர் :

அவதானித்தல் (2) 'கவனித்தல்'

இடைச் சொற்கள் :

எண்டு (5) 'என்று'
அந்தா (3) 'அங்கு'

துணைவினைகள் :

இத்துப்போன (8) 'இற்ற'
எழும்பீற்றன் (13) 'எழுந்து விட் டேன்'
குறிச்சுக் கொள்ளு (15) 'குறித் துக்கொள்'
குன்றத்தில் வைச்சு (14) 'குன்றத் தில்'

சந்தில் வைத்து (12) 'சந்தில்'
சந்திச்சுப் போட்டு (15) 'சந்தித்து'
சுத்திப் போட்டு (13) 'சுத்தி'
நனைத்துப்
போடுவேன் (14 'நனைப்பேன்'
பண்ணிப்போட்டு (9) 'செய்து'
மடக்கிப் போடுவார் (17)' மடக்குவார்'
விளங்காட்டி (16) 'விளங்காது போனால்'
வென்றெடுக்க (11) 'வெல்ல'

குறுமொழி மரபுத் தொடர்கள்

இடக்குப் பிடக்காக (13)
சணல் பறந்து கொண்டிருந்தது (3)
பகிடி விட்டது (16)

ஆங்கிலச் சொற்கள்

அட்டென்சன் (20)
அட்றஸ் (19)
ஆல்றைட் (17)
இண்டர்நசனல் (5)
எட்டிகேட் (2) }
எடிகேட் (10) }
எயர் கொண்டிசண்ட் (3)
ஒவ் (3) 'of'
கப்சூல்ஸ் (19)
கலண்டர் (1)
கிறைம் றேஞ்ச் (17)
குட்மோர்னிங் (2)
கொம்யூட்டர் (3)
கோல் (15)
சறண்டர் (20)
சாறிகள் (16)
சீற் (4)
செற் (4) 'set'
சேட் (9) 'side'
ட்றகுலா (4)
ட்றங்கோல் (14)
ட்றவலர் (5)
டயறி (15)
டிப்ளோமா (2)
டியூட்டி (15)
டிரெக்றி (3)
டிஸ்ரேபன்ஸ் (15)
டூரிஸ்டு (4)
டெலிவிசன் (3)
நொன் (4) 'non'
நோட்டீஸ் (8)
பக்கற்று } (8) 'pocket'
பைக்கற்று } (7)
பறடைஸ் (3)
பாசஞ்சேர்ஸ் (3)
பாஸ்போட் (17)
பாஸ்ரன் (4)
பிராஸ்நஸ் (10)
பில்கிறிமேஜ் (13)
பிறஸ் (8)
பிறிப்கேசு (15)
பிறெஸ்ஸர் (13)
புறசீட் (3)
புறமோசன் (1)
புறோகிராம் (15)
பெட்சீற்று (8)
பெற்றோல் (8)
பெனியன் (3)
பொலிசு (3)
போட்டிகோ (16)

போரன்சிக்லேபரட்டரி (19)
மட்றாஸ் (13)
மிசின் (10)
மொான்சூன் (1)
யூனிபோம் (14)
யூனிவெசிற்றி (15)
யேஸ் (2)
ரீ சேட் (20) 'T shirt'
ரூ (3) 'to'
ரிவேர்ஸ் (3)
ரெயின் (4) 'Train'
ரெல் (2) 'tell'
ரெலிபோன் (16)
லாண்ட்றி (7)
லிஸ்லு (4)
லெற்ஸ் ஸ்ராட் (2) 'let us start'
லேபள் (3)
லொறி (2)
வன் அவர் (3) 'one hour'
றன்வே (4)
றிவேர்ஸ் (9)
றெடி (5)
றெஸ்ட் (16)
றொபறி (4)
ஸ்ராண்டு ( )
ஸ்ருடியோ (3)
ஹைகொமிசன் (2)

நாஞ்சில் நாட்டில் வழங்கும் சில அருஞ்சொற்கள்

கழிக்கல்	bamboo
விரவு	to mix
அரங்கு	st re room
சுண்டு	lips
மண்ட	head
சென்ன	check
நாசி	nose
முதுக்கு	back
முடுக்கு	narrow street

சொ. சிவதாணு,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

மொழியியல் 5.3 (1982)

வினையாக்கிகள்

ஆ. கார்த்திகேயன்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

1. வினையாக்கிகள்

பெயர்ச் சொற்களை வினைச்சொற்களாக மாற்றும் சொற்களை அல்லது உருபன்களை வினையாக்கிகள் என்று அறிஞர்கள் குறிப்பிடுவர். தமிழில் சில வினைச் சொற்களும் —இ என்ற உருபனும் இத்தகைய வினையாக்கிகளாகச் செயல்பட்டு பெயர்களை வினைகளாக மாற்றும் பணியில் பங்காற்றுகின்றன. எடுத்துக் காட்டாக —இ என்ற வினையாக்க விகுதி சோதனை, நியமனம், விசாரணை போன்ற பெயர்ச்சொற்களுடன் இணைந்து முறையே சோதி, நியமி, விசாரி போன்ற வினைச்சொற்களைப் பிறப்பிக்கின்றன (காண்க. பொன். கோதண்டராமன், 1980). மேலும் கொலை, எடை, சோதனை போன்ற சொற்கள் முறையே படு, போடு, செய் போன்ற வினைச்சொற்களுடன் சேர்ந்து

கொலைப்படு
எடைபோடு
சோதனை செய்

போன்ற கூட்டு வினைகளை பிறப்பிக்கின்றன. எனவே படு, போடு, செய் போன்றவைகள் வினையாக்கிகளாகச் செயல்படுகின்றன. இப்படி வினையாக்கிளாகச் செயல்படும் வினைச்சொற்களைப் பற்றியே இக்கட்டுரை ஆராய முற்படுகின்றது.

2. வகைப்பாடு

தமிழில் சுமார் நாற்பதுக்கு மேற்பட்ட வினைச்சொற்கள் வினை யாக்கிகளாகச் செயல் படுகின்றன. அவைகள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன.

அடை	செய்
அடி	சொல்
அளி	படு
ஆகு	படுத்து
ஆக்கு	பண்ணு
ஆடு	பார்
ஆற்று	புரி
இடு	போடு
உறு	போ
உறுத்து	விடு
ஊட்டு	

போன்றனவும் இன்னும் பிறவும். இத்தகைய வினையாக்கிகளை இரண்டு வகையாகப் பாகுபடுத்தலாம். அவையாவன.

(1) செயப்படுபொருள் குன்றிய - குன்றா பிரிவுள்ள வினை யாக்கிகள்.

(2) செயப்படுபொருள் குன்றிய - குன்றா பிரிவில்லா வினை யாக்கிகள்.

முதல் வகையில் கீழ்க்காணும் வினையாக்கிகள் சேரும்.

ஆகு	ஆக்கு
உறு	உறுத்து
ஏறு	ஏற்று
படு	படுத்து.

ஆகு, உறு, ஏறு, படு போன்றவைகள் செயப்படுபொருள் குன்றிய வினையாக்கிகள். ஆக்கு, உறுத்து, ஏற்று, படுத்து போன்றவைகள் செயப்படுபொருள் குன்றா வினையாக்கிகள். ஏனெனில் ஆகு, உறு, ஏறு, படு போன்ற வினையாக்கிகள் எந்தப் பெயர்களுடன் சேர்ந்தாலும் அதன் விளைவாக உண்டாகும் கூட்டுவினை செயப்படுபொருள் குன்றிய கூட்டு வினையாகவே இருக்கிறது. எடுத்துக்காட்டாக,

(1) திட்டம் உருவாயிற்று
(2) அவன் துன்புற்றான்
(3) படைகள் முன்னேறின
(4) அது சாத்தியப்படாது

போன்ற வாக்கியங்களில் உள்ள கூட்டுவினைகள் செயப்படுபொருள் குன்றியனவாகவே செயல்படுகின்றன.

அதற்கு மாறாக ஆக்கு, உறுத்து, ஏற்று, படுத்து போன்றவைகள் செயப்படுபொருள் குன்றா வினையாக்கிகளாகச் செயல்படுகின்றன. ஏனெனில் எந்தப் பெயருடன் இவைகள் சேர்ந்தாலும் அதனால் உண்டாகும் கூட்டுவினைகள் செயப்படுபொருள் குன்றா கூட்டுவினையாகவே இருக்கின்றன. எடுத்துக்காட்டாக,

(5) திட்டத்தை உருவாக்கினாள்
(6) அவனைத் துன்புறுத்தினான்
(7) நாட்டை முன்னேற்றினான்
(8) அதை சாத்தியப்படுத்தினான்

போன்ற வாக்கியங்களில் உள்ள கூட்டுவினைகள் (தடித்த எழுத்தி லுள்ளவை) செயப்படுபொருள் குன்றாக் கூட்டுவினைகளாகச் செயல் படுகின்றன. இத்தகைய வினையாக்கிகள் உருபனியல் நிலையில் (Morphologically) தொடர்புள்ளவைகள்.

இரண்டாவது வகையில் உள்ள வினையாக்கிகள் முன்னைய பிரிவில் உள்ள வினையாக்கிகள் போல இல்லாமல் எந்த ஒரு வினையாக்கிகளுடனும் உருபன்நிலையில் தொடர்புகொண்டிருக்க வில்லை. மேலும் இந்தப் பிரிவில் வரும் வினையாக்கிகள் ஒரு கூட்டு

வினையின் செயப்படு பொருண்மை (Transitivity) யைக் கண்டறிவதில் முக்கியப் பங்காற்றவில்லை. எடுத்துக்காட்டாக

அடி (அச்சடி)
அடை (அதிர்ச்சியடை)
இடு (ஆணையிடு)
எடு (அளவெடு)

3. முக்கியவினையும் வினையாக்கியும்

எல்லா வினையாக்கிகளும் முக்கிய வினைகளாக (Main verbs) செயல்படும் தன்மையுடையன. எடுத்துக்காட்டாக

(9) நான் வீட்டை அடைந்தேன்
(10) நான் கண்ணனை அடித்தேன்
(11) அவள் மேடையில் ஆடினாள்
(12) தாய் சோறு ஊட்டினாள்

அதாவது, சில முக்கிய வினைகளே வினையாக்கிகளாகக் காலப் போக்கில் மாற்றப்பட்டுப் பயன்படுத்தப் படுகின்றன. துணைவினைகளும் முக்கிய வினைகளிலிருந்தே தருவிக்கப் படுகின்றன என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கது. ஆனால் வினையாக்கியாகப் பயன்படும் முக்கியவினை தன் குணங்களில் மாறுபட்டுக் காணப்படுகின்றது.

பொதுவாக ஒரு வாக்கியத்தில் உள்ள முக்கிய வினையை **என்னசெய்** என்ற கேள்வியால் மாற்றியமைக்க முடியும். (Kothandaraman, P. 1980) எடுத்துக்காட்டாக,

(13) நான் அவனை அடித்தேன்
(14) நான் அவனை என்ன செய்தேன்?

வாக்கியம் (13)ல் உள்ள **அடித்தேன்** என்ற முக்கியவினை வாக்கியம் (14)ல் **என்னசெய்** என்பதால் மாற்றியமைக்கப் பட்டுள்ளது. மாறாக வினையாக்கியாகச் செயல்படும் வினையை **என்னசெய்** என்பதால் மாற்றியமைக்க முடியாது.

(15) நான் பயணம் செய்தேன்
(16) *நான் பயணம் என்ன செய்தேன்

(17) திருடர்கள் கொள்ளை யடித்தனர்
(18) *திருடர்கள் கொள்ளை என்ன செய்தனர்?

ஆனால் கூட்டு வினைகள் **பயணம் செய். கொள்ளையடி** போன்ற வற்றை **என்ன செய்** என்பதைக் கொண்டு மாற்றியமைக்கலாம்.

(19) நான் என்ன செய்தேன்
(15) நான் பயணம் செய்தேன்
(20) திருடர்கள் என்ன செய்தனர்
(17) திருடர்கள் கொள்ளை யடித்தனர்

இவ்வாறு வினையாக்கிகள் முக்கிய வினைகளினின்றும் மாறுபடுகின்றன.

மேலும் **ஆடு** என்ற முக்கிய வினை **ஆட்டு** என்ற பிறவினையைக் கொண்டிருப்பது.

(21) அவள் ஆடினாள்
(22) அவள் ஊஞ்சலை ஆட்டினாள்.

ஆனால் **ஆடு** வினையாக்கியாகச் செயல்படும்போது **ஆட்டு** என்பதும் வினையாக்கியாகச் செயல்படவில்லை.

(23) அவன் உறவாடினான்
(24) அவன் வழக்காடினான்
(25) *அவன் உறவாட்டினான்
(26) *அவன் வழக்காட்டினான்

இதுபோலவே **ஊட்டு** என்பது வினையாக்கியாகச் செயல்படுகின்றது. காட்டாக

(27) அவன் கோபமூட்டினான்
(28) நிலத்தை வளமூட்டினான்

ஆனால் **ஊட்டு** என்பதின் தன்வினை வடிவமான **உண்** என்பது வினையாக்கியாகச் செயல்படவில்லை.

(29) *அவன் கோபமுண்டான்
(30) *நிலம் வளமுண்டது

4. செயப்படு பொருண்மை குன்றல் (Loss of transitivity)

முக்கிய வினையாக இயங்கும் போது செயப்படு பொருள் குன்றா வினையாகச் செயல்படும் வினைகள், வினையாக்கிகளாகச் செயல்படும் போது அத்தன்மையை இழப்பதைச் சில இடங்களில் காணலாம். இடு, செய், அடி, போடு போன்ற வினையாக்கிகள் முக்கிய வினைகளாக இயங்கும் போது செயப்படு பொருள் குன்றா வினையாகச் செயல்படுவதைக் கீழ்க் காணும் வாக்கியங்களில் காணலாம்.

(31) நான் பேனாவை மேசையின் மேல் இட்டேன்.
(32) குயவன் பானைகள் செய்தான்.
(33) குமார் கண்ணனை அடித்தான்.
(34) அவன் கிணற்றில் கல்லைப் போட்டான்.

மாறாக வினையாக்கிகளாகச் செயல்படும் போது, செயப்படு பொருள் குன்றி இயங்குவதைக் கீழ்க் காணும் வாக்கியங்களில் காணலாம்.

(35) அவன் ஓலமிட்டான்.
(36) அரசு அக்கிரமம் செய்கிறது.
(37) குமார் நீச்சலடித்தான்.
(38) மாணவர்கள் சத்தம் போட்டனர்.

5. பொருண்மை குன்றல் (Semantic depletion)

வினைச் சொல் பொதுவாக ஒரு செயலையோ (Action) அல்லது நிலையையோ (State) காட்டும்.

(39) அவன் பாடினான்.
(40) அவள் சாப்பிட்டாள்.
(41) அது மேய்ந்தது.

மேற்கண்ட வாக்கியத்தில் பாடு, சாப்பிடு, மேய் போன்றவைகள் செயலைக் குறிப்பன.

(42) முகம் கறுத்தது
(43) நிலம் காய்ந்தது
(44) அவன் வருந்தினான்.

கறு, காய், வருந்து போன்ற வினைகள் நிலைகளைக் குறிப்பன.

வினையாக்கிகள், செயல், நிலை போன்ற வினையின் பண்பு களைக் காட்டாமல், அப்பண்புகளை இழந்து விடுகின்றன. எடுத் துக் காட்டாக,

(45) எனக்கு யோகம் அடித்தது.
(4) நான் தீர்மானம் செய்தேன்.
(47) நான் ருசி பார்த்தேன்.

போன்றவற்றில் உள்ள அடி, செய், பார் போன்ற வினையாக்கிகள் எந்த ஒரு செயலையும் குறிப்பதாக இல்லை. அடித்தல், செய்தல், பார்த்தல் ஆகிய முதன்மைப் பொருளை (Dominant sense) இழந்து விடுகின்றன.

தமிழில் எல்லா முக்கிய வினைகளும் வினையாக்கிகளாகச் செயல்படவில்லை. ஒரு குறிப்பிட்ட வினைச்சொற்களே பெயர் களை வினைகளாக்கும் தன்மையுடையன. அதாவது ஒரு மொழி யில் பிரதிப் பெயர்கள், துணை வினைகள் இருப்பது போலவே வினையாக்கிகளும் இருக்கின்றன. இவைகள் நிலைத்த தொகுதி யினை (Closed set) உடையனவாக உள்ளன. ஆனால் பெயர்ச் சொற்களும், வினைச் சொற்களும் பரந்துபட்ட தொகுதி (Open set) யைச் சேர்ந்தனவாக உள்ளன. பெயர்களும், வினைகளும், கணக் கிட முடியாதவை, தடையில்லாதவை (Unrestricted). நாம் முதலில் கண்டது போல் தமிழில் உள்ள வினையாக்கிகளைக் கணக்கிடலாம்.

6. பொருண்மையில் ஒத்த வினையாக்கிகள்

சில வினையாக்கிகள் வேறு சில வினையாக்கிகளோடு பொருண்மையில் ஒத்து (Semantically similar) ஒன்று மற்றதன் மாற்றிகளாக (Variants) செயல்படுகின்றன.

எடுத்துக் காட்டு :

உறு — அடை	
அதிர்ச்சியுறு	அதிர்ச்சியடை
கலவரமுறு	கலவரமடை
சீற்றமுறு	சீற்றமடை
அளி — கொடு	
அடைக்கலம் அளி	அடைக்கலம் கொடு
ஆதாவளி	ஆதரவு கொடு
அனுமதியளி	அனுமதி கொடு
இடு — போடு	
உத்தரவிடு	உத்தரவு போடு
கூச்சலிடு	கூச்சல் போடு
போட்டியிடு	போட்டி போடு
கூறு — சொல்	
பொய் கூறு	பொய் சொல்
பதில் கூறு	பதில் சொல்
விடை கூறு	விடை சொல்

புரி — செய் — பண்ணு		
அருள் புரி	அருள் செய்	அருள் பண்ணு
இடர் புரி	இடர் செய்	—
தொண்டு புரி	தொண்டு செய்	—
—	அக்கிரமம் செய்	அக்கிரமம் பண்ணு
—	கொலை செய்	கொலை பண்ணு

உறு, அளி, இடு, கூறு, புரி போன்ற வினையாக்கிகள் இலக்கிய வழக்கில் மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன. ஆனால் அடை, கொடு, போடு, சொல், செய் போன்ற வினையாக்கிகள் பேச்சு வழக்கில் பயன்படுத்தப்படுகின்றன. இவ்வாறு அவைகள் பயன்படும் இடங்கள் (Domains) வேறுபடுகின்றன. சில பெயர்ச் சொற்கள் இலக்கிய வழக்கைச் சேர்ந்தவைகளாக இருக்

கின்றன. அதனால் அவற்றோடு பேச்சுவழக்கைச் சார்ந்த வினை யாக்கிகள் இணைவதில்லை. எடுத்துக் காட்டாக, **தொண்டு, இடர், புன்னகை, மணி, அணி** முதலிய பெயர்கள் இலக்கிய வழக் கைச் சார்ந்தனவாக இருப்பதால் இவற்றுடன் **பண்ணு** என்ற வினை யாக்கி சேர்வதில்லை. **பண்ணு** பேச்சு வழக்கைச் சார்ந்தது. இது போன்ற இலக்கிய வழக்கு, பேச்சு வழக்கு, முறை சூழல் (Formal) அன்முறை சூழல் (Informal) போன்ற சூழ்நிலைகளை மனத்திற் கொண்டு நோக்கினால் வினையாக்கிகளை இன்னும் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும்.

7. பொருண்மையில் வேறுபட்ட வினையாக்கிகள்

ஒரே பெயர்ச் சொல்லுடன் இரண்டு வேறு வினையாக்கிகளைச் சேர்ப்பதால் கிடைக்கும் கூட்டு வினைகள் பொருளில் வேறுபட்டுக் காணப்படுகின்றன.

எடுத்துக் காட்டு :

உத்திரவிடு	(ஆணையிடுதல்)
உத்தரவு கொடு	(அனுமதித்தல்)
உறுதி செய்	(ஊர்ஜிதம் செய்தல்)
உறுதியளி	(சத்தியம் செய்தல்)
பங்கெடு	(கலந்து கொள்ளுதல்)
பங்கிடு	(பிரித்தல்)
பங்காற்று	(பங்கைச் செய்தல்)

8. முடிவுரை

முடிவாக, வினையாக்கிகள் கூட்டு வினைகளை உருவாக்குவ தில் பெரும்பங்காற்றுகின்றன. வினையாக்கிகள் சில செயப்படு பொருண்மை குன்றிச் செயல்படுகின்றன. முழுவினையினின்றும் முற்றிலும் வேறுபட்ட குணங்களைப் பெற்று விளங்குகின்றன. சில வினையாக்கிகள் மற்ற சில வினையாக்கிகளோடு பொருண்மையில் ஒத்து காணப்படுகின்றன. பொருண்மையில் வேறுபட்ட சில வினையாக்கிகள் கூட்டு வினையில் பொருளை வேறுபடுத்தப் பயன் படுத்தப்படுகின்றன.

துணை நூல்கள்

(1) கோதண்டராமன், பொன். 1980. "இ என்ற வினை யாக்க விகுதி", மொழியியல் தொகுதி 4. எண் 1 & 2 அண்ணாமலைநகர்.

(2) Kothandaraman, Pon 1980. "Auxiliaries in Tamil" in *Auxiliaries in Dravidian* Ed. by Agestialingom, S. & Varma, G. S. Annamalainagar.

உயிர் மாற்றம்

செமிடிக் மொழிகளில் உள்ள சொல்லமைப்பு முறை ஒருவகை உட்பிணைப்பாகும். அவ்வகை மொழியில் மூவகைச் சொல்லின் உயிரெழுத்துக்களின் மாறுதலால் பொருள் வேறுபாடு உணர்த்தப் படும்.

எடுத்துக்காட்டாக அரபிய மொழியில் க்-ட்-ல் (Q-T-L) என்னும் மூன்று மெய்யும் அடங்கிய அடிச்சொல் கொல்லுதல் என்னும் பொருளைத் தரும். அம்மெய்யெழுத்துக்களுடன் உயிரெழுத்துக்கள் பலவகையாகச் சேர்ந்து பல பொருள் தரும்.

காடாலா—Qatala—அவன் கொன்றான்.

குடில —Qutila—அவன் கொல்லப்பட்டான்.

குடிலு —Qutilu—அவர்கள் கொல்லப்பட்டனர்.

உக்டுல் —Uqtul—கொல்.

காடில் —Qatil—கொலை.

க்டில் —Qtil—பகைவன்.

டாக்டர் மு. வரதராசனார்,
மொழி வரலாறு, கழகப் பதிப்பு.

அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழக வெளியீடுகள்

1. மொழியியல் - வாழ்வும் வரலாறும் (History of Linguistics)

டாக்டர் ச. **அகத்தியலிங்கம்,**
M. A., Ph. D. (Kerala), Ph. D., (Ind. U. S. A.)

டாக்டர் **க. புஷ்பவல்லி,** M.A., Ph. D.,

மொழியியல் அறிஞர்கள் பலர் மொழியியல் வளர்ச்சிக்கு வேரும் விதையுமாக நின்றனர். அவர்களுடைய வாழ்வு, வரலாறு, அவர்கள் ஆராய்ச்சியில் கண்ட வெற்றி இன்னோரன்ன பல செய்திகளையும் பல்வேறு மொழியியல் கோட்பாடுகளையும் கொள்கைகளையும் விளக்குவது இந்நூல்.

பக்கம் 458) (விலை ரூ. 16/-

2. கிளை மொழியியல்

டாக்டர் **கோ. சீனிவாசவர்மா,** M. A., Ph. D.

ஒரே மொழி வழங்கும் நாட்டில் கூட வட்டாரம், இனம், சாதி தொழில், சமூகம் முதலிய வேறுபாடுகள் மூலம் பேச்சு மொழி வேறுபடுகிறது. தமிழில் அவ்வாறு வேறுபடுகின்ற பேச்சு மொழி களைப்பற்றி விரிவாக விளக்கிக்கூறும் முதல் நூல் இந்நூல்.

பக்கம் 226) (விலை ரூ. 10/-

3. மொழித்திட்டமிடுதல் (Language Planning)

டாக்டர் கி. **கருணாகரன்,** M.A., Ph.D.,

மொழித் திட்டமிடுதலில் இன்றைய நிலையில் தெளிவாக வரையறை செய்யப்பட்டுள்ள முக்கியமான சில கொள்கைகளையும் கோட்பாடுகளையும் அவற்றின் விளக்கங்களையும் எளிய நடையில் எடுத

தியம்புவது இந்நூல். தமிழின் புதுமையாக்கம், எழுத்துருவாக்கம், நிலைபேறாக்கம் முதலியவற்றைப்பற்றி அறிவியல் கண்ணோட்டத்துடன் விளக்குகிறது இந்நூல்.

பக்கம் 165) (விலை ரூ. 7/-

4. உலக மொழிகள் – திராவிட மொழிகள் I
(Dravidan Languages)

டாக்டர் ச. அகத்தியலிங்கம்,
M.A., Ph.D., (Kerala), Ph D, (Ind. U.S.A)

திராவிட மொழிகளின் வாழ்வு, வரலாறு, இலக்கியம் இலக்கணம், கல்வெட்டு போன்ற இன்னோரன்ன பல செய்திகளையும் திராவிட மொழிகட்கும் மற்ற மொழிகட்குமுள்ள பல்வேறு உறவினையும் விளக்குவது இந்நூல். 'உலகமொழிகள்' என்ற வரிசையில் ஐந்தாவது நூல் இது.

பக்கம் 250) (விலை ரூ. 12/-

5. உலக மொழிகள் – திராவிட மொழிகள் II
(Dravidian Languages)

டாக்டர் ச. அகத்தியலிங்கம்,
M.A., Ph.D., (Kerala), Ph.D., (Ind. U.S.A.)

இருபத்திரண்டுக்கும் மேற்பட்ட திராவிடமொழிகளின் வடிவங்களை ஒப்பிட்டுத் தொல் திராவிட மொழியிலுள்ள ஒலியமைப்பு–பெயர் இலக்கண அமைப்பு ஆகியவற்றைச் சான்றுகாட்டி ஒப்பிலக்கண அடிப்படையில் ஆராய்வது இந்நூல். 'உலகமொழிகள்' என்ற வரிசையில் ஆறாவது நூல் இது.

பக்கம் 265) (விலை ரூ. 15/-

6. நரிக்குறவப் பழங்குடி மக்கள்

டாக்டர் கோ. சீனிவாசவர்மா, M.A., Ph.D.

இந்நூல் நரிக்குறவர்களின் வாழ்க்கை முறையையும் சுற்றுப் புறச் சூழலுக்கேற்ப அவர்கள் மேற்கொள்ளும் பழக்க வழக்கங் களையும் விளக்குகிறது. மேலும் அவர்கள் வாழ்வில் அமையும் பண்பாட்டுச் சிறப்புக்களையும் எடுத்துக் கூறுகிறது.

பக்கம் 96) (விலை ரூ. 4/-

7. எழுத்துச் சீர்திருத்தம் (Script Reform)

டாக்டர் செ. வை. சண்முகம், M.A., M.Litt., Ph. D.

எழுத்துச் சீர்திருத்தம் என்பது தமிழ் வரிவடிவத்தில் செய்யப் படும் சீர்திருத்தம் மட்டுமன்று; எழுத்தின்தொகை, சொல்லெழுத்து, பிறமொழிச் சொற்களைத் தழுவும் முறை ஆகியவைகள் பற்றியும் செய்ய வேண்டிய திருத்தம் என்ற நோக்குடன் இந்நூல் எழுதப் பட்டுள்ளது. இனிச் செய்யப்பட வேண்டியவைகளும் தமிழ்நாடு அரசு வெளியிட்ட எழுத்துச் சீர்திருத்தம் குறித்த ஆணை பற்றிய விமர்சனமும் இறுதி இயலில் சேர்க்கப்பட்டுள்ளன.

பக்கம் 240) (விலை ரூ. 12.50/-

8. ஒலியியல் (Phonetics)

டாக்டர் சு. இராசாராம், M. A., Ph. D.

தமிழொலிகளின் வகை, பிறப்புமுறை ஆகியவற்றோடு பொது வாக ஒலியைப் பற்றியும் அதன் ஆய்வு முறைகள் மற்றும் பேச் சுறுப்புக்களைப் பற்றியும் இந்நூல் விவரித்துக் கூறுகிறது. ஒலியியல் கலைச் சொற்கள் ஒவ்வொன்றும் விளக்கத்தோடு இறுதியில் கொடுக் கப்பட்டுள்ளன.

பக்கம் 180) விலை ரூ. 15/-

9. எழுத்திலக்கணக்கோட்பாடு
(Phonological Theoreis in Tamil Grammars)

டாக்டர் **செ. வை. சண்முகம்**, M. A., M. Litt., Ph. D.

தொல்காப்பியம், வீரசோழியம், நேமிநாதம், நன்னூல், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம், ஆகிய நூல்களின் எழுத்ததிகாரத்தில் காணப்படும் மொழியியல் கோட்பாடுகள், எழுத்ததிகார அமைப்பு, பிறப்பியல், தொல்காப்பியரின் 'எழுத்து', முதலும் சார்பும், எழுத்தியலின் களன், எழுத்தியல், பதவியல், புணரியல், அடிநிலைக் கிளவி, புணரியல்களின் அமைப்பு, சாரியை என்று பதினோரு இயல்களில் விளக்கப் பட்டுள்ளன. முதல் இயலான 'இலக்கணமும் மொழியியலும்' என்பதில் இலக்கணத்துக்கும் மொழியியலுக்கும் உள்ள உறவு மொழியியல் நோக்கில் இலக்கணத்தை ஆராயும் முறை, இந்த நூற்றாண்டில் இலக்கண ஆய்வின் வரலாறு ஆகியனவும் கடைசி இரண்டு இயல்களான 'போக்குகள்' 'உத்திகள்' என்பனவற்றில் இலக்கணங்களிடையே காணப்படும் ஆய்வுப்போக்கும், இலக்கண உத்திகளும் விவரிக்கப்பட்டுள்ளன. ஆங்காங்கே உரையாசிரியர்களின் கருத்துகளும் மொழியியல் நோக்கில் பரிசீலிக்கப்பட்டுள்ளன. பொதுவாக இந்த நூல் எழுத்ததிகாரத்தை ஒப்பு நோக்கிலும் மொழியியல் நோக்கிலும் படிப்பதற்கு உதவியாக இருக்கும்.

பக்கம் 306) (விலை ரூ. 20/-

10. சொல்லியல் – பெயரியல்
[Morphology Noun]

டாக்டர் **ச. அகத்தியலிங்கம்,**
M. A., Ph. D., (Kerala), Ph. D., (Ind. U. S A.)

தமிழ் மொழியின் சொல்லியல் பற்றி இக்கால மொழியியல் கோட்பாட்டின் அடிப்படையில் ஆராய்வது இந்நூல்.

முதல் இயலான 'சொல்லியல் கொள்கைகளும் விளக்கங்களும்' என்ற தலைப்பில் தற்கால மொழியியல் கோட்பாடுகளும், 'பெயரியல்' என்ற இரண்டாம் இயலில் தமிழ்ப் பெயர்ச்சொற்களின் வகைப்பாடு

களும் அவற்றின் காரணங்களும், பதிலிடு பெயர்கள், எண்ணுப் பெயர்கள் போன்றவையும் விளக்கப்படுகின்றன. மூன்றாவது இயலான 'எண் பால் பகுப்பு' என்ற தலைப்பில் எண் அமைப்பும் பால் அமைப்பும் விளக்கப்பட்டுள்ளன. 'வேற்றுமை' என்னும் இயலில் வேற்றுமைகளின் அமைப்பும் ஆக்கமும், பொருளும் போக்கும் ஆராயப்படுகின்றன. பொதுவாக தமிழ் மொழியின் பெயர்ச்சொல் அமைப்பு பற்றிப் பல புதிய விளக்கங்களை இதில் காணலாம். பல்வேறு புதிய கோணங்களில் ஆய்வுக் கண்ணோட்டத்துடன் இந்நூல் எழுதப்பட்டிருக்கிறது. சொல்லியல் என்ற வரிசையில் முதல் நூல் இது.

பக்கம் 280) (விலை ரூ. 21/-

11. Linguistic Convergence

Dr. K. KARUNAKARAN, M.A, Ph.D., Dip. in Kannada

This monagraph deals with some of the problems related to the use of languages in contact situations, and as a result the development of some commonness in the structure of the languages. The topics discussed include nature and direction of convergence, use of minority languages in multilingual situation, mass communication diglossia and linguistic convergence, social setting–language development and linguistic convergence, and current issues and research related to the study of convergence.

pp. 188] [Price Rs. 10/

12. இரு மொழியம்
(Bilingualism)

டாக்டர் கோ. சீனிவாசவர்மா, M. A., Ph. D.

ஒருவர் இரண்டு மொழிகளைக்கற்று அவைகளைப் பேசும் பொழுது, அவருடைய பேச்சில் ஒரு மொழியின் கூறுகள் மற்றொரு

மொழியில் கலந்து வழங்குகின்றன. மொழித் தொடர்பு நீண்ட காலம் நிலைத்திருந்தால் தொடர்பு கொண்ட மொழிகள் ஒன்று மற்றொன்றாலோ அல்லது இரு மொழிகளுமோ தாக்கத்திற்குட் படலாம். அவ்வாறு தாக்கம் நிகழும் பொழுது, பிற மொழிக் கூறுகள் குறுக்கீடாகவோ, அல்லது கடனாகவோ வரும். இவை களை மொழியியல் அடிப்படையிலும், சமுதாய அடிப்படையிலும் விரிவாக விளக்கிக் கூறும் முதல் நூல் இந்நூல்.

பக்கம் 152) (விலை ரூ. 15/

13. Study of Social Dialects in Tamil

K. KARUNAKARAN & C. SIVASHANMUGAM

This book deals with the study of social dialect Tamil from the point of view of social stratificatio language. The various theoretical aspects pertaining to study of linguistic variation have been discussed in d and the same suitably illustrated from the Tamil sp behaviour. Tamil speech differentiation as reflected in rural urban, semi-urban set up has been described and variations thus identified have been conditioned with the of the social parameters. contexts, etc.

pp 141) (Price Rs

14. சொல்லியல் - வினையியல் - 1
MORPHOLOGY - VERB - I

டாக்டர். ச. அகத்தியலிங்கம்
M. A., Ph. D, (Kerala), Ph. D., (Ind. U. S. A.)

சொல்லியல் என்ற வரிசை நூல்களில் இரண்டாவது நூல் தலைப்புக்கேற்ப தமிழ் வினைச் சொல்லின் அக அமைப்பைப் மொழியியல் கண்ணோட்டத்தில் ஆராய்வது. வினைச்சொல் கம், தமிழில் புதுவினையாக்கம், வினைவகைப்பாடு, பிறவி

காரணவினை, இணைப்புருபு, ஏவல் வினை, காலம், எதிர்மறை ஆகிய ஒன்பது பகுதிகளைக் கொண்டது இந்நூல். வினைச் சொல் என்றால் என்ன என்பதை அமைப்பு அடிப்படையிலும் பொருள் அடிப்படையிலும் ஆராய்வது முதல் பகுதி. இரண்டாவது பகுதியில் தமிழில் புது வினைகள் எவ்வாறு ஆக்கப்படுகின்றன என்பதும் அவ் வாறு ஆக்கப்படுவதற்குக் காரணங்கள் என்னென்ன என்பதும் இவை போன்ற பிற செய்திகள் விரிவாக ஆராயப்படுகின்றன. இதை யடுத்து வரும் மூன்றாவது பகுதியில் தமிழ் வினைச் சொற்களை வெவ்வேறு அடிப்படையில் விளக்கிப் பின்னர் கால வெழுத்துக்களைப் பொறுத்தமட்டில் எத்தகைய வகைப்பாடுகள் உள்ளன என்று விரிவாக ஆராயப்படுகின்றது. இதன்பின்னர் பிறவினை, காரணவினை, ஏவல்வினை, காலம், எதிர்மறை ஆகிய இலக்கணக் கூறுகள் பல வேறு கோணங்களில் ஆராயப்படுகின்றன. எனவே தமிழ் வினைச் சொற்கள் பற்றி தற்கால மொழியியல் கண்ணோட்டத்தில் விரிவாக வந்துள்ள நூல் இதுவே.

இன்னும் எத்தனையோ இலக்கணக் கூறுகள் வினைச் சொல் லில் காணக்கிடக்கின்றன. இவை அடுத்து வரும் வினையியல்—2 என்ற நூலில் இடம் பெறும்.

பக். 212) (விலை ரூ. 16/-

உறுப்பினர்களுக்கு

தமிழ் இலக்கணம், மொழியியல் தொடர்பான ஆய்வுக் கட்டுரைகள் மொழியியலில் வெளியிடுவதற்கு அனுப்ப வேண்டுகிறோம். கட்டுரையாளர்களுக்கு இருபத்தைந்து படிகள் (reprints) இலவசமாக வழங்கப்பெறும். கட்டுரைகளைத் தெளிவாகத் தட்டச்சு (type) செய்து இரண்டு படிகள் அனுப்புதல் வேண்டும். தங்கள் நண்பர்களையும் மொழியியல் கழக உறுப்பினர்களாக்கி மொழியியல் வளர்ச்சிக்கு உதவ வேண்டுகிறோம்.

மொழியியல் இதழ் வெளியீடு பற்றிய குறிப்பு

1. வெளியீட்டாளர் & ஆசிரியர்: டாக்டர் **ச. அகத்தியலிங்கம்,**
செயலாளர், அனைத்திந்தியத்
தமிழ் மொழியியற்கழகம்,
மொழியியல்துறை,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,
அண்ணாமலைநகர் 608002.

அச்சிட்டோர்: சிவகாமி அச்சகம்,
அண்ணாமலைநகர் 608002

மொழியியல்

தொகுதி 5 எண் 3

ஜனவரி - மார்ச் 1982

உள்ளுறை

பக்கம்

விரவுப்பெயர்கள் பால் உணர்த்தும் முறை

செ. வை. சண்முகம் 1-30

தற்சுட்டுப் பதிலிடுபெயர் நீக்கம்

ப. பத்மநாபபிள்ளை 31-34

மொழியியற் பேரறிஞர்

சு. சக்திவேல் 35-40

செயப்படுபொருள் குன்றிய/குன்றா வினைகளும் காரண வினைகளும்

H. சித்திரபுத்திரன் 41-74

தமிழகமொழிகள்-ஒரு மதிப்பீடு

V. S. விஜயேந்திரபாஸ் 75-86

'சூரசம்ஹாரம்' நாவலில் காணும் இலங்கைத்தமிழ்

சா. வளவன் 87-98

வினையாக்கிகள்

ஆ. கார்த்திகேயன் 99-108